සෙන්තනල්
SENTHANAL
செந்தணல்

தணல் 2 கனல் 24 2004 ஜுன் 26 - ஜுலை 10 16/=

# சமாதானப் பேச்சுவார்த்தைகளை அண்மையில் ஆரம்பிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லையா?






## தமிழ் ஊனமாகிறது

## இலங்கைத் தமிழர் எதிரி, இந்தியாவை அனுசரணைக்கழைப்பது ஏன் (பக்-9)



## பாராளுமன்றத்தில்.... மக்கள் கருத்துக்கள் [பக்-10]



## ஊடகவியலாளர்கள் மதுப்போத்தல்களுக்குள் அடங்கிவிடுவார்களா?



## வீரப்பன் விடயத்தில் புதிய திருப்பம்



## சர்வதேச தரத்திற்கு இளம் தமிழ் பாடகர்கள் இல்லையா...?

– கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்



# இந்திய அணியில் புதிய சிக்கல்

## சைவ நற்சிந்தனை

# உண்மையான ஆனந்தம்

"உடல் ஒரு கருவி
மனம் ஒரு மார்க்கம்"

உடலின் சுகத்திலும் மனதின் கனவு- களிலும், கற்பனைகளிலும் நாம் ஆனந் திக்கிறோம். இது ஆழமற்றது. மேலோட் டமானது என்பதை நாம் அறிந்தோ மில்லை. உண்மையான ஆனந்தம், நிலையான பேரானந்தம் ஆத்மாதான் இருக்கிறது. அதை நாம் எப்போது அறியப் போகிறோம். அறிந்து அனுபவிக்கப் போகிறோம்.

எப்படி இருக்கிறீர்கள்? என்றால் நன் றாயிருக்கிறேன் என்று கூறுகிறோம். நாம் உடலையா, உள்ளத்தையா சொல்கிறோம். அதற்கும் மேலனதாய் ஆத்மா என்ற ஒன்றிருப்பதை மறந்து விடுகிறோம் ஒருவரிடம் நான் உன்னை விரும் புகிறேன் என்றால் இங்கு உடலையா? உள்ளத்தையா? அல்லது அதற்கும் மேலாய் உள்ள ஆத்மாவையா? எதை நாம் விரும்புகின்றோம் என்று எப் போதாவது சிந்திக்கின்றோமா?

நாம் ஒவ்வொருவரும் இதை கருத் திற் கொண்டு செயற்படுவோமானால் எப் பொழுதும் எந்த வேளையிலும் சஞ் சலமற்ற தடுமாற்றமில்லாத நிலையான ஆனந்தத்தையும், அமைதியையும் நாம் காணலாம்.

கிருஷ்ணா ஜெயம்.

## கிறிஸ்தவ நற்சிந்தனை

# செபிப்பது எப்படி?

சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து செபியுங்கள் என்றருளின இறை யேசுவின் வார்த்தைகளில் பொதிந்துள்ள கருத்து எத்தனைபேர் மனங்களில் நின்று நிலைத்திருக்கிறது. எப்போது `மனிதமனம் பலவீன- மடையும் அவனை வீழ்த்தலாம் என ஒரு சந்தர்பத்தை எதிர்பார்த்து காத் திருக்கும் சாத்தானின் வலையில் சிக் கிவிடாமல் காக்க எமக்குக் கற்றுத்தந்த யேசு பரமபிதாவிடம் நாம் எப்படி செபிக்கவேண்டும் எனவும் சொல்லித் தந்திருக்கிறார்.

இன்று ஆலயங்களிலும் பாடசாலை மற்றும் செபிக்கும் கூட்டங்களிலும் பெரும்பாலான பிள்ளைகள் பரலோக மந்திரத்தை உணர்ந்து சொல்லப்பட் டிருக்கிறதென்று திருப்பிக்கேட்டால் சொல்லத் தெரியாது அதுமட்டுமல்லாது (பிதா,சுதன்,பரிசுத்தஆவி) பரம திரித்துவ அடையாளத்தை நெற்றியிலிடும்போது ஒற்றை விரலால், அதாவது சுட்டு விரலால் கடவுளே கவனமாயிரும் என் பது போல் அடையாளமிடுகிறார்கள். இதைப்பெற்றோரும் திருத்துவதில்லை. பெரியோர்களும் கண்டுகொள்வதாயில்லை.

செபிப்பது என்பது ஏதோ கட்டாயக் கடமைக்காக மட்டும் தான் என்று வாய் ப்பாடு போல ஓதிவிட்டு ஓடிவிடுகிறார் கள். பிள்ளைகள் வரப்போகும் தீர் வையிலிருந்து தப்பிக்க இறைவனின் செம்மறிகளாக செபதபம் நமக்கோர் ஆயுதம் என்பதை பலர் மறந்து விடுகிறார்கள். ஆகவே கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாம் நாட்டில் நிலவும் தீயசக்திகள் மங்கிமறைய இ றைவனிடம் உருக்கமாக செபிப்பதோடு செபத்தின் வல்லமையை உணர்ந்து தக் க மரியாதையோடும் முறையோடும் செபிப்போமாக!

A.ஜெசில்
கொழும்பு




## இஸ்லாமிய நற்சிந்தனை

"ஒரு மனிதனின் உள்ளத்தில் கடுகளவேனும் கர்வம் இருப்பின் அவன் நாளை மறுமையில் சுவர்க்கத் தில் பிரவேசிக்கமாட்டான்"
நபி(ஸல்)

அல்லாஹு ஒருவனே நம் இறைவன் அவனின் கட்டளைப்படி நாம் வாழவேண்டும். உலகின் நிலையற்ற செல்வங்களைத் தேடாமல் ஒரு வருக்கொருவர் பகையுணர்வும் காழ்ப்புணர்ச்சியோடும் தீய சிந் தனைகளை வளர்த்து உள்ளத்தை நரகத்தின் வாயிலுக்கு திறவு கோலாக் காமல் நல்லோராய் வாழவேண்டும் இஸ்லாத்தில் ஹராம் எனத் தவிர்க்கப் பட்டவையை கடுகளவேனும் நினையாது அகந்தை ஆணவங்களை விடுத்து நல்லவனாக வாழ வேண்டும்.

நபிகள் நாயகம் ஸல் அவர்களின் கூற்றுப்படி மறுமையில் சுவர்க்கத்தை ஒருவன் அடையவேண்டுமெனில் அவன் உள்ளத்தில் கர்வம் என்பது சிறிதேனும் வளர விடாமல் நல்லெண் ணங்களையே சிந்தித்து செயற்பட வேண்டும்..

மௌலவி
M.F.N.உவைஸ்
மன்னார்.

# பலூன் திருவிழா




அவுஸ்திரேலியாவின் தலைநகர் கான்பெராவில் மார்ச் 6 முதல் 15 வரை நடைபெறும்கான்பெரா பலூன் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக நெதர்லாந்திலிருந்து, கொண்டுவரப்பட்டுள் ளது வின்சென்ட் வேன் கோக்கின் ஹெட் எயார் பலூன். இதன் உயரம் 30 மீற்றர் (90 அடி) அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர் மீது பலூன் பறந்து கொண்டிருக் கிறது! விளையாட்டாக இருந்த பலூன் கூட திருவிழாவாக உயர்ந்துவிட்டது வியப்புத்தானே!



# பேர்னிஸ் ஓபர்லேன்ட்

## இனிக்கும் அந்த அனுபவம்

-ஈவா-



சுவிட்சர்லாந்தின் 23 மாகாணங்களில் ஒன்றுதான் பேர்னிஸ் ஓபர்லேன்ட்.

இதன் சிறப்புக்களைச் சொற்களில் அடக்கிடமுடியாது, இந்த நகரில் கிடைக் காத இன்பங்களே இல்லை எனலாம்.

ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளும் இதனுடன் ரயில் மூலம் இணைக்கப்பட் டுள்ளன. சுவிஸ்பாஸ் மூலம் ஒரு மாதம் முழுக்க ரயில் டிராம் அல்லது பேருந்தில் எந்த வரையறையும்இல்லாமல் பயணிக் கலாம்.

1848முதல் சுவிட்சர்லாந்தின் தலைநகராக இருந்துவரும் பேர்ன். ஒரு சர்வதேச சுற் றுலா நகரமாகும். பெரு நகரங்கள் எதிலும் கிடைக்காத மாசுபடாத காற்றை இங்கு மட் டுமே சுவாசிக்க முடியும். நவீன வசதிகள் பெருகிவிட்ட நிலையிலும் தன் புரதான சிறப்பை இழக்காமல் உள்ளது பேர்னிஸ். ஐரோப்பிய நகரங்களிலேயே பெண்களுக் கு மிகவும் பாதுகாப்பான நகரம் பேர்னிஸ் தான். அப்படியும் யாராவது பெண்களை "ஈவ்டீசிங்" செய்தால் லீவ் மி அலோன்" என்று கத்தினால் போதும் உடனே பறந்து விடுவார்கள்.



சுவிட்சர்லாந்து பாராளுமன்றம்.

பச்சை நிறமாடங்கள் உள்ள மிகப் பெரிய அரண்மனைதான் சுவிட்சர்லாந்து பாராளுமன்றம். எந்த இடத்திலிருந்து பார் த்தாலும் இந்த மாடங்கள் தெரியும், என் பது தான் இந்த இடத்தின் தனிச் சிறப்பு. சுவிட்சர்லாந்தில் இலவசமாகச் சுற்றிப் பார் க்க அனுமதிக்கப்படும் பல இடங்களில் இ துவும் ஒன்று.

இந்த அரண்மனை ஓர் அழகிய கலைக் கூடம் போன்று நுணுக்கமான சிற்பங்கள் மற்றும் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட் டுள்ளது. நாட்டின் முக்கிய நிகழ்வுகள் மற் றும் வரலாற்று உண்மைகளை இவை பிரதிபலிக்கின்றன. 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த "மிடிவல் மாஸ்டர்" தேவாலயம் பயணிகள் பார்க்க வேண்டிய இடமாகும் பேர்னிஸில் உள்ள தேவாலயங்களிலேயே இது தான் அதிக உயரமுடையது.



பார்க்க வேண்டிய இடங்கள்
இண்டர் லோகனில் இருந்து ரயில் மூலம் லாட்டெர்ப் ரூனென் செல்ல வேண்டும். இ ங்கிருந்து 876ஆ உயரத்தில் இ ருக்கும் ஸ்டி ஷெல்பெர்க்

போகும் பாதைமிகவும் ரம்மியமான காட் சிகளைக் கொண்டது. விசில்தான் என் னுமிடத்தில் அமைந்துள்ள மிஸ்க் லோரியா ரெஸ்டாரண்ட் இங்கிருந்து கொண்டு அதைச்சுற்றியுள்ள சூழலையும், மலைச் சிகரங்களையும் உணவை சுவைத்துக் கொண்டே ரசிக்கலாம்.

பேருந்து மூலம் லட்டு டெர்ப்ரூனுக்கு திரும்பும் வழியில் ட்ரூமெல்பேர் நீர் வீழ்ச் சி அமைந்துள்ளது. அடுக்கடுக்கான 10 பனிமலைச் சிகரங்களிலிருந்து நொடிக்கு 20,000 லீட்டர் தண்ணீர் வீழ்ச்சியாகப் பாய் கிறது.

இப்பள்ளத்தாக்கில் பல சிறப்பம்சங்கள் உண்டு, 17ம் நூற்றாண்டில் இங்கு பாபின் லேஸ் எனப்படும் குடிசைத் தொழில் பிரபலமானது. பணக்காரர்களின் உள் ளாடை அலங்கரிப்பிற்கு பிரசித்திபெற்ற இ ந்த தொழில் 19ம் நூற்றாண்டில் மறைந்து விட்டது. தற்போது மெல்ல மெல்லத் துளிர் த்து வருகிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க துண்கோட்டை 1429 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும்.



இங்கு புராதன நாணயங்கள், வீட்டுச் சாமான்கள் விவசாயக் கருவிகள், பொம் மைகள் போன்ற கலைப் பொக்கிசங் களைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன் றும் உள்ளது. இக்கோட்டையிலிருந்து அல் ப்ஸ் மலையைப் பார்ப்பதே மிகவும் வித் தியாசமான அனுபவம்.

ஒகஸ்ட் மாதத்தில் இங்கு திருவிழாக் கொண்டாடப்படுகிறது. அப்போது கிளாசிகல், ஜாஸ், பங்க் என நரம்புகளைச் சுண்டியிழுக்கும் இசைகளைக்




கேட்டு மகிழலாம். இங்கு மத்தாப்பு வாணங்கள் விண்ணில் பூமழை பொழி- வதும் நட்சத்திரங்கள் மற்றும் விளக் குகளை உதிர்ப்பது போல வர்ண வித் தைகளைச் செய்வதும் நம் கண்களை விட்டு என்றுமே நீங்காது. கோடைக்காலம் முழுவதும் சிறந்த முறையில் கழிக்க ஒபர் லேனட் போகலாம். கெய்சினில் உள்ள பால் வளப் பொருட்கள் அருங்காட்சியகம் (சீஸ் பள்ளத்தாக்கு சுற்றலாப்பயணிகட்கு அறிவு பூர்வமான தகவல்களைத்தரும்.

# மன்னாரில் கண்ணிவெடி அகற்றும் பணி

(மன்னார் நிருபர்)

சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் (FSD) மன்னார் மாவட்டத்தில் இது வரை 196 கிராமங்களில் 135855 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகளை அகற்றி மக்கள் மீளக் குடியமர வழி செய்துள்ளனர் மன்னார் மாவட்டத்தில் சுமார் 40 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் FSD நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் வவுனியா மாவட்டத்திலும் தனது பணியை முன்னெடுத்துச் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இப்பணிக்கு உதவ ஜப்பான் 18 இலட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது இது போல் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக அமெரிக்காவும், ஒரு தொகுதி மிகவும் பயிற்றப்பட்ட நாய்களை வழங்கியுள்ளது.

இதன் மூலம் நாய்கள் கண்ணிவெடி இருக்கும் பகுதிகளை மோப்பம் பிடித்து கண்ணிவெடி அகற்றும் குழுவினருக்கு உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச ஊடகங்கள் போர்க்கால மனோநிலையில் செயற்படுகிறது. மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் குற்றச்சாட்டு

போர் நடைபெற்ற காலத்தில் அரச ஊடகங்கள் எவ்வாறு பொய் வதந்திகளையும் செய்திகளையும் பரப்பினவோ அதேபோல் தற்போதும் செயற்பட்டு வருகின்றன என்று சிறப்புத் தளபதி ரமேஷ் கூறியுள்ளார்.

தொப்பிலகல காட்டுப் பகுதியில் கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகளுக்கிடையில் மோதல்கள் நடைபெற்று வருவதாக அரச ஊடகங்கள் பொய் வதந்திகளைப் பரப்பியது. அதில் எந்த வித உண்மையும் இல்லை. மக்கள் உண்மை நிலையறிந்து செயற்பட வேண்டும் எனக் கூறிய ரமேஸ் அரச ஊடகங்களோடு சேர்ந்து வேறு சில ஊடகங்களும் இவ்வாறான செய்திகளைப் பரப்புகின்றன. ஏன் இவ்வாறு செயற்படுகின்றன என்று விளங்கவில்லை. இவ்வாறான பொய்ப்பிரசாரங்களை வெளியிடும் ஊடகங்கள் எனவும் (ரமேஷ் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.)

**கருணாவின் போக்கில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது:-**

மட்டக்களப்பிலிருந்து கருணாவோடு தப்பிச் சென்ற நான்கு பெண் உறுப்பினர்கள் தங்களுடன் வந்து இணைந்துள்ளதாக குறிப்பிட்டார் ரமேஷ். அவர்களில் ஒருவரான முன்னாள் மகளிர் அணிப் பொறுப்பாளர் நிலாவினி ஊடகவியலாளருடன் சந்திப்பில் குறிப்பிடும்போது,

கருணாவின் போக்கில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டது. தனது சுயநலனுக்காகவே செயற்படுகின்றனர் என்பதை அறிந்து அவரை விட்டு வலகி வந்தோம். எனவே குறிப்பிட்ட நிலாவினி, ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா தங்களை கொழும்புக்கு அழைத்து வந்து ஹில்டன் ஹோட்டலில் தங்க வைத்ததாகவும். டக்ளஸ் தேவானந்தாவுடன் கருணா பேச்சு நடத்தியதாகவும் கூறியார்.

மேலும் கருணாவுடன் நாங்கள் நான்குபேர் எங்களுடன் 17 ஆண் போராளிகளும் மாபிலவட்டவாகன் ஊடாக புலிபாஞ்ச பாலம் வரை சென்று அங்கிருந்து கொழும்பு றோட் வரைக்கும் சென்றோம்.

அங்கே கருணா தொடர்பினை ஏற்படுத்திய அலிசாகிர் மௌலானா எங்களை வரச் சொன்னார். அவரோடு ஒரு பொலிஸ் காரரும் வந்து எங்களைக் கூட்டிச் சென்று ஏப்ரல் 12ம் திகதி முதல் 15ம் திகதிவரை கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் தங்கி வைத்தனர்.

(தொடர்ச்சி 21ம் பக்கத்தில்.....)

# கதிர்காம ஆடிவேல் உற்சவம் ஜுலை 17 ஆரம்பம்

(பண்டாரவளை)

கதிர்காம வருடாந்த ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜுலை 17ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் 1 ந் திகதி நீர் வெட்டுடன் நிறைவு பெறும். உற்சவ காலத்தில் கதிர்காமத்திற்கு வரும் லட்சக்கணக்கான யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் 1200 க்கும் மேற்பட்ட பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். யாத்திரீகர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கவும் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கையையும் சுகாதார திணைக்களம் மேற்கொள்ளும். இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை முக்கிய நகரங்களிலிருந்து விசேட பஸ் சேவைகளை நடாத்தவுள்ளது.

கதிர்காம புனித நகர் பிரதேசத்தில் ஆங்காங்கே இருக்கும் யாசகர்களை ஒரே இடத்தில் அமரச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். என கதிர்காம உற்சவ ஏற்பாட்டுக்குழுத் தலைவரும் மொனறாகல மாவட்ட அரசாங்க அதிபருமான ஜீ.எஸ்.எதிரிவீர ஏற்பாடு செய்து வருகிறார்.

# 182 பஸ் வண்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளது பண்டாரவளையில்

ஊவாபிராந்திய போக்குவரத்துக்க பம்பனியைச் சேர்ந்த எட்டுபஸ் டிப்போக்களில் 182 பஸ் வண்டிகள் திருத்தப்படாமல் ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ளது. இதனால் பஸ்டிப்போக்களின் வருமானம் குறைந்துள்ளதோடு பிரயாணிகளும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக ஊவா பஸ் கம்பனியின் புதிய தலைவர் ஆர் டபிள்யு.எம்.விஜேறட்ன கூறியுள்ளார்.

பதுளை டிப்போவில் 31 பஸ்வண்டிகளும் பண்டாரவளை டிப்போவில் 14 பஸ்வண்டிகளும் கெப்பிட்டிப்பொல டிப்போவில் 24 பஸ்வண்டிகளும் பிபில டிப்போவில் 32 பஸ்வண்டிகளும் மகியங்கனை டிப்போவில் 13 பஸ்வண்டிகளும் வெள்ளவாய டிப்போவில் 14 பஸ்வண்டிகளும் தெகியடிகண்டிய டிப்போவில் 11 பஸ்வண்டிகளும் ஒதுக்கிய நிலையில் உள்ளன.

# 7வயது சிறுமி மீது பாலியல் சேஷ்டை புரிந்தவர்கள் கைது

கந்தப்பளை பகுதியில் 7வயது சிறுமி மீது பாலியல் சேட்டை புரிந்த குற்றச்சாட்டின் பேரில் பாடசாலை வான் ஒன்றின் உதவியாளரையும் அதற்கு உடந்தையாக செயற்பட்ட வானின் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் இருவரும் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது. நீதவான் சம்பத்.பி.அபயகோன் வானின் உதவியாளரான தெல்லே பிரதீப் குமார என்பவரை 28ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் வான் சாரதியான எம். சமிந்த ரூவான்குமார என்பவரை ஐயாயிரம் ரூபா சரீர பிணையில் விடுத்துள்ளது.

இச்சிறுமி நுவரெலியாவில் அமைந்துள்ள பாடசாலையொன்றுக்குச் சென்றுவிட்டு தனது வதிவிடமான கந்தப்பளை பகுதிக்கு பாடசாலை வானில் திரும்புகையில் வானின் உதவியாளர் இச்சிறுமி மீது பாலியல் சேட்டை புரிந்துள்ளார்.

இச்சிறுமி பெற்றோரிடம் இது தொடர்பாக முறையிட்டதையடுத்து பெற்றோர் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து பொலிஸார்வானின் உதவியாளருக்கு வலை விரித்தனர் வானின் சாரதி, உதவியாளருக்கு தஞ்சம் அளித்ததால் இருவரையும் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர். சந்தேக நபர்களின் சார்பில் சட்டத்தரணி பி.இராஜதுரை ஆஜரானார். பாதிக்கப்பட்ட சிறுமி நுவரெலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் 5ம் ஆண்டு புலமைப்பரிசில்

(மன்னார் நிருபர்)

ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை பரீட்சைத் திணைக்களம் மேற்கொள்வதாக கடந்த 07-06-2004 அன்று மாவட்டங்களுக்குப்பொறுப்பான கல்விப்பணிப்பாளர்களுடனான கூட்டத்தில் பரீட்சை ஆணையாளர் மேற்படி தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இம்முறை மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார் கல்வி வலயத்தில் 12223 மாணவர்களும், மடு வலயத்தில் 281 மாணவர்களுமாக மொத்தம் 1504 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளார்கள்.

இப்பரீட்சைகள் மன்னார் கல்வி வலயத்தில் 14 பரீட்சை நிலையங்களிலும் மடு கல்வி வலயத்தில் 6 பரீட்சை நிலையங்களிலும் மொத்தம் 20 பரீட்சை நிலையங்களில் நடாத்தப்பட இருக்கின்றன.

இவ் இருபது பரீட்சை நிலையங்களுக்கும் மன்னாரில் 10ம் மடுவில் 3 மாக 13 இணைப்பு நிலையங்கள் செயற்பட இருப்பதாகவும் இதற்காக மன்னார் மாவட்டத்தில் 160 ஊழியர்கள் கடமைகளில் அமர்த்தப்படவுள்ளதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். ஆபேல் றெவல் தெரிவித்தார்.

# மத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு கடும் போட்டி

மத்திய மாகாணசபைத் தேர்தலில் நால்வர் முதலமைச்சர் பதவிக்கு பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் முன்னாள் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சரும் மத்திய மாகாண சபை முதலமைச்சருமான நந்திமித்ர ஏக்கநாயக்க, தானே அடுத்த மாகாண சபையில் முதலமைச்சராவேன் என பல மேடைகளிலும் மேலும் பேசி வருகின்றனர்.

இதேவேளை முன்னாள் முதலமைச்சரான வசந்த அலுவிகாரவும் தானே அடுத்த மத்திய மாகாண சபையிலும் முத்லமைச்சராவேன் என பேசி வருகின்றார். இத்துடன் இ.தொ.காவும் தமக்கே முதலமைச்சர் பதவி என்ற ரீதியில் தகவல்களை கசிய விட்டுவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் முன்னாள் மததிய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க தாமே அடுத்த முதலமைச்சர் எனக் கூறி வருகின்றார். இவரே இக்கூட்டமைப்பின் கண்டி மாவட்ட முதன்மை வேட்பாளராவார்.

ஒன்பது அரசியல் கட்சிகளும் இரு சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடும் இத்தேர்தலில் மொத்தம் 363பேர் வேட்பாளர்களாக களத்தில் இறங்கியுள்ளார். ஐ.தே.மு. சார்பில் கண்டி மாவட்டத்தில் இ.தொ.கா சார்பில் 3 தமிழ் வேட்பாளர்களும் ஒரு முஸ்லீம் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை ஐ.தே.முன்னணியின் சார்பில் போட்டியிடும் மலையக மக்கள் முன்னனியின் சார்பில் முன்னாள் எம்பிஎஸ் இராஜரட்ணம் போட்டியிடுகின்றார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முதலாவது மதிய மாகாண சபையில் உறுப்பினராக இருந்த டபிள்யூ.ரட்ணம் போட்டியிடுகின்றார்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் நல்ல எதிர்காலத்தை உருவாக்குவோம்

## - மனோ கணேசன்

(காவத்தை நிருபர் சிவா ஸ்ரீதரராவ்)

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் மேல்மாகாண மக்கள் முன்னணி சார்பில் போட்டி இடும் சகல வேட்பாளர்களுக்கான கூட்டமொன்று கடந்த (2004.06.18) கொழும்பு மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைமை காரியாலயததில் அதன் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் கூறியதாவது. மேல் மாகாண மக்கள் முன்னணியான எமது கட்சி முதல் முதலாக சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடுகின்றது. இதில் துடிப்புமிக்க இளம் வீரர்கள் எம்முடன் இணைந்து தேர்தல் களத்தில் இறங்கியுள்ளதையிட்டு தான் பெருமையடைகிறேன். எமது கட்சியானது ஒரு வித்தியாசமான அடிப்படை நோக்கத்திலே செயல்பட்டு வருகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் வாழும் மலையக மக்களின் அடிப்படை பிரச்சனைகள். மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகள், என்பன குறித்து தாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும். இம் மாவட்டத்தில் வாழும் தமிழர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கி கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவோம் எனவும் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில், மேல் மாகாண மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட முதன்மை வேட்பாளர் எம்.சிவக்குமா உரையாற்றும்போது கூறியதாவது:-

இரத்தினபுரி மாவட்ட தமிழர்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தை முன்வைத்தே நாங்கள் மேல் மாகாண மக்கள் முன்னணியில் இணைந்து போட்டியிடுகின்றோம். இம் மாவட்ட ஏழை தமிழர்களுக்கு சேவை செய்வதற்கு நேர்மையான தலைவர் மனோகணேசன் அவர்களை தேர்ந்தெடுத்துள்ளோம்.

எனவே நாம் அனைவரும் அவரின் அரசியல் வழியில் சென்று இரத்தினபுரி மாவட்டத்தில் மேல் மாகாண மக்கள் முன்னணியின் வெற்றியை உறுதிப்படுத்துவோம் என்றார்.

இக்கூட்டத்தில் மேல் மாகாண மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் வீ.பீ ஆனந்தன், ஆலோசகர் திருவாளர் சந்தியநார், இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# தொண்டராசிரியர் நிரந்தரமாக்கப்படுவர்

வட-கிழக்கில் சேவையாற்றிய தொண்டராசிரியர்கள் படிப்படியாக நிரந்தரமாக்கப்படுவர். முதலில் 1998 டிசம்பர் 24க்கு முன்னர் சேவையாற்றிய மூவின தொண்டராசிரியர்களும் நிரந்தரமாக்கப்படுவர்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் எல்.ஜி வசந்த பியதிஸ்ஸ, அம்பாறை வித்தியானந்த பிரிவென மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொண்டராசிரியர் நிரந்தரமாக்குவதந்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ள்தாகவும். முதலில் 1998 டிசம்பருக்கு முன் சேவையாற்றியவர்களையும், பின்னர் 1999-2000 ஆண்டுகளில் சேவையாற்றியவர்களையும் நிரந்தரமாக்கப்படுவதோடு, விடுபட்ட 45 சிங்கள மொழிமூல தொண்டராசிரியர்களுக்கும் நியமனம் விரைவில் வழங்கப்படும். விடுபட்ட 143 தமிழ் தொண்டராசியர் நியமனம் பற்றி கவனத்திற் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

செந்தணல்
"செம்மையைச் செப்புவோம்"
சூரியன் வெளியீட்டகம்
த.பெ.இல. 1601,
கொழும்பு.
தொலைபேசி : (011) 4736837, 4736838
ஆசிரியர் : (011) 4715168
தொலை நகல் : (011) 4715168

## விலைபேசப்படுகிறார்கள் ஊடகவியலாளர்கள்.

இன்று எமது நாட்டில் விலங்குகளுக்கும் அதன் உயிர்களுக்கும் இருக்கும் மதிப்பும் சுதந்திரமும் கூட மனித ஜீவன்களுக்கு இல்லை. இப்பொழுதெல்லாம் விசர் நாயைச் சுட்டுப் போடுவதென்றால் கூட முன்னறிவித்தல் கொடுத்துத் தான் செய்கிறார்கள். ஆனால் இன்று முக்கியமாக தமிழர்களின் நிலையை நோக்கினால் இன்னும் அவர்களுடைய மதிப்பை பூச்சியத்திற்குள்ளேயே வைத்திருக்கிறார்கள்.

அண்மையில் அமைச்சர் ஒருவரால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா பறக்கவில்லை என்பதற்காக அதற்கொரு விசேட விசாரணைக்குழு அமைத்து விசாரணைகள் தூள்பறக்கின்றன.

ஆனால் அண்மையில் இறந்துபோன ஊடகவியலாளர் நடேசனின் கொலைக்கு விசாரணைக்குழு அமைத்ததாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டது பின் அதைப்பற்றி எதுவிதமான தகவல்களும் இல்லை. இதுதான் நம்நாட்டு தமிழர்களின் விலை மதிப்பு இவ்வளவுதான் ஒரு ஊடகவியலாளனின் சேவை ஊடகவியலாளர் என்றால் அவர்களுக்கு ஒரு தனிப்பார்வையே உண்டு உலகநாடுகளில், அவர்களின் உயிரும் சேவைகளும் விலை கொள்ளப்பெறாதவை, யுத்த காலத்தில் கூட ஊடகவியலாளனுக்குத்தனிச் சுதந்திரம் உண்டு நம் நாட்டைப் பொறுத்தவரை இவற்றில் எதாவது ஒன்று பொருந்துகிறதா? ஏன்... நாம் அதிகம் பேசுவதால் அர்த்தம் ஒன்றுமில்லை, நாம் நாட்டில் ஊடகத்துறைக்கு அமைச்சராக நியமித்திருக்கப்பட்டுள்ளவரே ஊடகவியலாளர்களை தண்ணிய ஊத்தி மடக்கிப் பிடி எனக்கூறும் பொழுது இதற்கு மிஞ்சி நாம் என்ன கூற இருக்கிறது.

மூன்று தகவல் துறை அடங்கிய விசேடகுழுக்கூட்டம் அண்மையில் இடம் பெற்றதாகவும் அக் குழுக்கூட்டத்தில் மீண்டும் புதிய அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் அமைச்சர் தனியார்துறை ஊடகவியலாளர்களை விலைக்கு வாங்குமாறும் தெரிவித்ததாக தகவல்கள் தெரிகின்றன அத்துடன், தனியார் துறை ஊடகவியலாளர்களைக் கவர்ந்திழுப்பதற்கான மதுபான வகைகளுக்கு தாராளமாகத்தான் செலவிடத் தயாராக இருப்பதாகவும் அவர்களுக்கான உள்ளூர் உல்லாசப் பயணங்களுக்காகவும் தான் செலவிடத்தயார் எனவும் ஊடகவியலாளருக்கு தெரியப்படுத்தும் படி அறிவித்திருக்கிறாராம்.

அப்படியானால் ஊடகவியலாளர் விலை போகின்றவர்களா? தலைமைகளும் அரசியல் வாதிகளும் தமக்குச் சார்பாக ஒவ்வொரு ஊடகங்களும் செயற்பட வேண்டும் எனநினைக்கின்றார்கள் அப்படி தமக்குச் சார்பில்லாமல் அவர்களுடைய பிளைகளைக் குறைகளைச்சுட்டிக் காட்டினால், தமது விலைக்குள் அடங்காதவர்கள் என அவர்களை அழிக்க முற்படுகிறார்கள் இந்த வரிசையில் நடந்த கொலைகள்தான் நிமலராஜன், அற்புதன் நடேசன் வரிசைகள் இப்படியான சம்பவங்களை ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும், இவ்வாறான செயல்கள் இனியும் தொடராமலிருப்பதற்காகவாவது.

அன்புடன்

ஆசிரியர்.

# இடம் பெயர்ந்தோர் நலனுக்காக ஐரோப்பிய உதவித்திட்டம்.

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கொடுப்பனவுக்காக, உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் நலன்கருதி ஐரோப்பிய ஒன்றியம் இந்த உதவியினை வழங்குகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின்கீழ் மீள்குடியேற்றத்திற்காக, வடக்குகிழக்கின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் நலன்கருதி ஐரோப்பிய ஒன்றியம் ரூபா. 835 மில்லியனை வழங்குகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின்கீழ், இலங்கை அரசாங்கம், மீளத் திருப்புகின்ற ஒவ்வொருநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பத்திற்கும், அவர்களது பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு, 25,000/= ரூபாயினை வழங்குகிறது. இந்த மானியம், அவர்களது வாழ்க்கைத் தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு அவசியமான விதைகள், உரம் போன்ற அடிப்படை பொருட்களையும், உள்ளீடுகளையும் பெற்றுக் கொள்வதற்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் குடும்பங்களை இயலச்செய்வதற்கும் உத்தேசித்திருக்கிறது. கிராமிய, விவசாயம்சார் செயற்பாடுகள் மீதே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. வடக்கு - கிழக்கிலிருந்து யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த 3 இலட்சம் குடும்பங்களை அவர்களது சொந்த இடத்தில் மீளக் குடியமர்த்துவதற்கு 2400 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடு செய்யப்பட்டிருக்கிறது. நெக்கோட் திட்டத்தின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கி, 1400 மில்லியன் ரூபாவை ஏலவே வழங்கியிருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏனைய இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு இன்னும் 1000 மில்லியன் ரூபா தேவையாக இருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கம் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடல் 2004.06.15 ஆம் திகதி நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சில் நடந்தது.



ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் திருபூட்டர் வில்டன் அவர்களும், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் திரு.எம்.எஸ்.ஜயசிங்க அவர்களும் கைச்சாத்திட்ட இந்நிகழ்வில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் திரு.ஹரீம் பீரிஸ் அவர்களும், கலாநிதி குணசிங்கம், மேலதிகச் செயலாளர் குமாரதாசன், சிரேஷ்ட உதவிச் செயலாளர் செய்யத் அஹமட் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

# கண்ணிவெடியகற்ற ஜப்பான் நிதியுதவி

இலங்கையின் வடக்கு - கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வைபவம்

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை அகற்றும் செயற்பாடுகளுக்கு ஆதரவுவழங்கும் பொருட்டு ஜப்பானிய அரசாங்கம் இலங்கை அரசுக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக வழங்குகிறது.

ஜப்பானிய அரசாங்கத்தின் இலங்கைக்கான தூதுவர் அக்கியோ சுதாவும், இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் நிறவனங்களைச் சேர்ந்த திரு.போல் மெக்கின்டொஸ் - டச்சு கண்ணிவெடி அகற்றும் குழு, திரு.வலன் கும்னோவா - ஹலோ ட்ராஸ்ட், திருவதி, அபைஹைல் ஹாட்லி - கண்ணிவெடிகள் ஆலோசனைக்குழு. திரு.சுமனசேன அபேவர்ண நோர்வே மக்கள் உதவி அமைப்பு ஆகியவர்களுக்குமிடையில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

இந்த நிதியுதவியின் மூலம் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற நோர்வே மக்கள் உதவி அமைப்புக்கு 850,660 அமெரிக்கன் டொலரும். டச்சு கண்ணிவெடி அகற்றும் குழுவுக்கு 717,247 அமெரிக்க டொலரும், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்திற்கு 534,835 அமெரிக்கன் டொலரும் கண்ணிவெடிகள் ஆலோசனைக் குழுவிற்கு 481,549 அமெரிகிகன் டொலரும் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளுக்காக வழங்கப்படவுள்ளது.

இவ்வொப்பந்தம் கைச்சாத்திடல் நிகழ்வு இல 177, காலி வீதி, கொழும்பு -03 இல் (அமெரிக்கன் தூதுவராலாயத்திற்கு முன்பாக) அமைந்திருக்கும் நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2004.06.18 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்நிகழ்வு நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் திரு.எம்.எஸ்.ஜயசிங்க, பணிப்பாளர் நாயகம் திரு.ஹரிம் பிரிஸ், கண்ணிவெடிகள் செயற்பாடுகளுக்கான தேசிய வழிப்படுத்தும் குழுவின் செயலாளர். சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஏ.குணசிங்கம், சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜனாப் செய்யத் அஹமட் மற்றும் அமைச்சின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் ஆகிஅயாரின் முன்னிலையில் நடைபெற்றது.




பிரியமுள்ள செந்தணலுக்கு!

மாதம் இருமறை எம்கரங்களில் தவழும் உன்னை பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் வாசக உள்ளங்களில் நானும் ஒருவன்

நீ தாங்கிவரும் அரசியல் அலசல்களும் வரலாற்றுச் சுவடுகளும், பெண்களின் குரல்களும் இலக்கியப் படைப்புக்களும், சந்தைக்கு விருந்தான பொதுவிடயங்களோடு எம்மையும் எழுதத் தூண்டும். கவிதைகளும் கதைகளும் பரபரப்புத் தொடர்களும்ம. சிறுவனின் திறனாய்விற்கோர் களமாகவும் விளையாட்டுப்பிரியர்களையும் வஞ்சிக்காமல் நீ உன் ஆற்றலில் தேடித் தேடி வாசிக்கும் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளாய் ஒவ்வொர் வாரமும் நீ வரவேண்டும் என பல நெஞ்சங்கள் காத்திருக்கின்றன. அத்தோடு ஆசிரியர்க்குஓர் வேண்டுகோள் உங்கள் அட்டைப்பக்கத்தில் நிறைய விடயங்களை அதாவது உள்ளிருக்கும் அம்சங்களை சின்னத்தலையங்கங்களாகப் போட்டால் இன்னும் பல வாசகரை உங்கள் செந்தமாக்கி கொள்ளலாம் என்பது எனது அபிப்பிராயம்

இன்னும் பல விடயங்கள் சுமந்து நீடுவளர்ந்து சிறப்புற வாழ்த்துவதோடு முதலாம் ஆண்டு நிறைவுக்கான எனது பிறந்த நாள் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

எஸ்.அந்தோனிமுத்து குருஸ்
தலைமன்னார்.

ஓராண்டில் காலடி பதித்து பூரித்து நிற்கும் செந்தணலே

நீ உன் பணியைச்சுமந்து திறன்பட ஆற்றி நாட்டிற்கு நலன் பயக்க வேண்டுகிறோம்.

மேலும் செந்தணலே - நீ தேடித் தேடிச் சேவை செய்கிறாய் ஆனால் எமது ஊரில் இருக்கும் குறைகளையும் கேட்க மாட்டாயா?

எமது ஊரிலே கசிப்புத் தொல்லை அதிகமாகி விட்டது. சிறிது சிறிதாக இருந்து இப்பொழுது அதிகரித்துவிட்டது. ஊரிலேயே காச்ச ஆரம்பித்துவிட்டார்கள். இங்கு ஒவ்வொரு குடும்பங்களிலும் சண்டை இரவானால் மனிசிக்கு அடிப்பது குழந்தைகளைப் படிக்கவிடாமல் துன்புறுத்துவது என ஒரே பிரச்சனை இப்பொழுது இந்த கசிப்பு சிறு பொடியலுக்கும் தாவி விட்டது. சிலபேர் கசிப்பால் ஊரையே கெடுத்து விடுவார்கள் போல இருக்கு

தயவு செய்து உன் சேவையை எமது கிராமப்பக்கமும் திருப்பி குறிப்பிட்ட இந்த பழக்கத்தால் மக்கள் படும் பாட்டை உரியவர்கள் அறியும் படி செய்து எமது கிராம இளைய சமுதாயத்தைக் காப்பாற்று.

கிராம நலன் விரும்பும்
உன் வாசகன், வவுனியா

கர்த்தராகிய இயேசு
நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக

என் உள்ளத்தை கொள்ளை கொண்ட அன்பான செந்தணலே நீ என்றும் உயர்ந்து நிற்க எனது மனபூர்வமான வாழ்த்துக்கள் சுமந்துவரும் ஒவ்வொரு அம்சங்களும் உள்ளத்தை பறிக்கின்றன. நீ சுமக்கும் அம்சங்களில் எனது ஆக்கங்களையும் ஏற்றுக்கொள்வாயா? இது எனது நீண்ட நாள் ஆசை நிறைவேற்றுவாயா?

சபைசு.ரூப்பா
சென்மாகரட்ஸ்தோட்டம், உடப்புஸ்சல்லாவ



# மீண்டும் நாம் ஏமாற்றப்பட்டுவிடுவோமா? வடகிழக்கு முஸ்லீம்கள்

எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கின்ற இந்நாட்டின் சமாதானச் செயற்பாடுகளில் முஸ்லீம்களின் நலன் கருதி அவர்களுக்குத் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதற்கான உத்தரவாதத்தை இன்றைய அரசு கொடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் முஸ்லிம் அரசியற்தலைமைகள் தமது அமைச்சுப் பதவிகள், பாராளுமன்ற பதவிகளை கவனத்திற் கொள்ளாமல் முஸ்லிம்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறைச் சங்கத்தின் தலைவர் ஜனாப் ஜே.நிலாம்தீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கின்றபோது. முஸ்லிம்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை, இன்று ஆட்சி செய்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்படுத்தித் தரும் என்ற நம்பிக்கை வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களிடையே இருந்தது. இருந்தாலும் நடைபெறவிருக்கின்ற பேச்சுவார்த்தையில் அரசாங்கத் தரப்பும், விடுதலைப்புலிகளுமே பங்குபற்றும் என்று அண்மையில் சுதந்திர முன்னணி தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையையடுத்து, மீண்டும் தாம் ஏமாற்றப்பட்டு விடுவோமா? என்ற அச்சமும், பீதியும் வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கிடையே ஏற்பட்டிருக்கிறது.

இந்த நாட்டின் இனப்பிரச்சனையானது வடகிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்களை அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ யுத்தத்தின் பிடிக்குள் உட்படுத்தியிருக்கின்றது. இதன்மூலம் முஸ்லீம்கள் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், பல கோடிக்கணக்கான சொத்துக்களையும் இழந்ததுடன் பலலட்சக்கணக்கான முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்டும் இருக்கின்றார்கள்.

எனவே, இவர்களது நியாயமான உரிமைகளையும். இருப்பையும் உறுதி செய்வது இந்த அரசினது முக்கிய பொறுப்பாகும். இருந்தபோதும் கடந்த சமாதானப்பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டும் முஸ்லீம்களது தனித்தரப்பு கோரிக்கை நிராகரிக்க ப்பட்டும், முஸ்லிம் அரசியற் தலைமைத் துவங்களை பலவீனமாக்கி பெரும்பான்மைக்கட்சி ஆதிக்கத்துக்குள் உள்வாங் குகின்ற கோட்பாடுகளை கடந்த அரசு மேற்கொண்டது, முஸ்லீம்களால் மறக்க முடியாத யாதார்த்தமாகும்.

முஸ்லீம்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் முஸ்லீம்கள் சாத்வீக போராட்டத்திற்கு எப்போதும் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே, முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி இடம்பெறவிருக்கின்றசமா தானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனவும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

சலீம் றமீஸ்

# பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

-மன்னார் நிருபர்-

வடக்கில் ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர். இவர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை வடக்குமாவட்டங்களிலேயே நடாத் தப்பட இருப்பதாக பரீட்சை ஆணையாளர்தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியாக பரீட்சைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம், பரீட்சை ஆணையாளரது திணைக்களத்தில் கடந்த 07-06-2004 அன்று நடைபெற்றது இக்கூடட்டத்திலேயே மேற்படி தகவல்களை ஆணையாளர் தெரிவித்திருக்கின்றார்.

எதிர்வரும் ஜுலை மாத இறுதியில் மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் இதற்காக 32,000 பேர் தோற்றவுள்ளனர். ஏற்கனவே இப்பரீட்சை கொழும்பில் நடாத்துவதாக அறிவிக்கப்படட்டிருக்கிறது எனினும் அரசியல் தலையீடுகளாலேயே பரீட்சை வடக்கில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக ஆணையாளர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் 20 பரீட்சை நிலையங்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆபேல் றெவல் தெரிவித்தார்.

# வடக்கில் மீளக் குடியமர்வோர்க்கு 25000 ரூபா வழங்கப்படும்

வடக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 835 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது

கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சில் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் ஆட்ர் வில்சன் தெரிவித்துள்ளார் அத்துடன் இத்தொகை முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 25,000/= ரூபா வீதம் வழங்கப்படும் இதன் மூலம் பொருளாதார செயற்பாடுகளை மீள உருவாக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குப்பகுதிகளில் கடந்த இருபது வருடகாலயுத்த காலத்தில் சுமார் 2,27,000பேருக்கு மேல் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர் என்றும், இவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டு அவர்கள் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 25,000/= ரூபா வீதம் இதுவரை 76,650 குடும்பங்களுக்கு உலகவங்கியினதும் நெதர்லாந்து அரசினதும் உதவியுடனும் வழங்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# தியாகதீபம் திலீபன் மருத்துவமனை

## 1ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சே.தங்கன் ஆற்றிய உரை

-ச.மயூரன்-

தேசியத் தலைவரின் கீழ் ஒருமித்து செயற்படுவோமானால் எங்கள் தேசத்தின் சுதந்திரத்தை மிக விரைவாகப் பெற்றுவிடமுடியும்.

திலீபன் மருத்துவ சேவை நிலையங்களும். இந்த நிலையத்தினூடான எங்கள் மக்களுடைய அன்றாட ஒரு ஆரோக்கிய நலன்களே. அவர்கள் நலன்களோடு எமது தேசத்தில் வாழ்ந்து கொள்ள வேண்டும். என்கின்ற எதிர்பார்ப்பினை எங்கள் போராளிகள் நிறைவு செய்து வருகின்றார்கள். எங்கள் போராளிகளோடு இணைந்து. ஒவ்வொரு திலீபன் மருத்துவ மனைகளும். மக்களும் அவை சார்ந்த நிர்வாகக் குழுக்களும் தம்மை அர்ப்பணித்து, இந்த திலீபன் மருத்துவ மனையினுடைய சேவைக் காகவும் அந்த தேச மக்களுடைய நலனுக்காகவும் உழைக்கின்ற பாரிய பொறுப்போடு இணைந்து செயற்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகவே இன்றைய நிகழ்வும் அமையும். இந்தப் பிரதேசத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்து மக்களும். அனைத்துப் பெரியோர்களும் அந்தத்

இந்த திலீபன் மருத்துவ சேவையானது. நீண்ட காலங்களுக்குமுன்னர் எங்களுடைய தேசியத் தலைவருடைய எதிர்பார்ப்பில் உருவாக்கப்பட்ட மருத்துவ மனைகள். இந்த மருத்துவ மனையிலே மருத்துவ சேவையினை புரிந்துகொண்டிருக்கும் போராளிகள் கடந்த காலப்பகுதியிலே களமருத்துவப் போராளிகளாக, களத்தில் போராடிய எங்கள் பிள்ளைகளின் உயிர்களைக் காக்கின்ற பணியினைச் செய்த மருத்துவப் போராளிகளாக, அந்த களமுனையில் நின்று செயற்பட்ட வர்களைத்தான் எங்கள் தேசியத் தலைவர் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் ஊடாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். என்கின்ற எதிர்பார்ப்போடு இங்கே அனுப்பியுள்ளார்.

எங்கள் போராளிகள் களமுனையில் ஆயுதத்தோடு நின்று எதிரிக்கு எதிராக அன்று தாக்குதலைப் புரிந்து வரலாறு படைத்த காலப்பகுதியிலும். களமுனையிலே மருத்துவக் கல்விகளோடும். அதன் மருந்துகளோடும் நின்று இந்த உயிர்காக்

> **இன்று நடந்து கொண்டிருக்கின்ற சமாதான அரசியற் போர் என்றென்றும் எங்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வினை எட்டித்தராது என்பதினை நாங்கள் எல்லோரும் எங்கள் உள்ளத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.**

திலீபன் மருத்துவ மனை நிர்வாகக் குழுவினரும் இணைந்து இந்த இன்றைய ஆண்டு நிறைவு விழாவினை மிகவும் சிறப்பாக சந்தோசமாக கொண்டாடுகின்ற நிகழ்வைப் பார்க்கின்ற போது மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

எங்களுடைய தேசியத்தலைவர் எதிர்பார்த்த அந்த எண்ணத்தினை இந்த மருத்துவப் போராளிகள் எங்கள் மக்களோடு ஒன்றிணைந்து. தமது பணியை முழுமையாக ஆற்றி இந்த நிலையம் ஓராண்டை நிறைவு செய்திருக்கின்றபோது, இந்த மக்களுடைய உடல் ஆரோக்கியத்தை முழுமையாகக் கொண்டு இந்த நிலையத்தினுடைய சேவைகள் மேலும் மேலும் தொடர வேண்டும் என்பதை இந்த இடத்தில் வாழ்த்த நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். எனவே

கின்ற பெரிய பணியினைபுரிந்த வர்கள் தியாக தீபம் மருத்துவ மனைகளில் இருக்கின்ற மருத்துவப் போராளிகளே. அந்த போராளிகளுடைய உயிர்களைக் காத்து அந்த உயிர்காக்கும் பணியினை பொறுப்பெடுத்து செய்த போராளிகளே இன்று மக்களுக்கு இந்தப் பணியைச் செய்ய நியமிக்கப்பட்டி ருக்கின்றார்கள்.

இந்த திலீபன் மருத்துவ மனையானது மேலும் மேலும் பல கிராமங்களில் உருவாகவேண்டும் என்ற எங்கள் தேசியத் தலைவருடைய எண்ணத்தினை, நிறைவு செய்கின்ற வகையிலே இப்பொழுதும் படையணியில் இருந்தமருத்துவம் சார்ந்த போராளிகள் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள் இந்த தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையை இன்னும் பல

கிராமங்களில் உருவாக்குவதற்கான நடவடிக் கைகளை நாங்கள் மேற்கொண்டு இருக்கின் றோம். எனவே இந்த மருத்துவ சேவை யானது எங்கள் மக்களுடைய நல்ல எதிர்கால வாழ்வுக்காக தம்மை அர்பணித்து செயற்படுத்துகின்ற பணியை மேலும் மேலும் வளர்த்துச் செல்லும் என்பதினை உங்களுக்கு அன்புடன் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்கு ஒன்றினைக் கூறிவைக்க விரும்புகின்றோம். என்றென்றும் எமது இனம் ஒரு பலம் மிக்க இனமாக, இந்த தேசத்தில் திகழ்ந்தால் மட்டுமே எந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளோ. தொடர்புகளோ, அவர்களுடைய உதவிகளோ. இந்த விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப்புலிகளும், மக்களும் நாங்களும் இந்த தேசத்தின் பலமாக இருப்போமானால் எமது என்னும் எங்கள் பக்கம் மீது தமது பார்வையைத் திருப்புவார்கள்.

ஒன்றாக இருந்தாலும்எங்கள் பக்கம் தமது நடவடிக்கைகளை நடாத்துவார்கள், பலம் இன்றிநாம் மீண்டும் இந்த தேசத்தை பறிகொடுத்துவிட முடியாது. பலமின்றிநாம் எமது இனத்தை அழிக்கின்ற இந்த சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு எதிர் கொடுக்க முடியாது. பலமின்றிநாம் சர்வதேச சமூகங்களின் அழுத்தத்தினை பெற முடியாது. நாங்கள் பலமாக இருந்துவரும் தடைகளுக்கு முகம் கொடுத்து, எங்கள் தேசியத் தலைவருடைய கரத்தினைப் பலப்படுத்தி இந்த தேசத்தின் வளத்தினை மீண்டும் மீண்டும் பறைசாற்றிக் கொள்வோமானால் எங்களுடைய இந்த தேசத்தினுடைய விடுதலை மிக விரைவாக எங்கள் கரங்களை வந்தடையும் என்பதனை, இந்த இடத்திலே இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்கு அன்போடு கூறிவைக்க விரும்புகின்றோம்.

இன்று நடந்து கொண்டிருக்கின்ற சமாதான அரசியற் போர் என்றென்றும் எங்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வினை எட்டித்தராது என்பதினை நாங்கள் எல்லோரும் எங்கள் உள்ளத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எமது அரசினை நாம்தான் பெற வேண்டும். எமது இன்றைய தேவைக்காக நாங்கள் இந்தத் தேசத்தை ஒரு தலைமையின்கீழ் ஒரு பலமான சக்தியாக நாங்கள் அணிதிரள வேண்டும், அணிதிரண்டு இருக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டினை, எங்கள் மக்ளாகிய நீங்கள் உள்ளத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று இருக்கின்ற சந்திரிக்கா தலைமையிலான அரசும் அன்றையகாலப்பகுதியில் இந்த தமிழ் இனத்தை அழிக்கின்ற ஒரு பாரிய பெரும் போரை இந்த தேசத்தில் நிகழ்த்திய தலைமையே இன்றும் அரசியலில் அமர்ந்திருக்கின்றது. இவர்கள் தமிழ் தேசத்தையும், தமிழ் மக்களையும் அழிக்கின்ற ஒரு சிங்களப் பேரினவாத சக்திகளாகவே, தென்னிலங்கையில் திகழ்கின்றார்கள், இந்த நிலையில் கூட விடுதலைப்புலிகளாகிய நாங்கள், எங்களுடைய தலைமை, எங்களுடைய தேசியத் தலைவர் அவர்கள் நாங்கள் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும், பலமாகவும் இருக்கின்றோம் என்பதை. மீண்டும் மீண்டும் இந்த சர்வதேச சமூகத்திற்கும். இந்த சிங்களப் பேரினவாத சக்திகளுக்கும் உணர்த்துகின்ற வகையில் கூறியிருக்கின்றார். இறுதியாக நடந்த பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் தமிழரசுக் கட்சியின் கீழ் ஒன்றிணைந்து எங்களது இனத்தினையும், ஒருமித்த சக்தியினையும். எங்கள் தேசியத் தலைவரினது கொள்கையினையும், ஏற்று ஒரு தலைமைத்துவத்தின்கீழ் எங்கள் மக்கள் அணிதிரண்டு, எங்களுடைய ஒற்றுமையினையும், ஒருமித்த பலத்தினையும் உலகிற்கும், இந்த ஸ்ரீலங்கா பேரினவாத அரசிற்கும் உணர்த்திய நிகழ்வாகவே இறுதியில் நடந்துமுடிந்த பாராளுமன்ற தேர்தல் காட்டி நிற்கிறது.

எனவே ஒரு பலம்மிக்க சக்தியாக இருந்தால்மட்டுமே அனைவரும் எங்கள் பக்கம் தங்கள் பார்வையை திருப்பிக் கொள்வார்கள். நாம் பலம்மிக்க சக்தியாக இருந்தால் தமிழீழத்தினது விடுதலையை விரைவாகப் பெற்றுவிட முடியும். எனவே மக்களாகிய நீங்கள் ஒருமித்து, ஒரு பலத்தின் கீழ், ஒருகுடையின் கீழ் ஒரு தலைமையின் கீழ் உறுதியாக இற்றைவரை நடந்த கொடிய போருக்கெல்லாம் முகம் கொடுத்து எப்படி இந்த தேசியத்தின் விடுதலையை நீங்கள் நேசித்தீர்களோ. அதே போன்று வரப்போகின்ற அனைத்து நடவடிக் கைகளிலும் நாங்கள் ஒருமித்து எங்கள் தேசியத் தலைவருடைய கரங்களைப் பலப்படுத்தி எங்கள் தேசத்தின் விடுதலைக்காக உழைக்க வேண்டும். ஒற்றுமையாக ஒரு பலம் மிக்க சக்தியாக திகழவேண்டும், என்று கேட்டுக்கொள் கின்றேன்.

# உலகச் செய்திகள்

## செயற்கைக் குழந்தைகள்

நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு ஸ்டெம் செல் வழங்கும் "டோனர்" களாக செயல்படுவதற்காக அமெரிக்காவின் சிகாகோ பரிசோதனைச் சாலையில் ஆரோக்கியமான. 5குழந்தைகளை உருவாக்கியுள்ளனர். இந்தக் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு கருவில் இருக்கும் போதே தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கள் சகோதரர்களுக்கு · ஸ்டெம் செல் வழங்க தகுதியானவர்களாக உருவாக்கப்பட்டனர். ஆனால் ஒழுக்க நெறியை வலியுறுத்துபவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான சிகாகோ டாக்டர் அன்வர்குரீவ் எதிர்பார்க்கப்பட்டதைவிட கூடுதல் குழந்தைகள் இதன்மூலம் பயன்பெறுவர். ஆரோக்கியமான, பயன்படுத்தாத கருக்குழந்தைகள் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படுவதற்காக உறைநிலையில் வைக்கப்பட்டனர்.

இது தேடி அழிக்கும் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்குழந்தைகள் பிறப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். என்று அமெரிக்க கத்தோலிக்க விஷப்புகளை மாநாட்டைச் சேர்ந்த ரிச்சர்டு டோயர் பிலிங்கர் கூறியுள்ளார்.

## பா.ஜ.க இரண்டாக உடையும் அபாயம்

குஜராத் மாநில முதல் மந்திரி நரேந்திரமோடிங் கெதிராக மீண்டும் வாஜ்பாய் போர்க்கொடி உயர்த்தி உள்ளார்.

குஜராத் விவகாரம் பற்றி பா.ஜ.க தேசிய செயற் குழுவில் விவாதிக்ப்படமாட்டாது. என்று வெங்கையா நாயுடு அறிவித்ததை வாஜ்பாய் நிராகரித்துள்ளார்.

குஜராத் விவகாரம் பற்றி செயற்குழுவில் விவாதித்தே தீர வேண்டும் என்று முதல்வர் மோடிக்கு எதிராக மீண்டும் போர்க்கொடி தூக்கியிருக்கிறார். இதனால் பா.ஜ.கா இரண்டாக உடையும் அபாயம் உள்ளது.

பா.ஜ.கயின் தோல்விக்கு குஜராத்தில் நடந்த இனக்கலவரமே காரணம் அது நடந்ததுமே மோடியை நீக்கியிருக்க வேண்டும். அது செய்யாததுதான் மாபெரும் பிழை என வாஜ்பாய் குறிப்பிட்டதையடுத்து நாட்டின் ஆதரவு இயக்கங்களின் தலைவர்கள் கொதிப்படைந்துள்ளனர். பா.ஜ.க தோல்விக்கு மோடி காரணமல்ல. அதுபற்றி கட்சியின் தேசிய நிர்வாக குழுவில் விவாதிக்க கூடாது என அவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கு வாஜ்பாய் மறுப்புத் தெரிவித்துள்ளனர். அவர் மோடி பற்றி பிரச்சனை எழுப்புவார் என்பது உறுதியாகிவிட்ட நிலையில் பா.ஜ.க வாஜ்பாய் ஆதரவு கோஷ்டி எதிர்ப்புகோஷ்டி என்று உருவாகி கட்சி உடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மும்பையில் இம்மாத இறுதிக்குள் நடக்க இருக்கும் பா.ஜ.க தேசிய செயற்குழு கூட்டம் பா.ஜ.க வுக்கு ஒரு அக்னி பரீட்சையாகவே அமையும்.

## வீரப்பன் விவகாரத்தில் புதிய துரும்புச்சீட்டு இளவரசன்



விரப்பன் தனது தலைக்கு வெளிநாட்டு டை பூசுவதாக பரபரப்பான செய்தி ஒன்று பொலிசாருக்குக் கிடைத்துள்ளது.

எஸ்.பி.க்கள் டி.எஸ்.பிக்களின் அதிரடி நேரடி மேற்பார்வையில் நடந்த விசாரணையின் போது தீவிரவாதியான சுப இளவரசன் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இளவரசன் வீரப்பனின் கடத்தற் தொழிலுக்கு ஆட்களை சப்ளை செய்திருந்ததாகவும் அதற்காக 75 லட்ச ரூபாய் வாங்கியதாகவும் விசாரணையில் தெரியவந்தது. அதோடு தமிழ் தீவிரவாதியான மாறன் என்பவன் வீரப்பனுக்காக வெளிநாட்டிலிருந்து டை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்ததாகவும் அந்த டையை அடிக்கும் போது ஒரு சொட்டு தவறி வீரப்பன் கண்ணில் பட்டு விட்டதாகவும். அதிலிருந்து கண் எரிச்சல் அடிக்கடி எற்பட்டு சரியாகப் பார்வை தெரியவில்லை என்றும் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. மேலும் இளவரசனுக்கு சகாதேவின் என்பவன் பத்துவருடகாலமாகப் பழக்கம் ஆரம்பத்தில் சமையற்காரனாகத்தான் சகாதேவன் அறிமுகமானான் அதன்பின் இளவரசனின் பல காரியங்களுக்குத் துணையாக இருந்தான். இடையில் கொஞ்சநாள் இளவரசனைவிட்டுப் பிரிந்து பின் மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறான்

அந்தவேளையில் இளவரசனுக்கு பணத்தேவை ஏற்பட அவனைக் கொண்டு போய் விரப்பனிடம் விட்டுவிட்டு பணம் வாங்கிக் கொண்டு போக வந்தபோதுதான் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டான்.

இளவரசனின் தலைமறைவு வாழ்க்கை பற்றிய வாக்குமூலத்தில், அவன் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கும் எட்டுபேரை கைது செய்ய பொலிஸார் முடுக்கிவிடப்பட்டுள்ளனர். அவர்களின் பெயரை வெளியிட்டால் தலைமறைவாகிவிடுவார்கள் என்பதனால் பெயரை வெளியிட விரும்பவில்லை என பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது. வீரப்பனோடு சேர்ந்து இளவரசன் விவகாரம் இனித்தான் சூடுபிடிக்கப்போகிறது.

## ஈராக்கில் கார் குண்டுவெடிப்பு 21 பேர் பலி

பக்தாத்தில் பாதுகாப்புப் படைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும் நிலையத்தில் இடம்பெற்ற கார்குண்டு தாக்குதலில் 21பேர் உயிரிழந்துள்ளனர். 69பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புபடைக்கு ஆட்சேர்ப்பு பணி நடைபெறுகின்ற நிலையத்துக்குள் பாதுகாப்பு தடைகளையும் மீறி நுழைந்த காரில் வைக்கப்பட்ட குண்டே வெடித்திருப்பதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் அப்பாவி ஈராக்கியர்கள் என்று தெரிவிக்கப் படுகின்றது. இந்தச் சம்பவம் (17.06.2004) வியாழன் பகல் நடைபெற்றது.

அன்று காலை முதல் பாதுகாப்புபடைக்கு ஆட்சேர்ப்புப் பணி நடைபெற்று கொண்டிருந்தது. தொழிலற்று இருக்கும் ஈராக்கியர்களுக்கு தொழில் வழங்கும் மூலமாகவே இந்தப் பணி நடத்தப்பட்டது. பாதுகாப்பு படையில் இணையும் பொருட்டு 100பேர் வரிசையில் நின்றிருந்தனர். பலர் நிலையத்தின் வாயிற் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழையும் போதே குண்டுவைக்கப்பட்ட காரும் நுழைந்திருக்கலாம் என்று பொலிஸார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அல்கொய்தாவின் முக்கிய புள்ளியான அபூ முஸாப் அல்-ஸர்கவி ஈராக்கிய நகரமான பலூஜாவில் மறைந்திருப்பதாக பென்டகன் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் அடிக்கடி நடைபெறுகின்ற குண்டுத் தாக்குதல்களுக்கும் வன்முறைகளுக்கு அல்-ஸர்கவியே பின்னணியில் இருப்பதாக நம்பப்படுகின்றது.

எதிர்வரும் 30ம் திகதி ஈராக்கை நிர்வாக அதிகாரங்கள் ஈராக்கிய இடைக்கால அரசாங்க சபையிடம் ஒப்படைக்கவுள்ளன.

இதனைத் தடுக்கும் வகையில் பயங்கரவாதிகள் பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அமெரிக்காவின் கவனம் திசை திரும்பியுள்ளது.

ஜோர்தானில் பிறந்த அல்-ஸர்கவி கடந்த ஆண்டு ஐ.நா தலைமையகத்தின் மீதான தாக்குதலை மேற்கொண்டார் என்பது உறுதியாகியள்ளது. பக்தாதிலுள்ள ஐ.நா தலைமையகத்தின் மீதான தாக்குதலில் ஐ.நா தூதுவர் உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க வர்த்தகரான நிக்கலஸ் பேர்கை கொலை செய்தவரும் அல்ஸர்கவி என்றே அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அல்-ஸர்கவி தொடர்பாக தகவல் தருவோருக்கு அல்லது தலையைக் கொண்டு வருவோருக்கு அமெரிக்கா மில்லியன் டொலர் சன்மானம் வழங்குவதாக அறிவித்துள்ளது.

## பரபரப்பை ஏற்படுத்திய பரணிதரன் போலிச்சாமியாரா?

சேலம் பொன்னம்மா பேட்டையில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி அங்கு கடந்த சில நாட்களாக பக்தர்களுக்கு ஆசி வழங்கிவரும் குட்டிச்சாமியார் பரணிதரன் சொற்பொழிவு ஆற்றும்பொழுது அவரது பெற்றோர் அவரைக் காரில் தூக்கிச் சென்றுள்ளார்கள்.

மூன்றாம் வகுப்பு வரையே படித்த இவர் மந்திரலயம் சென்று வேதம் கற்றவர் என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர். ஆனால் மந்திரலாய ஸ்ரீ ராகவேந்திராசுவாமி தங்கள் மடத்திற்கும் குட்டிச்சாமியாருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என் திட்டவட்டமாக தெரிவித்ததையடுத்தே இவர் போலிச்சாமியார் என்ற சந்தேகம் வலுத்து பொலிசாரை தீவிர விசாரணைக்கு முடுக்கி விடப்பட்டுள்ளனர்.




சென்ற மாதம் கந்தப்பொல நகரில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மேல் மாகாண மக்கள் முன்னணியினர், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.மனோகணேசன், தமிழ்த் தேசியகூட்டமைப்புப் பாராளு மன்ற உறுப்பினர். திரு.ஈழவேந்தன் உட்பட பலர் கலந்து கொண்டதை படத்தில்க் காணலாம்.

## குளிர்சாதனப் பெட்டிக்குள் குழந்தை. தாயார் கைது

ஜப்பானில் தான் பெற்ற குழந்தையை குளிர்சாதனப் பெட்டிக்குள் மறைத்து வைத்த பெண்மணியை பொலிஸார் கைது செய்துள்ளனர். இரண்டரை வயதுடைய தனது குழந்தையை குளிர்சாதன பெட்டிக்குள் மறைத்து வைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டார்.

தற்செயலாக அப்பெண்ணின் கணவன் குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து பார்த்த போது குழந்தை குளிர்சாதனப்பெட்டிக்குள் இருப்பதைக் கண்டுள்ளார்.

குழந்தை சுகயீனம் காரணமாக உயிரிழந்திருப்பதால் அதனை தனது கணவனிடம் கூறப்பயந்த பெண் இவ்வாறு செய்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. குறிப்பிட்ட பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். குழந்தை ஏற்கனவே இறந்துள்ளதா அல்லது குறிப்பிட்ட பெண்தான் குழந்தையை கொலை செய்துள்ளாரா என்பதை அறியும் பொருட்டு சடலம் பரிசோதனைக்காக டோக்கியோ மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## கொல்லப்பட்ட பெண் தீவிரவாதி ஒரு கல்லூரி மாணவி

குஜராத் மாநில முதல் மந்திரி நரேந்திரமோடியைக் கொலை செய்வதற்காக அஹமதாபாத்தில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளைப் பொலிஸார் சுட்டுக் கொன்றபோது பலியான பெண் தீவிரவாதி அடையாளம் காணப்பட் டுள்ளார். அவர் மும்பையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஆவார்.

குஜராத் மாநிலம் அஹமாதபாத்தில் லக்ஸர்-இ-தொய்பா இயக்கத் தீவிரவாதிகள் நால்வர் சுட்டுக் சொல்லப்பட்டனர். இவர்கள் நால்வரும் முதல்வர் நரேந்திர மோடியை தீர்த்துக்கட்டும் நோக்கத்துடன் சென்றிருந்தபோதே பலியானார்கள்.

இறந்தவர்களில் மூவர் ஆண்கள் ஒருவர் பெண். அந்தப் பெண் யாரென்று அடையாளம் தெரியாமல் இருந்தது. அது இப்போது தெரியவந்துள்ளது. அவர் பெயர் இஸ்ரத் ஜகன் சமீம்ராசா, வயது 19. மும்பையை சேர்ந்தவர். இங்கு மாதுங்காவில் உள்ள குருநானக் கல்சா கல்லூரியில் பி.கொம் முதல் ஆண்டு படிப்பதும் தெரியவந்துள்ளது.

## எஸ்.கே.ரமேஸ்




### இலக்கம் 27

அகில இலங்கை சமாதான நீதவானாகிய எஸ்.கே.ரமேஷ் ஆரம்பக் கல்வியை வவுனியாவிலும், உயர்கல்வியை கொழும்பு இரத்மலான இந்து கல்லூரியிலும் கற்றார். சிறுவயது முதல் இலக்கிய கலை ஆர்வமிக்க இவர் சமாதான இறுவட்டின் மூலம் (CD) பிரபல பாடகர் பொப்பிசை சக்கரவர்த்தி, ஏ.ஈ. மனோகரன், பொப்பிசை திலகம் எஸ்.இராமச்சந்திரன் ஆகியோரோடு பாடியதன் மூலம் பொப்பிசைத் தென்றலாக இசை உலகுக்கு அறிமுகமானார். இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் (M.M.I.C) நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளரும், S.K. ads and Prints, Foresight Advertising நிறுவனங்களின் நிர்வாகப் பணிப்பாளருமாவார். சமூக சமைய பணிகளிலும் முன்னின்று உழைக்கும் சிங்கள மக்களின் அன்புக்குரியவருமாவார். ஜனநாயக ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் இவரது இலக்கம் 27. சின்னம் இரட்டை இலை. இவரை தெரிவு செய்வதன் மூலம் இளைஞர் கூட்டம் தலைமை தாங்கும் புதிய பூமியைப் படைப்போம்.

# மாகாண சபைத் தேர்தலில் மையம் கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள்...

- மீண்டும் யுத்தம் வெடிக்குமா?...... மக்கள் மனதில் எழுந்துள்ள அச்ச மேகங்கள்.....
- நாளொரு பேச்சும், பொழுதொரு நிலைப்பாடுமாகத் தொடரும் நாட்டின் அரசியல் சூழ்நிலையில் இப்போதைக்குத் தெளிவு ஏற்படப்போவதில்லை.......

**-வே.தி.திருமாறன்**

சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதற்குரிய சாதகமான நிலைமைகள் எதனையும் இப்போது இலங்கையில் காண முடியவில்லை. மாறாக எந்த வேளையிலும் வெடிக்கலாம் என்ற ஆழமான சந்தேகமே எங்கும், எதிலும் தலைதூக்கியுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கூட்டமைப்பு குறித்துப் பேச்சுக்கள் நடத்தி அதனை முதலில் செயற்படுத்த வேண்டும். அதன் பின்னர் இறுதித் தீர்வு குறித்த பேச்சுக்களை நடத்தாலம் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு ஜனாதிபதி சந்திரிக்கா தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடிபோது பச்சைக்கொடி காட்டியிருந்தார். இந்தத் தகவல் ஊடகங்களில் வெளியாகிய வேகத்துடன், நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றிய அவர், இடைக்காலத் தன்னாட்சி குறித்து பேச்சுக்களை நடத்தும் அதே வேளையில், இறுதித் தீர்வு குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படும். அத்துடன் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்கள் இடம்பெற வேண்டும் என்றும் முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாட்டைத் தெரிவித்தார். இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துவிட்டு உடனடியாகவே அவர் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு லண்டனுக்குப் பயணமாகிவிட்டார்.

இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபைக்கான விடுதலைப் புலிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு ஜனாதிபதிக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் பல தரப்பினர் மத்தியிலும் பரவலாக எழுந்திருந்த வேளையில் ஜனாதிபதி சந்திரிக்காவின் இந்த நிலைப்பாடு நாட்டின் அரசியல் குட்டையைக் குழப்பிவிடுவதற்கே வழிவகுத்துள்ளது.

எப்படி இருந்த போதிலும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள மகாணசபைகளுக்கான தேர்தலுக்கு முன்னர் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் எண்ணம் கிஞ்சித்தும் அரசாங்கத்திடம் குறிப்பாக ஜனாதிபதியிடம் இல்லை என்ற யதார்த்தத்தையும் நாட்டு மக்கள் தெளிவாகவே புரிந்துவைத்துள்ளார்கள்.

இந்த நிலையில் நாட்டின் பாதுகாப்புக் குறித்த சந்தேகத்தையும் அச்சத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த தக்க நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றுள்ளது. கொழும்பு கிரான்பாஸ் பகுதியில் காவல் சுற்று நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் தற்கொலைத்தாக்குதலுக்கான அங்கி ஒன்றையும், அத்துடன் கிளைமோர்க் குண்டுகள் இரண்டையும் கண்டெடுத்துள்ளார்கள்.

பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தாக தெரிவிக்கப்படும் இந்த வெடி பொருட்களை எவ்வாறு அவர்கள் கண்டுபிடித்தார்கள் என்பது குறித்து தெளிவான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆயினும் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து குண்டுகளைச் செயழிலகச் செய்யும் இராணுவப் பிரிவினர் இந்த வெடிப்பொருட்களை செயலிழக்கச் செய்துள்ளார்கள்.

தொடர்ந்து அப்பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது 30 பேரளவில் கைது செய்யப்பட்டு மேல் விசாரனைக்காக பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். பொலிசாரின் உடனடி விசாரணைகளின் போது அப்பகுதியில் இனம்தெரியாத இரண்டு நபர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகவும் கண்டறிந்துள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தையடுத்து உடனடியாகக் கூடிய பாதுகாப்புச் சபை கொழும்பு பிரதேசத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் மேலதிக இராணுவத்தினர் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். கொழும்பில் இப்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திற்கும் மேலதிக இராணவத்தினர் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண தளபதி கர்ணாவின் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கடந்த வாரம் அடிபட்டதின் பின்னனியிலேயே இதன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கர்ணா அணியினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொப்பிகல காட்டுப் பகுதியில்

> **தமிழ் மக்களின் பொறுமையை வீணாகச் சோதிக்க வேண்டாம். கருணாவிற்கு ஆதரவளித்து அங்குமிங்குமாக கிழக்கில் கொலைகளை செய்வதன் மூலம் தேன்கூட்டுக்கு கல்லெறியும் வேலையை செய்யவேண்டாம்.**

மோதல்கள் இடம்பெற்று வருவதாக அந்த தகவல்கள் விபரம் தெரிவித்த போதிலும், அதனை விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் மறுத்துள்ளார். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தகவல் தருகையில் இத்தகைய மோதல்கள் இடம்பெற்றதாக இராணுவத்துக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த மோதல்களில் 6 அல்லது 7 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் எட்டியுள்ளதாகவும் கூறியிருக்கின்றார். ஆயினும் இது குறித்து ஊடகங்கள் மிகைப்படுத்தி செய்திகள் வெளியிட்டுள்ளன என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவேளை கர்ணாவுடன் இருந்து செயற்பட்டு வந்த மட்டக்களப்பு, அம்பாறை மகளீர் விஷேட தளபதி நிலாவினி, தளபதி தீந்தமிழ், துணைத் தளபதி லாவண்யா, மகளீர் அரசியற் துறைப் பொறுப்பாளர் பிரேமினி ஆகியோர் கர்ணாவிடமிருந்து பிரிந்து வந்து தங்களுடன் மீண்டும் இணைந்திருப்பதாக செய்தியாளர்களை சனிக்கிழமை சந்தித்த கேணல் ரமேஷ் தெரிவித்துள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவை கருவியாகப் பயன்படுத்தி மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அரசும் இராணுமும் திட்டமிடுவதையே கிழக்கில் இடம் பெறும் சம்பவங்கள் காட்டுகின்றன. அப்படியொரு யுத்தம் எம்மீது வலிந்து திணிக்கப்படுமானால் அதை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். அதனால் இழப்புக்களையும், அழிவுகளையும் சந்திக்கப்போவது அரசபடைகள் தான் என்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த நிலமைகள் வடக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் மீண்டும் யுத்தம் எந்த வேளையும் வெடிக்காலம் என்ற அச்சத்தையும், பீதியையும் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப்புலிகளின் தலைமை விடுத்த திடீர் அழைப்பையடுத்து, ஞாயிற்றுக்கிழமை அவசர அவசரமாக விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் முக்கியஸ்தர்களும் வன்னிக்கு பயணமானார்கள். யாழ் மாவட்டத்திற்குப் பொறுப்பான விடுதலைப் புலிகளின் இந்த அவசர விஜயத்தை தற்போதைய பாதுகாப்பு நிலைமைகளுடன் இணைத்து பார்த்துள்ள யாழ் குடாநாட்டு மக்கள் திடீர் யுத்தம் வெடிக்கக் கூடிய சந்தர்ப்பம் எழுந்து விட்டதோ என்ற அச்சத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

இதைவேளை வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற விடுதலைப்புலிகளின் புத்தக வெளியீட்டு நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டுள்ளமை முக்கிய நிகழ்வாக காணப்பட்டது. விடுதலைப் புலிகளின் சிங்கள வெளியீடாகிய "தேதுன்னா" (வானவில் என்ற கருத்தைக் கொண்ட செய்தித்தாள்) பத்திரிகை வெளியாகிய கட்டுரைகளின் தொகுப்புக்கள் அடங்கிய சிங்கள மொழியிலான இரண்டு நூல்கள் இங்கு வெளியிடப்பட்டன.

இந்த நிகழ்விலும் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கலாமோ என்ற சந்தேகம் எதிர்லொலித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சிங்கள ஊடகத்துறையினர், புத்திஜீவிகள், இடதுசாரி முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டிருந்தார்கள். சிங்கள சமூகத்தைச் சேரந்த பிரபல பேராசிரியரும் பெரியாரும் புத்திஜீவியுமாகிய பேராசிரியர் சுச்சரித்த நம்லத்த முக்கிய விருந்தினராக இங்கு வருகை தந்திருந்தார். பிரபல சிங்கள பாடகர் ஜயதிலக பண்டாரவும் இதில் கலந்து சிறப்பித்தார்.

இங்கு முக்கிய உரையாற்றிய விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க. வே. பாலகுமார் திறந்த மனதுடன் வெளிப்படையாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாகவும், அரசாங்கம் நேர்மையான முறையில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

"இரண்டு தசாப்தங்களாக நாட்டில் தொடர்ந்து நடைபெற்ற யுத்த நடவடிக்கைகள் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இந்த நம்பிக்கை வீணாகிவிடக் கூடாது. யுத்த நெருக்கடிகளுக்குள் மௌனித்திருந்த மக்களின் மனச்சாட்சியின் குரலாக இந்த நூல்கள் இரண்டும் வெளிவருகின்றன. இந்தக் குரல் சிங்கள மக்கள் மத்தியில் ஒலிக்கவேண்டும். தமிழ் மக்களின் அவல நிலைமைகளும், அவர்களின் அரசியல் அபிலாசைகளும், அரசியல் உணர்வுகளும் சிங்களமக்கள் புரிந்து கொள்வதற்காக இந்த நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு தசாப்தங்கள் மௌன மாகிபோயிருந்த தமிழ் மக்களிடம் இருந்து சிங்கள மக்களுக்கு வருகின்ற முதலாவது குரல் இது. இரு சமூகங்களுக்கிடையில் ஒரு இணைப்பை ஏற்படுத்துவதற்காக எடுத்து வைக்கப்பட்டுள்ள முதல் அடி இது. இந்தக் குரலும், இந்த அடியும் கடைசியானதாக அமைந்து விடக்கூடாது என்பது என்னுடைய பிரார்த்தனை. இத்தகைய குரல் வளம், காலடிகளும் இன்னும் தொட வேண்டும் என்பதே என்னுடைய ஆவல்" என்று மௌனித்த மக்களின் மனசாட்சியின் குரல் என்ற நூலில் அடங்கியுள்ள கட்டுரைகளை எழுதியுள்ள கா.வே. பாலகுமார் தனது உள்ளக்கிடங்கை இந்த நிகழ்வின் போது வெளியிட்டார். வன்னியிலிருந்து ஒரு குரல் என்ற கடிதங்கள் அடங்கிய நூல்கள் இந்த நிகழ்வில் வெளியிடப்பட்டுள்ளது.

"நாங்கள் உங்கள் எதிரிகளல்ல. சிங்கள மக்களுடைய நிலத்தில் ஒரு அங்குலத்தைக் கூட நாங்கள் ஆக்கிரமிக்கபோவதில்லை. எங்களுக்கு அது வேண்டாம். எங்களை எமது தாயகமண்ணில் நிம்மதியாக வாழ விடுங்கள். உங்கள் மண்ணில் நீங்கள் வாழுங்கள். எமது மண்ணில் எம்மை வாழவிடுங்கள். தமிழ் மக்களின் பொறுமையை வீணாகச் சோதிக்க வேண்டாம். கருணாவிற்கு ஆதரவளித்து அங்குமிங்குமாக கிழக்கில் கொலைகளை செய்வதன் மூலம் தேன்கூட்டுக்கு கல்லெறியும் வேலையைச் செய்ய வேண்டாம் என ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றோம். இந்தத் தகவலை இங்கு வருகை தந்துள்ள ஊடகவியலாளர்கள் தென்பகுதி மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்" என்ற கோரிக்கைகளையும் கா.வே. பாலகுமாரன் தனது பேச்சின் போது முன்வைத்தார்.

பேராசிரியர் சுச்சரித்த கம்லத் இங்கு உரையாற்றுகையில், தமிழ் மக்கள் தமது விடுதலையை தாங்களே போராடி பெறவேண்டும். இதற்கு தெற்கிலுள்ள சிங்கள தொழிலாளர் வர்க்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நாடு இரண்டாக பிளவுபட போகின்றதே என்பதல்ல இப்போதைய கவலை பிரிந்துள்ள நாட்டை எப்படி ஐக்கியப்படுத்துவது என்பதே இப்போதைய பிரச்சினை என்றும் அவர் சுட்டிக் காட்டினார். நாட்டில் ஐக்கியம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால், அரசாங்கம் விரைந்து செயற்படவேண்டும். விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்த முன்வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் கடற்படைத் தளபதி றியல் அரட்மிரல் தயாசந்தகிரி அமெரிக்காவிடமிருந்து யுத்தக் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பயணமாகியுள்ளார் என்ற செய்தியும் நாட்டில், யுத்தம் ஒன்று மூழப் போகின்றதோ என்ற சந்தேகத்திற்கு எரியும் நெரிப்பில் எண்ணெய் வார்த்தது போல அமைந்துள்ளது. இருப்பினும் இப்போதைய பாராளுமன்றம் அரசியல் சூழ்நிலையில் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவம் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுத்தேர்தல் நடைபெற்று ஆறு வாரங்கள் ஆகிவிட்ட போதிலும், புதிய அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தை இன்றும் நாடாளுமன்றத்தில் நீருபிக்கவில்லை. நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி சர்வ வல்லமையுடனும் நாட்டை நிர்வாகித்து வருகின்ற போதிலும் வளமான ஒரு நாடாளுமன்றம் இல்லாத நிலையில் நாட்டின் நிர்வாகம் மலிந்த நிர்வாகமாகவே இருக்கும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. குறிப்பாக யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இன்னும் பலம் அதிகமாகத் தேவைப்படும் என்பதிலும் சந்தேகமில்லை.

மொத்தத்தில் நாட்டின் அரசியல் சூழ்நிலைகள் தற்போதைக்கு அதாவது மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவடையும் வரையில் குழம்பிய குட்டையாகவே தொடர்ந்திருக்கப் போகின்றது. என்பதே இப்போதைய யதார்த்த நிலையாகக் காணப்படுகின்றது.

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை மெய்ப்பிப்பதற்காக யுத்தம் ஒன்று வெடிக்க வேண்டுமானால், அதனை அரச தரப்பினரே ஆரம்பித்து வைக்க வேண்டியுள்ளது. ஏனெனில் விடுதலைப் புலிகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் இப்போதைய உள்ளூர் மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலையில் யுத்தம் ஒன்றிற்கு செல்லப்போவதில்லை அதில் அவர்கள் சர்வநிச்சயமாக இருக்கின்றார்கள். சர்வதேச நிலைமைகளின் ஊடாக இலங்கை அரசாங்கத்தை பேச்சுவார்த்தை மேசைக்கு நகர்த்துவதற்குரிய வலுவான இராஜதந்திர நடவடிக்கைகளில் அவர்கள் இப்போது தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதும் இன்னுமொரு முக்கிய காரணமாகும்.

# தென்னிலங்கை தெளிவு பெறவேண்டும்

**- ஆரணி**

இலங்கையின் அரசியற்கட்சிகள் வழமை போன்றும், அதேவேளை சற்று அதிகமாகவும் தமக்குள் முரண்பட்டு நிற்கின்றன. குறிப்பாக, தென்னிலங்கையின் கட்சிகள் ஒரு நிலையான சமாதானத்தை பேணும் முன்னெடுப்புக்களை எடுக்கவும் முடியாமல் இருக்கின்றன. 106 உறுப்பினர்களை மட்டும் சுதந்திர முன்னணிக்கு மக்கள் கொடுத்துள்ளனர். ஏனைய 119 உறுப்பினர்களையும் பல கட்சிகளிடையே பிரித்துக் கொடுத்துள்ளனர். இந்த எதிர்கட்சிகள் உண்மையில் பெரும்பான்மை வைத்திருக்கின்றன. ஆயினும் தூணுக்கு உதவாத மரமாக பருத்து நிற்கின்றன. அனைத்துக் கட்சிகளின் மத்தியிலும் தேசியப் பிரச்சனை தொடர்பில் ஒரே சிந்தனை இல்லை. எதிர்கட்சிகள் இணைந்து தாமே ஒரு அரசாங்கத்தை அமைக்கும் விதத்திலோ, சிறுபான்மை அரசாங்கத்தை ஆதரிக்கும் விதத்திலோ பொதுவான அடிப்படை ஒன்றையும் கொண்டிருக்கவில்லை. முரண்பாடுகள் அத்தனை கூர்மையானவை யாகவுள்ளன. உறுதியான சமாதானத்தையோ, அல்லது உறுதியான போர்த் தீர்மானத்தையோ கூட எடுப்பதற்கு தென்னிலங்கைக்கட்சிகள் மக்களின் அடிப்படைச் சிந்தனையில் இணைக்கம் காணமுடியாத நிலையில் கூறுபட்டும், வேற்றுமையில் கூர்மையடைந்தும் நிற்கின்றன. சிறுபான்மையினங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இ.தொ.கா, மு.கா, தமிழரசுக் க்ட்சிகள் என்பவற்றின் மனங்களை வெல்ல முடியாமல் பெரிய கட்சிகள் இருக்கின்றன. ஆளும் கட்சியாலும் முடியவில்லை. எதிர்க்கட்சியாலும் முடியவில்லை. பிரதான எதிர்கட்சியால் தமிழரசுக் கட்சியையும். அதேவேளை ஹெலஉறுமயவையும் ஒரே அணியில் இணைந்து வைத்திருக்க முடியாது.

இவ்வகையான முரண்பாடுகளால் உறுதியான அரசுக்கு இடமில்லாமல் இலங்கை தத்தளிக்கிறது. இதனால் உறுதியான சமாதானத்தை தென்னிலங்கையினால் ஏற்படுத்தவும் முடியாது. உறுதியான அரசாங்கத்தை வைத்திருக்கவும் முடியாது. எதிர்கால தென்னிலங்கை இவ்வாறுதான் இருப்பதாக கூறி பிற்போக்கு முறைகளுக்கு பின்நோக்கித் திரும்பவும் தீர்வு தராது என்ற நிலை உள்ளது.

மாற்றுவழி வேண்டும்! தீர்வு என்ன என்ற கேள்விக்கு பதில் காணவேண்டியுள்ளது. முதுகெலும்புள்ள ஏதேனும் ஒரு கட்சி தென்னிலங்கையில் மக்கள் இயக்கம் ஒன்றை நடத்த முடிவுசெய்தல், தீர்வு தருவதாக இருக்கும். சமாதானத்தின் சார்பிலோ. சண்டையின் சார்பிலோ, மேலும் பரந்த மக்கள் மத்தியில் ஒரு பரந்த பிரச்சார நடவடிக்கை இன்றைய அவலநிலைக்கு ஓரளவு நிரந்தரத் தீர்வைத் தரமுடியும்.

அப்பழுக்கற்ற தெளிந்த சிந்தனையுடனும் ஏக முடிவொன்றுடனும் மக்கள் முன் விழிப்புணர்வு பிரச்சாரம் முழு அளவில் தென்னிலங்கையில் முன்னெடுக்கப்படுதல் அவசியம். இதன் மூலமே மக்கள் ஒரு தெளிந்த நிலைக்கு வரமுடியும். ஊடகங்களின் குளறுபடிகளுக்கூடாக ஏற்படும் குளப்பங்களும் தீர முடியும்.

கட்சிகளும், தலைமைகளும் கூட விரிந்த, தேசிய சிந்தனைகளை கருத்திலெடுத்து செயற்திட்டங்களை செவ்வைப்படுத்திக் கொண்டு முன்னேற வழிசமைப்பதாக இருக்கும். தலைமைகள் தமது கொள்கைகளில் தெளி வாகவும் உறுதியாகவும் இல்லாத இன்றைய நிலையே பெரும் குழப்பங்களுக்கு வழி விட்டு நிற்கின்றது. ஜூன் 10 ஆம் திகதி தமிழரசுக்கட்சீன் 22 எம்.பிக்கள் சந்தித்த ஜனாதிபதி, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு தான் தயாராகவிருப்பதாக அறிவித்தார் என்று அக்கட்சியின் தலைவர்கள் அறிவித்தனர். ஜனாதிபதியின் முன்னைய நிலைப்பாட்டின் இடைக்கால நிர்வாகம் என்னும் விடயத்தை அடிப்படையான பிரச்சனைகளிலிருந்து பிரித்துப்பேச முடியாது.

ஆயினும், இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்கள் முதலில் நடைபெறவேண்டும் என்று புலிகள் இயக்கம் பிடிவாதமாக விருப்பதால் தான் அதனை ஏற்றுக்கொள் வதாக ஜனாதிபதி அறிவித்தாரென்றும், தமிழரசுக் கட்சியினர் அறிவித்தனர். இருந்தும் சந்திப்பின் பின்னர் தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி இது விடயத்தை உறுதிசெய்யவில்லை. இவ் விவகாரத்தை தொடராமலே விட்டுவிட்டார்.

இதனால் சமாதானச் செயற்பாட்டை முன்னெடுப்பது என்னும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இல்லை என்று தாம் நம்புவதாகவும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் கூறுகிறார்.

ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்ச்சியாக மாறுபட்டுக்கொள்கிறது. சுதந்திர முன்னணியின் பிரதம பங்காளியின் நிலைபாடு முரண்பாடானதாகவுள்ளது. இடைக்கால நிர்வாகம் தொடர்பில் ஐ.தே.முயின் கருத்து தெளிவாக முன்வைக்கப்படாத நிலையிருக்கிறது. இடைக்கால நிர்வாகம் தொடர்பில் முஸ்லீம் தரப்பினரிடம் பல கேள்விகள் உள்ளன. உண்மையில் அரசியற் கட்சித் தலைமைகள்யாவும் பல கேள்விகளுடனேயே உள்ளன. சமாதானம் பற்றியோ. சண்டை பற்றியோ தெளிவில்லாமல் இருக்கின்றன. மக்கள் பிளவுண்டு நிற்பதற்கு இது காரணமாகவுள்ளது. கட்சிகள் இணைந்து செயற்பட முடியாமைக்கு இது அடிப்படையாகவுள்ளது. 1994 இலும் 2001 டிசம்பர் தேர்தலிலும் சமாதானத்திற்கு தெளிவான ஆதரவை மக்கள் தந்தனர். 2004 ஏப்ரலிலும் சமாதானத்தை புறக்கணிக்காமலும், சண்டையை வரவேற்காமலும் தெளிவற்ற திகதியே தந்துள்ளார்கள். மக்களைத் தேளிவற்ற நிலையில் வைத்திருப்பது தலைமைகளின் சந்தர்ப்பவாத தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கே உதவும். நோயும் தீரக்கூாது ஆளும் சாகக்கூடாது என்ற நிலையில் இலங்கையை வைத்திருப்பது உலக வல்லரசுகள் தமது தேவைகளுக்கு எமது நாட்டை பயன்படுத்துவதற்கு இடமளிப்பதாகவும் இருக்கும்.

தனியான நாடொன்றிற்கு இரு தசாப்பதங்கள் ஆயுதப்போரை நடத்தியவர்கள், சமாதானத்திற்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவதற்கு தீர்மானித்தமை உலக நாடுகளால் பெரும் பூரிப்புடன் வரவேற்கப்பட்டது. ஒஸ்லோவின் அனுசரணையுடன் சமஷ்டி ஆட்சி முறையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது, சமஷ்டி ஆட்சியமைப்பை நிறுவும் நடைமுறைகளை வகுத்து ஈடுபடுத்த சிலகாலம் பிடிக்குமென்பதால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையொன்றின் தேவை எழுந்தது. இதுவே தீர்வு அல்ல. தீர்வுக்கு முன்னோடியான ஒரு தற்காலிக அமைப்பு மட்டுமே இதனை அங்கீகரிப்பதில் இன்று தென்னிலங்கை காட்டும் எதிர்ப்பு சிகிச்கையை அங்கீகரிப்பதற்கும் பரீட்சார்த்தமாக ஏற்படும் ஊசி மருந்தைக்கூட நிராகரிப்பதுமான நோயாளியின் செயலாகும். இது சர்வதேசத்தின் மனச்சாட்சியை அவதானிப்பதற்கு தென்னிலங்கை காட்சிக்கு வைத்திருக்கும் கட்டமாகும். இரண்டு தசாப்தகால அழிவுகளின் பின்னரும் தென்னிலங்கை மனமாற்றமடைந்து விடவுமில்லை. தெளிவுபெற்றுவிடவுமில்லை என்பதையும், சிறுபான்மையினமான தமிழர் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே நடத்திவந்த போராட்டங்கள் நியாயமானவையே என்பதையும் உலகத்தின் மனச்சாட்சியை அவதானித்துக்கொண்டிருப்பதையும், பார்க்கத் தெரிந்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது வரலாற்றில் இடம்பெறும் உண்மைகளாகிவிடும்.

இடைக்காலத் தீர்விலேயே குழம்பி நிற்கும், தென்னிலங்கை இறுதித்தீர்வுக்கு இடமளிக்கப் போவதில்லை என்ற சந்தேகம் தமிழர்களிடம் உள்ளது. இதுவே அவர்கள் தமது அடிப்படையான பிரச்சனைகள் பேசித் தீர்க்கப்படுவதற்கான சூழல், தென்னிலங்கையில் உருவாகி விட்டதா என்பதை பார்ப்பதற்கு அவர்களை தூண்டியதாகும். இன்றைய சம்பவங்கள் தென்னிலங்கையின் மீது தமிழர்களை மேலும் சந்தேகிக்க வைப்பதாகவேயுள்ளன.

இடைக்காலத் தீர்வு விடயத்திலோ. நிரந்தரத் தீர்வு விடயத்திலோ அதனை தென்னிலங்கையின் தலைமைகள் அணுகும் விதத்திலேயே தமது ஆதரவு தங்கியிருப்தாக தமிழர் கூட்டமைப்பின் தலைமையிலுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். ஆட்சியிலுள்ளவர்கள் இது தொடர்பில் கொண்டிருக்கும் உறுதிநிலை, கடப்பாடு என்பவற்றைப் பொறுத்து தமது தீர்மானங்கள் அமையும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது தெளிவான தீர்மானம் உறுதியான சமாதானத்திற்கும் வழி வகுக்கும். உறுதியான முன்னெடுப்புகள் உறுதியான அரசாங்கத்தை நிலைநிறுத்தவும் வழிவகுக்கும் என்ற நிலை ஒன்றிற்கொன்று உறுதுணையாக நிற்கக்கூடிய இரண்டு நடைமுறைகளையும் தெளிவான சிந்தனையுடன் முன்னெடுப்பதில் உள்ள தடைகள் யாவை? அவை மாற்றமுடியாதனவும் நிரந்தரமானவையும் என்று தென்னிலங்கை முடிவு செய்யுமாயின் அதுவே இனியெல்லாம் இருக்கும்.

# வவுனியாவில் அகதிகள் தினம்

**சர்வதேச அகதிகள் தினம் 20.06.2004 வவுனியா வாழ் இடம் பெயர்ந்த மக்கள் இலங்கை ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகருக்கு சமர்ப்பிக்கும் மகஜர்.**

**ச. மயூரன்**

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த 20 வருடமாக ஏற்பட்ட யுத்தத்தினால் தமிழ் மக்களாகிய நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். சிங்கள பேரினவாத இராணுவ நடவடிக்கைகளினால் நடாத்தப்பட்ட அட்டூழியத்தனமான தாக்குதல்களால் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த இன்னல்கள் அனுபவித்துள்ளோம். சொந்த நிலங்களிலிருந்து அநாதரவாக வெளியேற்றப்பட்டதுடன் சொத்துக்களையும் சொந்தங்களையும் இழந்து பரிதாபகரமான நிலையில் அகதிகள் என்று சர்வதேச நிறுவனங்களாலும் சிங்கள அரசினாலும் பெயர் பொறிக்கப்பட்டு அங்கலாய்த்து முகாம்களில் அடைபட்டுக் கிடக்கின்றோம்.

அகதி முகாம்களில் அடைபட்டு இருக்கும் போது சர்வதேச நிறுவனங்கள் ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதாக சர்வதேசத்திற்கு வெளிக்காட்டி அன்றைக்குத் தேவையான உணவையோ, பிளாஸ்டிக் பொருட்களையோ தந்து முகாம்களில் முடங்க வைத்தனர்.

ஒரே இடத்தில் நீண்ட கொட்டகைகளில் வருடக்கணக்கில் மிக இழிவான நிலையில் வாழ்க்கையை நடாத்திக்கொண்டு வருகின்றோம். இருப்பிட வசதியின்மை. சகாதாரக் கேடு, குடிநீர் பற்றாக்குறை, கல்வியைத் தொடரமுடியாத நிலை. பல பிரதேச மக்கள் ஒன்றாக ஒரே கடியில் வாழ்வதால் சமூகப்பிரச்சனையாக பாலியல் வல்லுறவு. பாலியல் துஷ்பிரயோகம், மது பாவனை அதிகரிப்பு சிறு வயது திருமணம், கலப்புத் திருமணம், சமூக, கலை கலாச்சார சீரழிவுகள் போன்றவற்றால் நாங்கள் தினம்தோறும் ஒரு கீழ்த்தரமா வாழ்க்கையினை அகதிமுகாம்களில் அனுபவித்துக் கொண்டு வருகின்றோம்.

பல குழந்தைகள் அகதி முகாம்களிலேயே பிறந்து வளர்ந்து தற்போது இளைஞர்களாகி விட்டார்கள். ஒரு கட்டுக்கோப்பான சமுதாயத்திலே வாழ்ந்த எங்களை அகதிமுகாம்களில் கட்டக்கோப்பான சமுதாயத்திலே வாழ்ந்த எங்களை அகதிமுகாம்களில் கட்டுக்கோப்பான சிதறடிக்கப்பட்டு, சினானபின்னமாக்கப்பட்டு சமூக, கலாச்சார பண்பாடுகள், மரபு வழக்காறுகளை உணராத பிள்ளைகளாக வளர்ந்து விட்டார்கள். இந்த சந்ததியினர் எங்கள் சமூகத்திற்கு எவற்றை செய்வார்கள் என்ற ஏக்கம் ஒருபுறம் இருக்க எதிர்கால சந்ததியினர் எங்கள் சமூகத்தை பற்றி அறியாமலேயே போய்விடுவார்கள் என்ற பயமும் எங்கள் அனைவருடைய மனத்திலேயும் இப்போது எழுந்துள்ளது.

நாங்கள் இந்த அகதிமுகாம் வாழ்க்கையினை முற்றுமுழுதாக வெறுக்கின்றோம். தொடர்ந்து அகதிமுகாம்களில் முடங்கிக் கிடக் எங்களால் முடியுாது. ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு பல வருடங்களாக கடந்த நிலையிலும் எங்கள் சொந்த நிலங்களுக்கு எம்மை அனுப்பி வைப்பதற்கு எந்த ஒரு சர்வதேச நிறுவனமோ அல்லது அரசாங்கமோ விரும்புவதாக தெரியவில்லை.

நாங்கள் எமது சொந்த நிலங்களுக்கு செல்லவேண்டும். விவசாய விளை நிலங்களில் பயிர்ச்செய்கை செய்யவேண்டும். கடற்றொழில், கைத்தொழில், வியாபாரம், சுயதொழில்களை மேற்கொள்ளவேண்டும். நாங்களும் சமூகத்தில் அந்தஸ்துள்ளவர்களாக வாழ வேண்டும் என ஆசைப்படுகின்றோம்.

ஆனால் சமாதானம் என்று சொல்லப்படும் இந்த நிலையிலும் கூட உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சிங்கள இராணுவம் எங்கள் நிலங்களில் இருந்து வெளியேறாமல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தம்வசம் வைத்துள்ளனர். யுத்தம் இடம்பெற்ற போது கண்மூடித்தனமாக எங்கள் நிலங்களில் விதைக்கப்பட்ட மிதிவெடிகள், கண்ணிவெடிகள், பிற அபாயம் விளைவிக்கும் பொருட்கள் போன்றவை இன்றுவரை அகற்றப்படாத நிலையில் நாங்கள் எவ்வாறு சொந்த நிலங்களுக்குச் செல்வது?

எங்கள் பிரதேசங்களில் மீளக்குடியேறும் போது அரசினாலும், சர்வதேச நிறுவனங்களின் கண்துடைப்புக்களினாலும் தொடர்ந்து அந்த பிரதேசங்களில் வசிக்க முடியாது என்பதை நாங்கள் உணர்கின்றோம்.

ஆகவே!... உடனடியாக பின்வரும் விடயங்களில் அக்கறை கொண்டு செய்து தரும்படி பணிவண்புடன் வேண்டுகின்றோம்.

1. உடனடியான நலன்புரி நிலையங்களை மூட வேண்டும்.
2. நாங்கள் எமது சொந்த நிலங்களில் மீள் குடியேற்றப்படல் வேண்டும்.
3. காணியற்றோருக்கு அரச காணிகளை பகிர்ந்தளிக்க வேண்டும்.
4. மீள்குடியேற்றங்களை அரசு விரைவு படுத்த வேண்டும்.
5. வீடமைப்புத்திட்டங்களுக்கு வழங்கப் படுகின்ற நிதியினை அதிகரிக்கவேண்டும்.
6. மீள்குடியேறிய பினான் நாங்கள் சொந்த வருமானத்தை உழைக்கும் வரைக்கும் தடையற்ற போதுமான நிவாரணங்கள் வழங்கப்படல் வேண்டும்.
7. தொழிலற்றவர்களில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் தொழில் வாய்ப்பினை வழங்கல் வேண்டும்.
8. குடியமர்த்தப் பிரதேசங்களில் சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்தல் வேண்டும்.
9. குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் கல்வி. சுகாதார, வைத்திய சமூக சேவைகளை ஏற்படுத்த வேண்டும்.
குடியமர்த்தப்பட்ட இடங்களில் உள்ள கண்ணிவெடிகள். மிதிவெடிகள் பிற வெடிப்பொருட்கள் அகற்றப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.
10. அதி உயர் பாதுகாப்பு வலயம். சூனியப்பிரதேசம் என்ற போர்வையில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் எமது வீடுகள், நிலங்கள் விடுவிக்கப்படல் வேண்டும். அங்கு சுயமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வு நடாத்த ஏற்ற இயல்பு நிலை உறுதிசெய்யப்படல் வேண்டும்.

**மகஜரிக் பிரதிகள்**

1. மேன்மை தங்கிய ஜனாதிபதி - இலங்கை சனநாயக சோசலில குடியரசு
2. பிரதமர் இலங்கை சனநாயக சோசலில குடியரசு
3. எதிர்கட்சித் தலைவர் இலங்கை சனநாயக சோசலில குடியரசு
4. இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு
5. அரசியல்துறை தமிழீழ விடுதலைப் புலிகள்
6. இலங்கை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்.
7. இலங்கை சமூக பாதுகாப்பு அமைப்பு
8. வவுனியா மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியம்.

# செய்திக்கதிர்

-அன்பன் மட்டக்களப்பு-

## இலங்கைத் தமிழர்களின் எதிரியான இந்தியாவை அனுசரணைக்கு அழைப்பது ஏன்?

அம்மையாரே! இந்தியா. இலங்கைத் தமிழர்களின் எதிரி என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். விடுதலைப்புலிகள், இந்திய சமாதானப் படையை புறமுதுகிட்டோடச் செய்தனர். முடிசூடா மன்னன் என்று முழங்கிய தூதுவர் தீக்ஷித்தின் முகத்தில் கரியைப் பூசி அனுப்பி வைத்தனர். ராஜீவ் காந்தியின் கொலையோடு இந்தியா வேண்டுமென்றே விடுதலைப்புலிகளைச் சம்பந்தப்படுத்தியது. தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்க வேண்டுமென்று வாய் வீரம்பேசுகிறது. போதாக்குறைக்கு உங்கள் ஊதுகுழல் கதிர்காமர் இந்தியாவிற்குப் போய் சும்மாவே பிரபாகரனை ஒப்படைக்க இந்தியா கோரும் என புலடா விடுவார். இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் வர்த்தக ஒப்பந்தம் செய்துள்ளது. நீங்கள் ராணுவ ஒப்பந்தம் செய்யப்போகிறீர்கள். கதிர்காமர் உங்கள் சார்பில் அடிக்கடி இந்தியா போய் வருகிறார் என்ன நடக்கிறது. என்பதை எவருமே சுலபமாக ஊகித்து விடலாம். இத்தனை திருவிளையாடல்களுக்கு மத்தியில் இந்தியாவை சமாதானப் பேச்சுவார்த்தையின் அனுசரணையாளராக அழைக்கப் போகிறீர்களா? கிளியை வளர்த்துப் பூனையிடம் ஒப்படைக்கப்போகிறீர்களா?

## இராணுவ - புலிகள் சந்திப்புக்களால் எந்தப்பயனும் இல்லை

இராணுவ உரசல்கள் ஏற்படும் போதெல்லாம் இராணுவத் தரப்பினரும் புலிகள் தரப்பினரும் சந்தித்துப் பேசுகின்றனர். இந்தச் சந்திப்பினால் கிடைக்கும் நன்மைகள் என்ன? ஒன்றும் இல்லை, ஒன்றுமேயில்லை மேலும் மேலும் அட்டூழியங்கள் நடைபெறுகின்றன. மலயகத்தில்நடக்கிறது. மட்டக்களப்பில் நடக்கிறது யாழ்ப்பாணத்தில் நடக்கிறது. திருமலையில் நடக்கிறது, மட்டக்களப்பின் மர்மக் கொலைகள் தொடர்கின்றன. மலையகத்தில் கந்தப்பளை சம்பவத்தைவிட மோசமாக மில்லகந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இவற்றை இராணுவத்தாலோ, போலீஸாராலோ தடுக்கமுடியவில்லை. இரண்டுக்கும் பொறுப்பாக உள்ள ஜனாதிபதியாலும் இவற்றைத் தடுக்க முடியவில்லை, அப்படியானால் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் கதைதானா? ஜனாதிபதி, ஆட்சியைப் பறித்தெடுத்தது இந்தத் திருவிளையாடல்களை நடத்துவதற்குத்தானா? அம்மையாரே இதற்கு உங்கள் பதில் என்ன?

## தமிழீழத்துக்கு வழிசமைக்கிறார் அம்மையார்

சமாதானப்பேச்சுவார்த்தையைத் தாமதப்படுத்தினால், தமிழ் மக்கள் அப்படியே இருப்பார்கள் என்பது அம்மையாரின் எண்ணமா? அல்லது அந்தத் தாமதத்துக்குள் சில விடுதலைப்புலிகளை அழித்துவிடலாம் என அம்மையார் எண்ணுகிறாரா? அதெல்லாம் வெறும் பகற்கனவு என்பதை விடுதலைப்புலிகள் ஏற்கனவே பல முறை நிரூபித்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தை என்ற பெயரில் விடுதலைப்புலிகளை ஏமாற்ற முனைந்த போதெல்லாம் விடுதலைப்புலிகள் அவருக்குத் தகுந்த பாடம்படிப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு போரிலும் இலங்கை ராணுவத்துக்கு விடுதலைப்புலிகள் தண்ணி காட்டியிருக்கிறார்கள் என்பதை மறந்து விட்டாரா? ராணுவ வியூகங்களில் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதை இராணுவத்தலைவர்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள் அல்லவா, புலிகளின் வெற்றிகளை மறைத்து தொலைக்காட்சியிலும், வானொலியிலும் இராணுவம் ஜெயித்ததாகக் காட்டியதை சிங்கள மக்களே அறிவார்கள், உலகமே அறியும். அம்மையாரே வேண்டாம் இந்த விஷப்பரீட்சை.

## பயணிகளை இறக்கி ஏற்றுவதால் மர்மக்கொலைகள் குறையவில்லையே

நாங்கள் நினைத்தது சரியாகிவிட்டது அம்மையார் ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமிழ்ப் பிரதேசங்களில், பழையபடி இராணுவக் கெடுபிடிகள் ஏற்பட்டுவிட்டன. வீதித் தடைகள் எல்லாம் பழையபடி முளைத்துவிட்டன. பயணிகளை முறைக்கின்றனர் மூட்டைமுடிச்சுகளைக் கிண்டுவதும், பயணிகளை ஏற்றி இறக்குவதும், மேலும் தீவிரமாக நடக்கின்றன. அதற்குக் கற்பிக்கும் காரணம் மர்மக் கொலைகள் நடைபெறுவதாம் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் மீண்டும் முடிச்சுப்போடப்படுகிறது. இந்த வீதித் தடைகள், பரிசோதனைகளினால் மர்மக் கொலைகள் சற்றேனும் குறையவில்லை மாறாக அவை மேலும் அதிகரித்துள்ளன. எனவே இப்பிரச்சினைக்கு இது தீர்வு அல்ல. மர்மக் கொலைகளைப் புரிவோர் நேர்ப் பாதைகளில் வரமாட்டார்கள், வேறு வழிகளில் தான் வருவார்கள், சிறுபிள்ளைக்குக்கூட இது தெரியும். ஆனால் இலங்கை இராணுவத்தின மரமண்டைக்குமட்டும் இது புரியாதா? யாருக்குக் காது குத்துகிறீர்கள்? மர்மக்கொலையாளிகளைத் தேடிப்பிடிக்க வேண்டிய நீங்கள், இக்கொலைகளைத் தடுக்கவேண்டிய நீங்கள். உங்கள் கையாலாகாத்தனத்தை மறைப்பதற்காக, இப்படிக் கபடநாடகம் ஆடுகிறீர்களா?

## சமாதானப் பேச்சுவார்த்தையில் குட்டைகுழப்பும் அம்மையார்

ஆட்சியைப் பறித்தெடுத்ததும் அம்மையார் சமாதானத்தைக் குழப்புவார் என்பது அனைவரும் எதிர்பார்த்ததுதான். அதற்காகவே அவர் ஜே.வி.பி யைச் சேர்த்துக் கொண்டார் என்பதும் ஊரறிந்த உண்மை! போதாக்குறைக்கு இப்போது சிஹல உருமையும் சேர்ந்து கொண்டது. சமாதானப் பேச்சு வார்த்தையில் ஒரு அங்குலம்தானும் நகர முடியாதபடி ஜே.வி.பி கிடுங்கிப்பொடி போட்டுவிட்டது. மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் அம்மையார் திணறுகிறார். ஆனால் இதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படப்போகும் பாரிய விளைவுகள் பற்றி யாராவது சிந்தித்தார்களா? அந்நிய நாட்டு நிதி உதவி அம்பேல், அன்றாடம் நடைபெறும் மர்மக் கொலைகள் மக்கள் மத்தியில் மீண்டும் அச்சமும் பீதியும், சமாதானக் காலத்தில் போல் மக்கள் சுதந்திரமாக இரவிலும் பகலிலும் நடமாட முடியவில்லை. இரவில் கிழக்கிலங்கைமக்கள் பயணம் செய்ய முடியவில்லை பாதைத் தடைகளும் பயணிகள் சிக்கலும் ஆரம்பமாகிவிட்டன சுருங்கச் சொன்னால் பழையபடி யுத்தச் சூழலை நீங்கள் நாட்டில் ஏற்படுத்தி விட்டீர்களே!




## ஐயகோ! இங்கே ஊனமாகிறதே தமிழ்

இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் செல்லும் பிரபல்யமான இடங்களில் ஒன்றான உலகமுடிவு ஹெட்டன் பிளான்ற் தேசிய பூங்காவின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டுள்ள தகவல் பலகை இது.

இந்தப் பலகையில் சிங்கள மொழியில் கூறப்பட்டுள்ள தகவலை தமிழிலேயும் மொழிபெயர்த்திருக்கின்றனர், அந்தக் காரியாலயத்திற்குரியவர்கள். ஆனால் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருக்கின்ற தமிழை மிகவும் கேவலமான முறையில் பிழையாகவும் கொச்சைப்படுத்தியும் தகவல் பலகையில் எழுதப்பட்டுள்ளது.







திருத்தப்பட்ட வடிவம்

தயவுசெய்து அனுமதிப்பத்திரத்தை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்
வனஜீவராசிகள் பாதுகாவல் திணைக்களம்
ஹோட்டன்பிளேயின்ஸ் தேசியபூங்கா

# பாராளுமன்றமும் சர்ச்சைகளும்

## மக்களின் பன்முகப் பார்வை

கடந்த 08.06.2004 அன்று 13 வது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வு சபாநாயகர் ஜெ.எம்.லொக்கு பண்டார தலைமையில் நிகழ்ந்தது.அங்கு இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காகத் தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் வெள்ளவத்தைப்பகுதிக்குச் சென்ற போது அவர்கள் கொட்டித்தீர்த்த கருத்துக்கள்...

கார்த்திக் சுதன்.
வயது 23.
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

**நேற்று பாராளுமன்றத்தில் நடந்த சம்பவம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

நடக்கக் கூடாத ஒன்று நடந்திருக்கிறது. பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் சண்டை பிடிக்கவேண்டாம் என்று கூறுபவர்கள், பாராளுமன்றத்துக்குள் சண்டை பிடிப்பது வேடிக்கையாக உள்ளது. இந்தியப் பாராளுமன்றத்தில்தான் இவ்வாறான விசித்திரமான சம்பவங்கள் இடம்பெறும். அது இப்போது எமது பாராளுமன்றத்தினுள்ளும் புகுந்து விட்டது. ஜனாதிபதி சந்திரிக்கா ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு ஒதுங்கிக் கொள்வதே நல்லது.

எம். அலி.
வயது 30.
மீன் வியாபாரி.

**ஜே.வி.பி உறுப்பினர்கள் அதிகமாக இருப்பதுதான் பாராளுமன்றத்தில் பிரச்சினைகள் நிகழுவதற்கு காரணம் என்று நினைக்கின்றீர்களா?**

ஆமாம் நிச்சயமாக. ஜேவிபி உறுப்பினர்கள் ஏற்கனவே ரவுடித் தனத்திற்கு பெயர் பெற்றவர்கள். அவர்களினால்தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்கள் பாராளுமன் றத்திற் கு வருவதை எந்தச் சட்டமேனும் கொண்டு வந்து தடுத்தாக வேண்டும்.

க. நாகேஸ்வரன்.
வயது 70
ஓய்வு பெற்ற ஆசிரியர்.

**பாராளுமன்றம் கூடும் போதெல்லாம் பிரச்சினைகள் நிகழுவது வாடிக்கையாகி விட்டது பாராளுமன்றத்தில் பிரச்சினைகள் நிகழாமலிருக்க என்ன செய்யலாம்?**

இன்று விவஸ்தையே இல்லாமலாகி விட்டது, எவர் எவர் பாராளுமன்றம் செல்வதென்று. இதற்கெல்லாம் காரணம் எமது நாட்டு மக்கள்தான். எமது நாட்டு மக்கள் திருந்தாத வரைக்கும் எமது நாட்டு அரசியல் வாதிகளைத் திருத்த முடியாது. அத்தோடு எத்தரத்தை சார்ந்தவராக இருந்தாலும் அவர் பாராளுமன்றத்தில் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்வராயின் அவருடைய பாராளுமன்ற உறுப்புரிமையை உடனடியாக நீக்கிவிட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

மங்களேஸ்வரி.
வயது 40.
குடும்பத்தலைவி.

**காவி உடை தரித்த பௌத்த குருமார் பாராளுமன்றம் சென்றது பற்றி என்ன கருத்தினைக் கூறுவீர்கள்?**

நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் இன்று பௌத்த குருமாரின் பாராளுமன்ற வருகையைப் பற்றியே பரவலாகப் பேசப்படுகிறது. இதனால் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி பாராளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் பேசப்படுவது பூச்சியமாகிவிட்டது. இதைச் சாட்டாக வைத்து வர்த்தகர்கள் விலைகளை தாம் விரும்பியவாறு . கூட்டி விடுகின்றனர். பௌத்த குருமார் பாராளுமன்றம் சென்றது கண்டிக்கப்பட வேண்டிய தொன்றே.

வை. சர்மிதா.
வயது 19.
மாணவி.

**பராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கைகலப்பில் ஈடுபடுவது எந்த வகையில் மாணவ சமூகத்தை பாதிக்கின்றது என்பதை கூறமுடியுமா?**

ஆம், மாணவ சமூகமே நாளைய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று கூறும் அரசியல் வாதிகள் அந்தக் கூற்றினைக் கூறுவதற்கு இன்று தகுதியிழந்து நிற்கின்றனர். எனவே மாணவர்களாகிய நாங்கள் அரசியல் வாதிகள் கூறுவதை இனியும் கேட்டு நடப்பதற்கு தயாரில்லை. ஆயுத எழுத்து படத்தில் வருவது போன்று மாணவர்களே அரசியலில் ஈடுபட வேண்டும்.

ஏ.ஸீ.எம். ஜெஸ்மின்.
வயது 30.
தனியார் முகவர் நிலையம்.

**பாராளுமன்றம் பிரச்சினைகளினால் அடிக்கடி ஒத்திவைக்கப்படுவது எந்த வகையில் வர்த்தக சமூகத்தினரைப் பாதிக்கும்.?**

நாட்டுக்குத் தேவையான நல்ல சட்டங்களை உருவாக்க முடியாமல் போகின்றது. இதனால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. அத்தோடு எங்களுடைய வர்த்தக நடவடிக்கைகள் மந்த நிலையை அடைகின்றன.

சிவகுருநாதன்
வயது -75
ஓய்வுபொற்ற அதிபர்

**பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஒழுக்கவிதிகளை எவ்வாறு பேணச்செய்யலாம்?**

எதுவெல்லாம் நடக்கக்கூடதென்று பாராளுமன்றத்திற்குள் விதிகள் உள்ளனவோ அங்கு அவையெல்லாம் நடக்கின்றது. மக்கள் தெளிவுபெற்று எப்போது நாட்டின் நலன் கருதிச் சிந்திக்கிறார்களோ அப்போதே ஜனநாயகம் வளமடையும். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பொதுவான ஒழுக்க நெறிக்கோவை ஒன்றை அறிமுகம் செய்து அதனை அவர்கள் பின்பற்றச் செய்வதற்கான ஏற்பாடுகளை பாராளுமன்றச் சட்டங்களினுடாகச் செய்தல் வேண்டும்.

பிற்குறிப்பு.

15க்கும் அதிகமானவர்களிடம் பாராளுமன்ற சம்பவங்கள் பற்றி கருத்துக்களைக் கேட்ட போது சுமார் 7 பேர் அளவிலேயே தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

*தொகுப்பு - அன்ஸிர்.*

# ஊமைப்பேச்சுக்கள்

எம்.ஆர்கே

## ஓட்டுப்போட்டால் பிழை என்டு அர்த்தம்

ராமு:- வாப்பா சோமு என்ன கொஞ்சநாள இந்த பக்கமே வரல என்ன சங்கதி.?

சோமு:- என்ன ராமண்ணே அப்படி சொல்லிட்டிங்க, நம்ம நிலமையை பத்தித்தான் உங்களுக்கு தெரியுமே அதுநால இப்ப இருக்கிற நெலமையில எங்கண்ணே வெளியில வரமுடியிது.

ராமு:- நீ என்ன சொல்ர? கடன்காரன் தொல்லையா?

சோமு:- சரியா கண்டு பிடிச்சிங்க. ஒரே பொருளாதார சிக்கல், சில நாட்களில அடுப்பு கூட பத்த வைக்கிறது கூட கேள்வி குறியா இருக்கு.

ராமு:- என்ன சோமு பேசுர நீ. சோம்பேறியா வீட்ட சுத்தி வந்தா சோறு தேடிவருமா நீதான் நாலு இடத்தில கஸ்டப்பட்டு வேலை செய்து உழைக்கனும் அப்பத்தான் நிம்மதியா வாழ முடியும்.

சோமு:- ஏன் சொல்ல மாட்டீங்க நா என்ன சோம்பேறியா? நானும் மாடா வேலை செய்றன் ஆனா கரை சேர்ந்தபாடில்ல

ராமு:- சரி மாடா உழைக்கிற என்று சொல்ர இதுக்கு எல்லாம் என்ன காரணம் என்று நீ நினைக்கிற அதையாவது சொல்லு.

சோமு:- வேற என்ன முன்னைய விட இப்ப விலைவாசி கூடிப்போச்சி. அத்தியாவசிய பொருட் களின் விலை கூடியதுதான் இந்த கஸ்ர நிலைமைக்கு முதற்காரணம்.

ராமு:- அப்போ விலைவாசி மட்டும்தான் கூடுது, சம்பளம் மட்டும் கூடவே மாட்டேங்கிது 'அப்படித்தான் சொல்ல வாற.

சோமு:- ஆமாண்ணே நீங்க அறிவாளி கண்டு பிடிச்சிட்டீங்க. ஆனா யாருக்கு புரியணுமோ அவங்களுக்கு புரியலையே புரியவும் மாட்டேங்குதே.

ராமு:- சரி யாருக்குத்தான் புரியனும் சொல்லு.

சோமு:- அதாண்ணே! என்ன தெரியாத மாதிரி கேக்கிறீங்க. நம்மல நல்லவழி நடத்துவோம். நாட்டை அபிவிருத்தி அடைய வைப்போம். மக்களின் வறுமையை ஒழித்து அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவோம் என்று சொன்னாங்களே! அவுங்கத்தான்.

ராமு:- அட்டா நீ நம்ம தலைவருமாருங்கல சொல்றியா? சரி அத எப்ப சொன்னாங்க?

சோமு:- எண்ணன்ணே! தேர்தல் காலத்தில இததான் சொன்னாங்க.

ராமு:- தேர்தல் முடிஞ்சி போயிரிச்சி இல்ல. அந்த வார்த்தை எல்லாம் இனி அடுத்த தேர்தலுக்குதான் தேவைப்படும். இப்ப பதவி கிடைச்ச சந்தேசத்தில அந்த வாக்குறுதி எல்லாம் மறந்திட்டாங்க.

சோமு:- என்ன இப்பிடி சொல்லிட்டிங்க அப்ப அவுங்க கொடுத்த வாக்கறுதி எல்லாம்...?

ராமு:- அதோ கெதிதான். வாக்குறுதிய நினைத்துப்பார்க்கவே டைம் இல்ல அவுங்களுக்கு.

சோமு:- அய்யயோ அந்த வாக்குறுதியை நம்பித்தான் ஓட்டு போட்டோம்.

ராமு:- என்ன போட்ட "X" தானே, அப்படின்னா பிழை என்று அர்த்தம். அதத்தானே இப்ப அவுங்க செய்துகிட்டு இருக்காங்க.

சோமு:- சரி ராமண்ணே தேர்தல் வராமையா போயிடும். அப்ப எங்ககிட்டதானே வந்தாகனும். என்ன 5 வருசம் காத்திருக்கனும்.

ராமு:- 5 வருசமா? எதுக்கு

சோமு:- எண்ணன்ணே இங்கு அப்பத்தானே இன்னொரு தேர்தல் வரும்.

ராமு:-அட நீ வேற. இப்பெல்லாம் மாசாமாசம் தேர்தல் நடக்குதப்பா அடுத்த மாசம் கூட மாகாணசபைத் தேர்தல், தெரியாதா உனக்கு?

சேமு:- எண்ணன்ணே சொல்றீங்க

ராமு:- அப்ப ஐந்து வருசம் இருக்கனும். இப்ப அப்படி இல்லதானே இதுக்கூட நல்லதுதான். ஏன்னா முதல் தேர்தல் பொய் சொன்னா, அதே வருசத்தில நடக்கிற இன்னொரு தேர்தல்ல கேக்க முடியும். அதுநால பிரச்சனை தீருமல்ல.

சேமு:- என்னணே சொல்ரிங்க செலவு அதிகமா இருக்கும் அதான் தேர்தலுக்கு எல்லாம் மில்லியன் கணக்கில செலவாகுதாமே.

ராமு:- சரியா சொன்ன. இருக்காதா பின்னே எத்தனை பேர் வேலை எவ்வளவு பாதுகாப்பு

சேமு:- இந்த தேர்தல் காலத்தில செலவுகளை குறைஞ்சி நாட்டின் அபிவிருத்திக்கு செலவழிச்சா எவ்வளவு நல்லா இருக்கும்.

ராமு- நானும் அதுதானே கேக்கிறன். பிரதான இரண்டு கட்சிங்க தங்களுடைய பலத்த காட்ட நினைக்கும்போது இடையில சிக்கி பொதுமக்கள் படுர துன்பத்தை உணர்ராங்க இல்ல.

சோமு:- ஆனால் தேர்தல் காலத்தில மட்டும் நாங்கள் மக்கள் மனமறிந்தவர்கள் சேவர்கள் தொண்டர்கள் என்று சூலுரைப்பாங்க ஆனால் செய்கையில எப்பவுமே எதிர்மறைத்தான்.

ராமு:- சோமு நாட்டில. கைத்தொழில் அறிமுகப்படுத்தி அதன் மூலம் வேலை வாய்ப்பை வழங்கி மக்களை சந்தோசப் படுத்தினாலே அதுவே பெரிய பலம்தான் எந்த ஒரு இலங்கை குடிமகனும் தானும் தன்நாடும் பின்நிற்க வேண்டும் என்று நினைக்க மாட்டான்.

சோமு:- சிலு பேர் சொல்ராங்க. திரும்பவும் 1975 காலப்பகுதி பஞ்சம் வந்திடுமென்னு

ராமு:- அட அதுக்கு காரணம் என்ன தெரியுமா? தன்னிறைவு பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தியது. அது தவறில்லை ஆனா அத செய்ய முன்ன அதுக்கு தேவையான எல்லா வசதிகளையும் செய்திருக்கணும்.

சோமு:- அதுக்கு அப்புறம் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வந்து நிறைய வெளிநாட் டவர்கள் முதலீடு செய்து கைதொழிலை தொடங்கினாங்க அப்பதானே சில பேருக்கு வாழ்க்கையே ஆரம்ப மாச்சி. நாட்டை அபிவிருத்தி செய்யணும் என்று சொன்னா மக்கள் அபிவிருத்தி அடையணும்.

ராமு:- அதான் பாரேன் எல்லாம் கூட்டிவிட்டு தேர்தல் நடத்தினாங்க எங்களுக்கு தேவையானது நிம்மதியான வாழ்க்கை. எல்லாரும் விரும்பிரது இது தானே. விலை வாசியை குறைச்சி எங்களுடைய கஸ்டத்தை போக்காத் தலைமைத்துவம் இருந்து என்ன பயன்.

சோமு:- பொதுமக்கள் பாடு திண்டாட்டமென்றால் எத்தனை தேர்தல் வைத்தும் பயனில்லை.

# முன்பள்ளி மாணவர்களுக்கான உடுதுணி வழங்கல்

*-வவு நிரூ-*

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழர்களின் குறைகளை இனங்கண்டு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அதன் ஒரு நடவடிக்கையாக,

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுக் கிளைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட உடுபுடவைகளை 18-06-2004அன்று வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் தலைமையில் சிதம்பரபுரம் முகாம்முன்பள்ளி மாணவர்கள் 98 பேருக்கு வழங்கப்பட்டது இந்நிகழ்வில் வவனியா தெற்கு வலய முன்பள்ளி இணைப்பாளர் சி.அருள் வேல்நாயகி கணக்காளர் இ.ஜெயநந்தினி, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஊடகவியலாளர் ச.மயூரனும் கலந்து கொண்டனர்

அதேவேளை இந்நிகழ்வு சுந்தரபுரம் சர்வசக்தி முன்பள்ளி மாணவர்கள் 60 பேருக்கும் இந்த உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

# நுண்நிதி தொடர்பான பயிற்சி நெறி

*ச.மயூரன்*

நுண்நிதி தொடர்பான சிறந்த செயன்முறைகளும் தற்போதைய சூழலில் அதன் பொருத்தப்பாடும் என்ற தலைப்பில் தொடர் வேலைத்திட்டபயிற்சி பட்டறையின் ஒரு நிகழ்வாக 17ம்,18ம்திகதிகளில் வவுனியா டெனிஸ் அகதிகள் பேரவையால் வவுனியாவிவசாய பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.

டெனிஸ் அகதிகள் பேரவை தங்கள் வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் நிறுவனங்களின் வெளிக்கள ஊழியர்களுக்கு நுண்நிதி உத்தியோகஸ்தர்களான கமலதாஸ், தீபன் என்பவர்கள் விரிவுரைகளை நடாத்தினார்கள் இதில் 15க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

இணைந்த பிரதிநிதித்துவமுள்ள வழி நடாத்தும் பொறிமுறை ஒன்றின் அவசியம், கடன்சேமிப்பு ஒழுங்கு விதிகள், நுண்ணிநிடவடிக்கையில் கண்காணிப்பு முறை, கற்றவற்றை ஆவணப்படுத்தல் போன்றவைகளில் பயிற்சியழிக்கப்பட்டது.

# இரண்டு சிங்கள நூல்கள் வெளியீட்டு விழா

*-வவு நிரூ-*

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டு கழகத்தால் 20.06.2004 காலை 10.30 மணியளவில் வவுனியா கூட்டறவு சங்கமண்டபத்தில் நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. க.வே.பாலகுமாரின் "மாளனித்திருந்தவர் மனக்குரல்" க.கங்களின் "வன்னியில் இருந்து ஓர் மடல்" என்ற சிங்கள மொழியிலான நூல்கள் வெளியிடப்பட்டன.

இந்நிகழ்விற்கு வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானவேல் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக வன்னிமாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கிசோர் அவர்களும் கலந்து கொண்டார்.




## மகாவலியமைச்சு ம.வி.மு வசமானதால் பாதிக்கப்படுகிறது மலையகம்.

பதின் மூன்றாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிவு இனவாதத்தை தலையில் சூட்டி சிறுபான்மை இனத்தை புறம்தள்ளி தொங்கு பாராளுமன்ற ஆட்சியை அமைத்து இருப்பது புதுமையாகத்தான் உள்ளது. இதுவரை காலமும் இலங்கையின் அரசியலின் ஆட்சியமைப்பில் தூண்களாக இருந்த மலையக தமிழ் சக்திகளின் உறுதுணைகள் இனித்தேவையில்லை என ஒரு நிலை உருவெடுக்கிறது. இந்த நிலை சிறுபான்மை யினருள் குறிப்பாக தமிழருக்கான அபாய சமிக்ஞையாகக் கூட உள்ளது. அதிலும் மலையகத் தமிழர்களின் எதிர்காலம் சூன்யமாகக் கூடிய துர்ப்பாக்கிய நிலையை இன்றைய அரசியல் சூழ்நிலை திரைம றைவில் காட்டுகின்றது.

பதின்மூன்றாவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவு கூட வித்தியாசமான அரசியல் சூழ்ச்சிகளை வெளிக் காட்டு கின்றது. அதற்கு முன்னே 13வது பாராளுமன்றத்தின் அம்மைச்சரவைகள் நியமிப்புக்கூட சிக்கல்களை தோற்றுவித்தது. ஸ்ரீ.ல.சு.க - ம.வி.மு கூட்டு அரசாங்கமான ஐ.ம.சு.கூ அரசாங்கத்தில் பல அமைச்சுகள் ஜனாதிபதி வசமே இருக்கின்றன. இடது சாரிகள் என்ற இனவாதிகளான ம.வி.மு (J.V.P) இம்முறை பலத்த வெற்றியை சந்தித்துள்ளது. அத்துடன் இதன் எதிர்காலவளர்ச்சிகூட சுபீட்சமாகவே அமையப்போகிறது இனவாதப் போக்கால் பேரினத்தை தம்வசபடுத்தியதால் ஐ.ம.சு.கூ அரசாங்கத்தில் ம.வி.மு (J.V.P) நான்கு அமைச்சுக்களையும் நான்கு பிரதி அமைச்சுகளையும் பொறுப்பேற்க உடன் பட்டது. ஆனால் ம.வி.மு கல்வி அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் தம்வசம் கேட்டபோதும் ஜனாதிபதி அம்மையார் அவ்விடயத்தை சுமுகமான முடிவுக்குக் கொண்டுவந்தார். ஆனால் மகாவலி அமைச்சை தமக்கு வழங்காவிடின் தாங்கள் அமைச்சு பதவியேற்கமாட்டோம் என்றிருந்தது. இந்த இழுபறிநிலை தொடர்ந்தது. ஆனாலும் ஜனாதிபதி அம்மையார் ஸ்ரீ.ல.சு.க வசமே மகாவலி அமைச்சை வைத்திருக்க திட்டமிட்டார். இறுதியில் பேச்சுவார்த்தை அடிப்படையில் மகாவலி அமைச்சின் பிரதி அமைச்சையும் மகாவலி அதிகார சபையையும் ம.வி.முக்கு வழங்க உடன்பட்டு வழங்கப்பட்டது.

இனிப்பார்ப்போம் மகாவலி அமைச்சுக் காக ஏன் இவ்வளவு பிடிவாதமாக (ம.வி.மு நின்றது பற்றி! அதற்கு முன் ம.வி.மு. பொறுப்பேற்ற அனைத்து அமைச் சுக்களும் கிராமப்புற மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அமைச்சுக்களே. அதன் மூலம் தென்னிலங்கையின் கிராமிய சிங்கள மக்களின் ஆதரவை பெற்று எதிர்வரும் காலத்தில் ம.வி.மு. அசைக்கமுடியாத சக்தியாக மாறும் என்பதில் ஐயமில்லை மகாவலி அமைச்சு முழுவதும் அபிவிருத்தியுடன் தொடர்புபட்டது. ஒரு காலத்தில் மகாவலி அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்க அந்த அமைச்சு மூலம் எவ்வளவு மக்கள் செல்வாக்கை பெற்றார் என்பது தெரியும். அதன்மூலமே ஐ.தே.க வின் தலைமைப்பதவிக்கும் சவாலாக அமைத்து அன்று அரசியலை சவால் விட்டார் என்பதும் யாரும் மறந்துவிட முடியாது.

மகாவலி அமைச்சுவசம் இலங்கையின் அதிகளவான காணியுள்ளடக்கப்பட் டுள்ளது அத்தோடு மகாவலி அமைச்சுக்கு வெளிநாட்டு உதவிகள் உள்ளது அதுமட்டுமல்லாது மகாவலி அமைச் சுக்காக விசேட பயிற்சிபெற்ற இராணுவ அணிகூட உள்ளது. இவையனைத்தும் ம.வி.மு வசம் சென்றால் ம.வி.மு இராணுவரீதியான பலத்தைப் பெற்று இராணுவ புரட்சிமூலம் இலங்கையின் அரசியலைக் கூட கைப்பற்றலாம். கல்லோயா அபிவிருத்தி திட்டமென ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமே மகாவலி திட்டமாக மாறியது, இதன் மூலமே தமிழர் இனஅழிப்புத் திட்டங்கள் பலவும் அவ்வாறான மகாவலி அபிவிருத்தித் திட்டத்திலே தமிழ் பிரதேசமான திருகோ ணமலையில் சிங்களவர் குடியேற்றப் பட்டனர் அதுமட்டுமல்லாமல் திருகோண மலை மவட்டத்தின் அரசியலில் பாராளுமன் றத்துக்கு ஒரு சிங்கள உறுப்பினரை தமது பிரதேசத்தில் தெரிவு செய்யக்கூடிய வகையில் சேருவில குடியிருப்பு உருவாக்கப்பட்டது. அதுமட்டு மல்லாமல் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தாலே கிழக்கில் மட்டக்களப்பின் நிலப்பரப்பு குறைக்கப்பட்டு அம்பாறை எனும் சிங்கள பேரினசக்திகளின் பலத்தைப் பலப்ப டுத்தினர். இவை எல்லாம் மகாவலி அமைச்சு செய்த தமிழர் இன அழிப்பாகும்.

அதுமட்டுமல்லாமல் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தாலே விக்டோரியா, கொத்மலை நீர்தேக்க நிர்மாணிப்பில் மலையகத் தோட்டப் புறங்கள் பல சுவீகரிக்கப்பட்டது அதுமட்டு மல்லாமல் இந்த தோட்டப் புறங்களில் வாழ்ந்த மலையகத் தமிழர்கள் தொழில்வாய்ப்பின்றி அழிய சிலர்மட்டும் வேறு தோட்டங்களில் தொழிலற்றுத் துன்புறுகின்றனர்.

இம்முறை தேர்தலில் மலையக மக்கள் ஐ.தே.க, இ.தொ.கா. ம.ம.மு போன்றவற்றிற்கு வாக்களித்தனர் என்பதனால், ம.வி.மு மலையக தமிழர் மீது வெறுப்புடனேயே உள்ளனர் மேலும் மகாவலி அமைச்சு மூலம் மலையகத் தோட்டத் தொழிலா ளர்களின் தொழில்வாய்ப்பை குறைத்து மலையகத் தமிழர்களை அழிப்பது உறுதி... எனவே மலையக தமிழர்கள் ஒன்றி ணையாத இடத்துமலையகத்தின் எதிர்காலத்தை ம.வி.மு. சூன்யமாக்கும். மலையகத் தமிழர்கள் விழிப்படை யவேண்டும்.

## கலாசாலை மூடப்பட்டதால் கண்ணீர் வடிக்கும் கல்விப்பயிலுநர்கள்

-M.R.கிருஸ்ணன்-

மலையகத் தமிழர்கள் இன்று இரண்டு தசாப்தங்களையும், ஐந்து தலைமுறைகளை பூர்த்தியாகவும் கண்டிருக்கின்றனர். இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் வெள்ளையர்கள் ஆட்சிக்காலத்தில் தினக்கூலிகளாக கொண்டு வந்து விடப்பட்ட எமது சொந்தங்கள் இன்றுவரை பல இன்னல்களைத் தாண்டி முன்னேறி வருகின்றனர். ஆனால் இப்போது எம்மவர்களின் எதிர்காலம் மீண்டும் இருநூறு ஆண்டுகளைப் பின்நோக்கி பயணித்துவிடுமோ என எண்ணத்தோன்றும் வகையில் இன்றைய மலையகப் படித்த இளைஞர் யுவதிகளின் வாழ்க்கை வெறும் கேலிக்கூத்தாகப் போகிறது.

அன்னியர்களின் ஆட்சிக்காலத்தில் எம்மக்களைப் படிக்கவிடாது அடிமைப் படுத்தி தேயிலைக்கு இரையாக்கினார்கள். அப்போது விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் கல்வியை தொடர்ந்து, தனக்குபின்னர் எம் சமூகம் வளர்ச்சியடைய வழி செய்தனர். படிப்படியாக முன்னேறி மலையடிப் பாதைகளில் எத்தனையோ துன்பங்களை அனுபவித்து பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து இன்று பல்கலைக்க ழகம்வரை முன்னேறி வந்திருக்கின்றது.

ஜேர்மன் அரசின் கருணையால் 1992ம் ஆண்டு ஆசிரிய கலாசாலை அமைத்துக் கொடுக்கப்பட்டது. அதன் நோக்கம் அங்கு பயிற்சி பெற்ற எமது ஆசிரியர்கள் தொழில் வாய்ப்பு பெற்று எமது மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதாகும். இதன்மூலம் மலையகத்தில் வேலைவாய்ப்பு பிரச்சனை ஓரளவு குறைவதுடன் எமது மக்களுக்கு சேவையும் கிடைக்கின்றது. 1992ம் ஆண்டு முதல் நல்ல முறையில் இயங்கி வந்த இந்த பத்தனை ஸ்ரீபாத ஆசிரியகலாசாலை அண்மைக் காலமாக பல வகையான பிரச்சனைகளைத் தோற்றுவித்து நிர்வாகத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு எமது மாணவர்கள் பலியாகின்றனர்.

நிர்வாகத்தில் ஏற்படும் பிரச்சனைகளை அவ்வப்போது எடுத்துகாட்டி அதன் மூலம் சுமூகமான முடிவினைப் பெற்றுக்கொண்டது. சிலகாலம். ஆனால் இப்போது பிரச்சனை நிர்வாகம் என்ற அளவிற்கு பிரச்சனைகள் உச்சகட்டம் அடைந்து விட்டன. இதனைக் கண்டித்து ஒரு கவனயீர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது. ஆதலால் எமது மக்கள் பல விதமான மரண வேதனைகளை அனுபவித் திருக்கின்றனர். இன்றுவரை இக்கல்வியகம் திறக்கப்படவில்லை.

இதே வேளை அங்குள்ள பிரச்சனைகள் அனைத்தும் உண்மையானது. அவை ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டும் இருக் கின்றன. ஆனால் அவை நிருபிக்கப்பட்டும் அதற்கு எவ்வித நடவடிக்கையும் அரசு எடுக்காமல் இருப்பது விசனத்துக்குரியது. இதை கவனத்தில் கொள்ள கவனயீர்ப்பு போராட்டம் நடாத்தப்பட்டது. ஆனால் நாம் பிரஜாஉரிமை பெற்று விட்டோம் இந்நாட்டில் எல்லா விதமான சுதந்திரமும் எமக்கு இருக்கின்றது என்று தேர்தல் காலத்தில் கூறிய தலைவர்களை அப்போது கண்டிருந்தால் எம்மக்கள் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டி இருப்பார்கள். எமக்கு பிரஜாஉரிமை கொடுக்கப்பட்டது உண்மையானது. நாம் மறுக்கவவில்லை. ஆனால் அந்தக்கவன ஈர்ப்பு போராட் டத்தில் எமக்கு சுதந்திரம் பறிக்கப்பட்டது இதை கண்டித்து எவருமே எந்த மலையக தலைவருமேகுரல் கொடுக்கவில்லை. நாம் வாய்மூடி இருந்தால் மட்டுமே மலையக தலைமைகள் நிலைக்க முடியும் என்பது புரிந்து கொள்ள வேண்டும். பிரதான கட்சித் தலைவர் ஒருவர் சொல்லி இருக்கிறார் "இத்தனை பிரச்சனைக்கும் காரணம் புல்லு வெட்ட வேண்டியவன் எல்லாம் படிக்க போனால் இதுதான் நடக்கும்" என்று நாம் புல்லுவெட்ட போனால் மாத்திரமே அவர்கள் அங்கு ஏசி ரூமிலும் காரிலும் ஏன் சோற்றில் கூடக்கை வைக்கலாம் என்பதை மறந்துவிட்டு பேசுவது தவறு என்று மலையகத்தில் பொறுப்பு வாய்ந்த பெற்றோர் ஒருவர் தெரிவித்தார்.

எம்முடைய மலையக இளைஞர் யுவதிகளின் கல்வி நிலையில் அரசாங்கமோ மலையகத் தலைமைத்துவமோ ஏன் மௌனம் சாதிக்கின்றது. என்று தெரிய வில்லை தற்போது தேயிலை தோட்டத்தில் வேலை செய்ப வர்களின் தொகை குறைந்து கொண்டு வருவதாக ஒரு கணிப்பு கூறுகின்றது. எனவே அரசாங்கத்தினதும். மலையகத் தலைமைகளினதும் நோக்கம் எம்மைப் போன்றே எமது எதிர்கால சந்ததிகளையும் எம்முடைய நிலைக்கு தள்ளத்தான் இந்த மௌனமா? எனத் தாய் ஒருவர் கேள்வி எழுப்புகிறார்.

பொதுவாக மலையக மக்கள் அன்று முதல் இன்றுவரை ஒரு புறக்கணிக்கப்பட்ட சமூகமாகவே இருக்கின்றனர். எம்மவர்களின் பொறுமைதான் பலரை மேடைகளில் பேச வைக்கின்றது. இன்று எமது நாட்டில் சமாதானம் தலைதூக்கி விட்டது. அதனால் வடகிழக்கில் பல துன்பங்களை அனுபவித்த எமது சொந்தங்கள் இன்று சந்தோசக் காற்றை அனுபவிக்கின்றனர். இதற்கானகாரணம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே நிலையான ஒரு தலைமைத்துவம் அவ்வாறான ஒரு நல்ல தலைமைத்துவம் ஒன்று மலைய கத்திற்கு என்று கிடைக்கும் அன்றுதான் நாமும் உரிமை உடையவர்களாகவும், சுதந்திரம் பெற்றவர் களாகவும் வாழலாம். துணிந்து ஒருவன் குரல் கொடுத்தால் அவனுக்கு தோள் கொடுக்க தயாராய் நிற்கிறது இளைய சமுதாயம்.

## வெண்புறா வீழ்ந்தது சகுனம் சரியில்லையா

-லஜப்ரதா-

சமாதானத்தின் ஆதரவும் பயிற்சி நடவடிக்கையும் அங்குரார்ப்பண வைப வமும் அண்மையில் (கடந்த சனிக்கிழமை 12) குக்குலே கங்கையிலே நடைபெற்றது. இந்த நிகழ்வின்போது முன்னாள் பிரதமரும், இன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரத்ன சிறி விக்ரம நாயக்க வெண்புறா ஒன்றை பறக்க விட்டார். ஆனால் இந்த வெண்புறா பறக்காமல் கீழே விழுந்து சகுன சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது. உடனேயே புறா விழுந்தது பற்றிய உயர்மட்ட விசார ணைக்காக விசாரணைக் குழுவிடம் உத்தரவிட்டார் இராணுவ தளபதி லயன்ஸ் பலகல்ல.

இந்த வைபவத்தின் அதிதிகளாகக் கலந்து கொண்ட அமெரிக்க இராணு வத்தின் பசுபிக் தளபதி ஜேம்ஸ் எல்.கம்பெல், மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் ஆகியோர் பறக்க விட்ட புறாக்கள் உற்சாகமாகப் பறந்த வேளையில் நமது நாட்டின் பாதுகாப்பு அமைச்சரினால் பறக்க விடப்பட்ட புறா மட்டும் பறக்காமல் கீழே விழுந்தது. காரணம் அறியப்பட்டபோது அப்புறாவின் கழுத்து முறிபட்டு இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் விக்ரம நாயக்காவிற்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், ஊடகங்களிலும் சமாதானத்தின் சின்னம் வெண்புறாவை பாதுகாப்பு அமைச்சர் பறக்க விட்ட போது அது இறந்து கீழே விழுந்தது பெரும் அபசகுனம் என்று வர்ணித்து செய்திகளை வெளியிட்டமையும் நாட்டு மக்களிடையே பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் புறா தொடர்பான நாசகாரச் செயலில் ஏதாவது மர்மங்கள் இடம் பெற்றி ருக்கின்றதா என்பதை ஆராய்வதற்காக மேஜர் அசித பண்டார தலைமையில் மூன்று பேர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்ட்டுள்ளது. இந்த விசாரணை தொடர்பாக இதுவரை கிடைக்கப்பெற்ற தகவலின்படி அப்புறாவைக் கூட்டுக்குள் இருந்து எடுத்தபோது அது உயிருடன் இருந்ததாகவும், பின்னர் அதனைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் கையளித்த போதும் அது உயிருடனே இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் புறா உயிர் இழப்பு தொடர்பான விசாரணைகள் இன்னும் நடந்த வண்ணம் தான் இருக்கின்றது. பொதுவாக நமது நாட்டவர் சகுணம் பார்ப்பதில் அதீத நம்பிக்கை யுள்ளவர்கள். இந்த வகையில் தான் வெண்புறா வீழ்ந்ததை அடுத்து கவலை கொண்டுள்ளார்கள். சமாதான முயற்சிகள் மீண்டும் தடங்கலாகி நாள் ஆக ஆக அது போராக வெடித்துவிடுமோ என்பதுதான் அவர்களின் பயம்.

சகுனம் ஒருபுறம் இருக்க நமது நாட்டு மக்களை வியப்பில் ஆழித்தியிருக்கும் விடயம் என்ன தெரியுமா? விலை மதிப்பற்ற மனித உயிர்க் கொலைகள் பெருகிக் கொண்டு போகும் நமது நாட்டிலா ஒரு புறா விடயத்தில் அதிக அக்கறை கொள்கின் றார்கள். ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் சுட்டுக்கொல்லப்பட்ட போதோ அல்லது சாதாரண ஒரு குடிமகன் நடுவீதியில் வைத்து கொலை செய்யப்படட போதோ அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை அமைத்ததுதான். ஆனால் அந்த விசாரணைக் குழு இன்று வரை ஏதாவது அறிக்கையினை வெளியிட்டிருக்கிறதா? பிரதிப் பாதுகாப்பமைச்சர் கையினால் விடப்பட்ட புறா இறந்த நிலையில் கீழே விடப்பட்டதாம். இதற்கு 3 பேர் அடங்கிய மேஜர்தலைமையிலான குழு விசாரணைக் காக நியமிக்கப்பட்டுள்ளது. ஒரு விடயம் மட்டும் தெளிவாகின்றது. ஒரு கொலை செய்யப்பட்ட நபரோ, கொலை இடம்பெற்ற இடமோ இவை எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு அதன் பெறுமதிக்கேற்ப தான் இந்த விசாரணைக்குழுவின் தன்மையும் அது வெளியிடும் அறிக்கையின் வேகமும் அமையும் என்பது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சமாதான பேச்சுவார்த்தை ஒரு முடிவுக்கு வந்தாலோ அல்லது இன்னு மொரு போர் ஆரம்பித்து நாட்டுப் பிரச்சனை ஒரு வேளை முடிவுக்கு வந்தாலேயன்றி புறா தொடர்பான விசாரணை முடிவிற்கு வர நீண்ட காலம் செல்லும்.

நர்ஸ் : "டாக்டர்! அந்த ஆறாம் நம்பர் பேஷண்ட் என் கன்னத்திலே முத்தம் கொடுத்திட்டான்."

டாக்டர் : "அந்த ராஸ்கேலை என்ன பண்ணினே?

நர்ஸ் : "சும்மா விட்டுடு வேனா! நானும் ஒண்ணுக்கு மூணா திருப்திக் கொடுத் திட்டு வந்துட்டேன்."



# சிறுவர் அரங்கம்



## குறளும் பொருளும்



குறள் :"மனத்தொரு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய் வாரின் தலை" (அதி:30-குறள் 295)

பொருள் :ஒருவன் தன் மனதோடு பொருந்துமாறு உண்மை பேசுவானானால், அவன் தவமும் தானமும் செய்பவர்களைவிட சிறந்தவனாவான்.

## தந்தையின் சோதனை!

பெரும் பணம் படைத்த ஒரு கிழவர் தனிக்குடித்தனத்திலே வாழ்ந்துவரும் தனது மூன்று பிள்ளைகளின் பகுத்தறிவைச் சோதிக்க விரும்பினார். அதன் காரணமாக தன் பிள்ளைகளை அழைத்து ஒவ்வொருவருக்கும் சம அளவில் பணம் கொடுத்து இந்தப் பணத்தைக் கொண்டு நீங்கள் உங் கள் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் வாங்கலாம், ஆனால் அந்தப் பொருள் வீடு நிறைய இருக்க வேண்டும் என்று நிபந்தனையும் விதித்தார். ஒரு வாரம் கழித்து தன் பிள்ளைகள் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்வையிட ஒவ்வொரு பிள்ளைகளின் வீட்டிற்கும் சென்றார்.

முத்த பிள்ளை வைக்கோலை வாங்கி வீட்டை நிறைத்திருந்தான். இரண்டாவது பிள்ளை சில விலையுயர்ந்த பொருட்களை வாங்கி பணத்தை எல்லாம் செலவு செய்து விட்டான். முன்றாவது பிள்ளையோ புன்முறுவலுடன் தந்தையை வரவேற்றான். ஒரு சின்னஞ்சிறு அழகான விளக்கு அவனுடைய வீடு முழுதும் ஒளி வீசி நிறைவைக் காட்டியது தந்தை மகிழ்ச்சி அடைந்தார்.

ஆகவே சிறுவர்களாகிய நாங்களும் கெட்ட விடயங்களை ஒதுக்கி நல்லவற்றைத் திறமையானவற்றை செய்து சிறப்பாக வாழ வேண்டும்.

*கே. எல். ஹில்மி*
*கலைப்பூங்கா*

## முன்யோசனை தேவை

முன்னொரு காலத்தில் சத்யஜித் என்ற மன்னன் சத்தியம் நீதி, நேர்மை ஆகியவை தவறாமல் தனது அரசாட்சியை நடாத்தி வந்தான். இவர் அரசனாக இருந்தாலும் மக்கள் அன்றாடம் கடினமாக உழைக்கும் பொருட்டு என்ன சம்பளம் பெறுகின்றார்களோ அதே போல் மன்னனும் தனது சேவை யின் சம்பளமாக மூன்று பொற் காசுகளை பெற்றுக் கொண்டான். இவர் உலகத்திற்கு வேண்டுமானால் மன்னனாக இருக்கலாம். ஆனால் அவ்வூரில் இவர் தான் மக்களின் சேவகர் என்பர்.

தினந்தோறும் மாலையில் அரசாங்க கருவூல அதிகாரி மன்னனின் சம்பளத்தை எடுத்து வந்து விடுவான். அந்த வருடம் தீபாவளிப் பண்டிகை நெருங்கியது. எனவே அரசி மன்னனிடம் கூறினாள் "பிரபு தினசரி நீங்கள் பெறும் சம்பளம் இதுவரை நம்மைக் காப்பாற்றி வந்தது. ஆனால் தீபாவளி வந்து விட்டது. இதை குடும்பத்துடன் கொண்டாடுவதற்கு நம்மிடமோ காசு இல்லை. அரண்மனை கருவூலத்திலிருந்து மூன்று நாள் சம்பளத்தை முன் பணமாக வாங்கினால் பண்டிகையைக் கொண்டாடிவிடலாம்" என்றாள் மனைவி. மனைவியின் வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டார் சத்தியஜித்.

"அன்பே உன் மனதில் பட்டதை தைரியமாக கூறியதற்கு பாராட்டுக்கிறேன். ஆனால் நீ சொல்வது உன் நிலையில் மட்டுமே சரி. நான் அதை தவறு என்றால் நீ அதை ஏற்றுக் கொள்வாயா? என்றான் அரசன்.

"நீ சொன்னது போல் கருவூல அதிகாரியை அழைத்து பணம் கேட்டால் அவர் அதை உடனே செய்து முடிப்பார். ஆனால் அதைச் திருப்பிச் செலுத்துவதுதான் எப்படி? நான் அவ்வாறு செய்த பிறகு உடனே இறந்து விட்டேன் என்று வைத்துக்கொள். அப்போது மக்களின் சொத்தை அந்த மூன்று நாள் ஊதியத்தை எவ்வாறு கருவூலத்தில் சேர்ப்பாய். இது எனக்குப் பாவத்தைச் சம்பாதித்துக் தரும் காரியம் அல்லவா?" உடனே அரசி "அரசே! ஒரு விடயத்தை நாலாபுறமும் யோசித்து அலசி ஆராய்ந்தே முடிவு செய்ய வேண்டும் என்பதிலிருந்து தவறிவிட்டேன். எத்தனை பெரிய உண்மையை கூறினீர்கள். என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள்.

அரசர் புன்னகை புரிந்தார். இன்று இருப்பவர் நாளை இல்லை என்ற பெருமை உடையதே இவ்வுலகு. எனவே எல்லாவற்றிலும் முன்யோசனை தேவை.

## 'செக்ரடரி' பறவை

ஆப்பிரிக்காக் கண்டத்தின் பல பிராந்தியங்களில் காணப்படும் 'செக்ரடரி பர்ட்' என்னும் பறவையைக் கண்டாலே பாம்பினங்களுக்கு வயிற்றைக் கலக்குமாம். ஒரு மீற்றருக்கு மேல் உயரமுள்ள இப் பறவை




க்கு, அதன் தலையின் பின்புறமிருந்தே நீண்டு வளர்ந்த சிறகுகள் உண்டு. மிகவும் பலம் வாய்ந்த ஒரு பறவையான இதற்கு, சற்று பயங்கரமான வளைந்த அலகு உண்டு. விஷப் பாம்புகள் உட்பட எந்தப் பாம்மைக் கண்டாலும் இது விட்டு வைக்காது. பறவை இனத்தில் மிகவும் சுறுசுறுப்பான பறவையாக இது கருதப்படுகிறது. மிருதுவான உடலமைப்பு காரணமாக, பாம்புகளைக் கால்களால் இழுத்து, லாவகமாகக் கொண்டு விடும் திறன் மிக்கது. அது போலவே விஷமிக்க பாம்புகள் தீண்ட முனையும் போது, பின்னே பாய்ந்து தடுத்துக் கொள்வதில் இது பலே கில்லாடி.

ஆமாம், "பாம்பைக் கண்டால், படையும் நடுங்கும்" என்பார்களே, செக்ரடரி பறவை மூலம் படையினருக்கு பயிற்சி அளித்தால் என்ன?

**தகவல்: வெளிமடை,**
**நிஸாம் மிஸ்கின.**

## சிந்தனைத் துளிகள்

1. **உலகத்தில் பலரால் அதிகூடியதாகப் பேசப்படும் மொழி எது?**
   மென்டரின் (சீனமொழி)
2. **தமிழுக்கு ஆற்றிய சேவைகளால் புகழ் பெற்ற வேற்று நாட்டுப் பெரியவர்கள் யாவர்?**
   வீரமாமுனிவர், ஜி.யு.போப்
3. **திரைப்படப் பாடல்களின் கம்பன் எனப் புகழப்படும் கவிஞன் யார்?**
   கவிஞர் கண்ணதாசன்
4. **ஜூலியஸ்சீஸர்' எனும் காப்பியத்தில் சீனர் கொலைசெய்யப்பட்ட பின் அவர் இறந்ததிற்கு வருந்திய உரோமப் பிரதானி யார்?**
   மார்க் அந்தோனி
5. **சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்களுள் ஆபிரிக்க தலைவர் யார்?**
   நெல்சன் மண்டேலா
6. **இந்தியா தேசிய கீதத்துக்கு ஒப்பானதாகக் கருதப்படும் பாடல் எது**
   வந்தே மாதரம் எனும் பாடல்
7. **தன் தேசியக் கொடியில் சிவப்புநிற வட்டம் கொண்ட நாடு எது?**
   ஜப்பான்
8. **உலகிலேயே உயரமான மரங்கள் வளரும் காடுகள் எவ்வாறு அழைக்கப் படும்?**
   ஊசியிலைக்காடுகள்.
9. **சந்திரனில் முதலில் படம் பிடிக்கப்பட்ட வீரர் யார்?**
   எட்லின் அல்ட்றின்
10. **உலகின் ஒரே யொரு இந்து நாடு எது?**
    நேபாளம்
11. **தீப்பெட்டியை கண்டுபிடித்தவர் பெயர்?**
    ஸ்வீடனைச் சேர்ந்த லூண்டஸ் டிமினால்.

ச. விதூயன்,
ஆண்டு 8E,
வ/விபுலானந்த கல்லூரி, வவுனியா.

## வர்ணம் தீட்டி அனுப்புங்கள்
## சிறந்ததிற்குப் பரிசு உண்டு - 19




நீங்கள் அனுப்ப வேண்டிய *வர்ணம் தீட்டற்போட்டி*

இறுதித் திகதி: 09/07/2004 முகவரி: த.பெ.இல. 1601, கொழும்பு

## உங்கள் சித்திரம்



சி. ராகை.
கிங்ஸ்டன்
சர்வதேச பாடசாலை
கல்கிசை.

### கண்டு பிடியுங்கள்-18

பெயர் : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................
முகவரி : ..............................

### வர்ணம் தீட்டும் போட்டி-18

பெயர் : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................

## கண்டுபிடியுங்கள் -19



இக்கட்டத்தில் இரண்டு மிருகங்கள் குழப்பப்பட்ட நிலையில் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து பொருத்தி ஒட்டி அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய இறுதித்திகதி : 09/07/2004

# வணிகச் சுழற்சி



கட்டிட வடிவமைப்புப் போட்டியில் பேராசிரியர் லக்ஸ்மன் அல்விஸ் முதலாவது பரிசு

சுலபமான முறையில் உணவு தயாரிக்க I.M.F.R தயாரிப்புக்கள்

## Buss. Cycle

## பாராளுமன்ற நடவடிக்கையினால் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு

### -வர்த்தக சம்மேளனம்

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட மோதல்களினால் பாராளுமன்றம் நீண்ட நாட்களிற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால் பொருளாதாரத் துறையில் பெரும் தாக்கத்தை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது என இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பொருளாதார ரீதியிலான பல சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்தன ஆனால், பாராளுமன்றம் நீண்ட நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையால் சட்ட மூலங்களை சமர்பித்து அவற்றை விவாதிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பொருளாதார ரீதியாக நன்மைகளைத் தரக்கூடிய சட்ட மூலம் பல அமுலுக்கு வருவது காலதாமதாகியுள்ளது. இதுவே பொருளாதார வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த ஏதுவாக அமையப் போகின்றது என்று இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள நடைமுறைகளையும், சம்பிரதாயங்களையும் பின் பற்றி எம்பீக்கள் செயற்பட வேண்டும் இதற்கான உதவிகளை தாங்கள் செய்து தருவதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதற்காக இதன் முகாமைத்துவக் குழுக் கூடி பொருளாதார நிலையை சீர் செய்வதற்காக ஆராய்ந்துவருகிறது. இந்த ஒன்றுகூடலில் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்ப நிலைகளினால் நாட்டினுடைய பொருளாதார ஏற்றுமதி துறைகளில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம் பெறக்கூடாது எனவும், அனைத்து கட்சித் தலைவர்களிற்கும் வர்த்தக சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. மேலும் இந்தக் குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தில் வெற்றிடங்களாக உள்ள அமைச்சுப் பொறுப்புக்களை பூர்த்தி செய்வது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

## எமிரேற்ஸில் பயணிப்பவர்களிற்கு விசேட சலுகை

துபாய் ஊடாக அமெரிக்கா. ஐரோப்பா. ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளிற்கு எமிரேட்ஸ் விமானச் சேவை மூலம் முதல் வகுப்பில் பயணிப்பவர்களிற்கு 15.06.2004 முதல் விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டு இரவுகள் சொகுசுமிக்க Jomerah Beach Club Resort & Spa வில் தங்குதல், Sundowner ஹோட்டலில் இரவு தங்குதல், Moon light Sonata இரவு உணவு அல்லது நான்கு மணித்தியாலங்களிற்கு Chauffevr கார் சவாரி போன்றன. இந்த விசேட சலுகைகளில் உள்ளடங்குகின்றன.

இதைவிட Business Class passengers (வணிகப் பிரிவு பயணி) றோயல் குழு அறையில் ஒரு இரவைக் கழிப்பதற்கான சலுகைகளும் வழங்கப்படுமென அறிவிக்கப்படவுள்ளது. இத்தோடு விசேட வௌச்சர்களும் வழங்கப்படும்.

இந்தச் சலுகை ஆகஸ்ட் 31ம் திகதி மட்டுமே வழங்கப்படும்.



அண்மையில் பீஜிஸ் நகரில் நடைபெற்ற வாகன கண்காட்சியில் டொயோட்டா PM-01 வகைக் கார் வைக்கப்பட்டிருந்து அதையே படத்தில் காண்கிறீர்கள்.

## சுலபமான முறையில் உணவு தயாரிக்க I.M.F.R தயாரிப்புக்கள்

IMFR நிறுவனத்தின் தயாரிப்புக்கள் இலங்கைச் சந்தைக்கு புதிதாக விற்பனைக்கு வரவுள்ளன. இந்தியாவிலிருந்து இறக்குமதி



செய்யப்பட்டுள்ள இந்த உணவுத் தயாரிப்புகள் சுத்தமான இயற்கை உணவுப் பொருளைக் கொண்டு எதுவித இராசாயனப் பொருட்களைக் கொண்டும் கலக்கப்படாது தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் ஏக விநியோகஸ்தர்களாக இலங்கையில் ஆர்அன்ட் ஆர்டி ரேடிங் கம் பனி செயற்படும். இத்தயாரிப்புக்கள் பற்றி இந் நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குனர் சி.இரத்தினவடிவேல் கூறுகையில்:-

இத் தயாரிப்புக்கள் இலங்கைக்கு புதியனவாகிலும், இது தற்போது இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பிரபல்யமாகி வரும் ஒரு தயாரிப்பாகும். ஹோட்டல்களில் இருக்கக் கூடிய உணவு வகைகளை நமது வீடுகளில் இலகுவாகவும், வேகமாகவும் தயாரிக்க உதவும் வகையில் இவை தயாரிக்கப்பட்டுள்ளது.

சைவ உணவோ. அசைவ உணவோ சமைக்கப்பயன்படும் இத் தயாரிப்புக்கள் யாவும். சைவப் பொருட்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறப்பம்சமாகும். இப் பதார்த்தம் கெடாதிருப்பதற்கு வழமையாக சேர்க்கப்படும் எதுவித இராசாயன கலவைகளும் சேர்க்கப்படாமல் 100% இயற்கை உணவு பொருட்களானாவை.



தாய்வானின் தயாரிப்புக்களான, சம்சங் நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள D4000, Digima, மற்றும் UCA40 போன்ற கமெராமொடல்களையே படத்தில் காணகிறீர்கள்.

## இலங்கை துறைமுகங்களிற்காக புதிய பாதுகாப்புத்திட்டம் தயார்

துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர திட்டதிற்கான அறிக்கையை கடந்த புதன்கிழமை (09.06.2004) அன்று பெற்றுக் கொண்டார். இந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கையிலுள்ள நான்கு துறைமுகங்களின் பாதுகாப்பிற்கான பொறுப்புக்கள் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் இலங்கை கடற்படையின் கீழ் வரவுள்ளது. இலங்கைத் துறைமுகத்தின் தரத்தை இன்னும் உயர்த்துவதே இதன் நோக்கமாக உள்ளது.

வெளிநாட்டு கப்பல் கம்பனிகளின் அமைப்பான சர்வதேச கடல்வள அமைப்பு, தமது அங்கத்தவர்களின் சரக்கு கப்பல்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எந்த துறைமுகங்களிலும் நிலவாத வகையில் இருக்க இந்த பாதுகாப்பு ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளது.

இதற்கான புதிய பாதுகாப்புத் திட்டத்தை கடற்படைத்தளபதி அட்மிரல் தயா சந்தகிரி சமர்பித்துள்ளார். இத் திட்டத்தில், கொழும்பு, காலி, திருகோணமலை, .பருத்திதுறை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களும் அடங்கும்.

# கட்டிட வடிவமைப்புப் போட்டியில் பேராசிரியர்லக்ஸ்மன் அல்விஸ் முதலாவது பரிசு

இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனம் நடத்திய கட்டிட வடிவமைப்பு திறந்த போட்டியில் பேராசிரியர் லக்ஸ்மன் அல்விஸ் முதலாவது பரிசைப் பெற்றுள்ளார். இந்த விருதை வரையறுக்கப்பட்ட சிலிங்கோ ஹவுசிங் அன்ட் றியல் எஸ்டேட் நிறுவனம் வழங்கியது.

இவர் டிசைன் கொண்வோர்டியம் லிமிடெட் நிறுவனத்தை சேர்ந்தவராவர். இவருக்கு இல 153 எல்விடிகல மாவத்தை, கொழும்பு - 08ல் அமைந்துள்ள 300 அங்குலம் கொண்ட நவீன குடியமைப்புத் தொகுதியை வடிவமைத்தமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் இரண்டாவது பரிசு ஆர்ச்டிரயட் கன்ஸன் டன்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்திற்கும், மூன்றாம் பரிசு ரன்ஜன் நடேசப்பிள்ளை அஸோசியேட்ஸ் நிறுவனத்திற்கும் கிடைத்தது.

இந்நிறுவனத்தின் தலைவி திருமதி பத்மினி கருணாரத்ன இந்தப் பரிசை வழங்கினார். இந்த வைபவம் கொழும்பு-07 வித்யாமாவத்தையில் அமைந்துள்ள கட்டிடக் கலைஞர்கள் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பெருந்திரளான கட்டிடக் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

திருமதி கருணாரத்ன இவ்வைபவத்தில் உரையாற்றுகையில். சகல துறைகளிலும் முன்னணி வகிக்க வேண்டும் என்பதே லலித் கொந்தலாவலவின் விருப்பம். அந்த வகையில் சிலிங்கோ ஹவுஸ் நிறுவனம் இந்தப் பணியை ஊக்குவிப்பதற்காக இந்த மாதிரியான ஒரு போட்டியை நடாத்துவது வரவேற்கத்தக்கது. இத்தகைய ஒரு போட்டி இலங்கை கட்டிடக் கலைஞர்களின் வளங்களை ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது என்றார்.

கம்பனியின் பொது முகாமையாளர் உரையாற்றுகையில்:- ஒரு வதிவிடத்தின் வெற்றிக்கு அந்த குடியிருப்பின் அமைப்பு முக்கிய காரணியாக இருக்கின்றது. இது அவசியம் என்று கருதுவதாலேயே கட்டிடக் கலைஞர்கள் நிறுவன உறுப்பினர்களுக்கு திறந்த போட்டியாக இது நடத்தப்பட்டது. இது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதை கருத்திற் கொண்டே அமைய வேண்டும் என எதிர்பார்த்தோம் என்றார்.

இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத் தலைவர் லலித் டி சில்வா உரையாற்றுகையில்:- இந்த போட்டியில், சம்மந்தப்பட்ட தொழில் துறையைச் சேர்ந்த நபர்களும் நிறுவனங்களும் பெரும் ஆர்வமாகப் பங்குபற்றின. இது போன்ற ஒரு போட்டி நிகழ்ச்சியை நடாத்துவதற்கு தனியார் நிறுவனம் ஒன்று இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத்தின் ஒத்துழைப்பை நாடியிருந்தமையும் இதுவே முதற்தடவையாகும் என்றார்.

சிலிங்கோ ஹவுஸிங் அன்ட் றியல் எஸ்டேட் நிறுவனத்தின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் இறிஷான்த் ஜயவர்தன இங்கு உரை நிகழ்த்துகையில்

இந்தத் திட்டத்துடன் எமது கம்பனி வீடமைப்பு அபிவிருத்தி துறையில் மிகப் பெரிய திட்டத்திற்குள் பிரவேசிக்கின்றது. சிலிங்கோ நிவாஸ திட்டத்தின் பாரிய வெற்றியைத் தொடர்ந்து இந்தப் பிரவேசம் இடம் பெறுகின்றது. நமது நாட்டில் கட்டிடக் கலைத் துறை பாரிய வளங்களைக் கொண்டது. இவ்வாறான போட்டிகளின் மூலம் அவர்களின் பங்களிப்பு குடிமனைத் தொகுதியில் அபிவிருத்தியில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்றார்.

நகரப் பகுதிகளில் அதிகரித்துவரும் வீட்டுத் தேவைகளை இயன்றவகையில் தீர்த்துவைப்பதை இலக்காக கொண்டே இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இலங்கையின் மிகப் பெரிய சக்தி வாய்ந்த நிறுவனமாகிய சிலிங்கோவின் ஆதரவோடு வீடமைப்பு அபிவிருத்தி துறையில் முன்னேற்றகரமான ஆக்கபூர்வமாக சக்தியாக சிலிங்கோ ஹவுஸிங் அன்ட் றியல் எஸ்டேட் நிறுவனம் இயங்குகிறது.




ஜப்பானிலுள்ள NTT நிறுவனம் "900i" என்ற பெயரில் புதிய கைத் தொலைபேசியொன்றைக் கண்டுபிடித்துள்ளது.
3ம் தலை முறைக்குரிய இத்தொலைபேசியினுடைய திரையில் இதற்கான விசேட பேனா மூலம் எழுதும் விடயங்களை நேரடியாக இன்னொரு தொலைபேசிக்கு அனுப்ப முடியும்.





நீங்கள் படத்தில் பார்க்கும் இந்த இயந்திர மனிதன் ரெஜிபோம், உலோகம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டு மின்சாரம் மூலம் இயக்கப்படுகின்றான்.

இந்த இயந்திர மனிதன் வன்னி தொழிநுட்பவியல் நிறுவகத்தினாரால் நடாத்தப்பட்ட உயர் தொழில்நுட்ப கண்காட்சியில் வைக்கப்பட்டு முதல் பரிசு பெறப்பட்டது.

அதை உருவாக்கியவர்களில் ஒருவராக R.மாஜேந்திரனையும் படத்தில் காண்கிறீகள். இந்த இயந்திர மனிதன் இன்னமும் "வன்னி ரெக்" வாசலில்தான் இருக்கின்றான்.

# கல்டெக்ஸ் உடனான கொள்கலன் தயாரிப்பில் பீனிக்ஸ் நிறுவனம்.

என்ஜின் என்ணெய் தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் கல்டெகஸ் நிறுவனமும், பிளாஸ்ரிக் கொள்கலன் தயாரிப்பில் முன்னணியாக விளங்கும் பீனிக்ஸ் நிறுவனமும் அண்மையில் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இதன் மூலம் பீனிக்ஸ் நிறுவனம் 75 மில்லியன் ரூபாவை முதலீடு செய்து கல்டெக்ஸ் நிறுவனத்திற்குரிய கொள்கலன்களை வழங்கவுள்ளது.

இவ் உடன்படிக்கை கைச்சாத்திடும் வைபவத்தில் கல்டெக்ஸ் லங்கா நிறுவனம் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிஷுகோமஸ் பேசுகையில்:- எதிர்வரும் காலங்களில் பீனிக்ஸ் நிறுவனம் எமது நிறுவனத்திற்கு தேவையான கொள்கலன்களை தயாரித்து வழங்கும் இதன்மூலம் எமது செயற்பாடுகளை மேலும் சிறப்பாக செய்யமுடியும் என்றார்.

பீனீக்ஸ் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அஸ்லாம் ஓமார் பேசுகையில் மாதாந்தம் நாங்கள் 500 மெட்ரிக் தொன் பிளாஸ்ரீக்கை தயாரிக்கின்றோம். இந்த உடன்படிக்கை மூலமாக இந்த அளவை இருமடங்காக்க முடியும்.



இன்று உலகில் மிக விரைவாக வளர்ச்சியடைந்துவரும் கணக்கியல்துறை அங்கமான ACCA இலங்கையின் புளுசிப் கம்பனியான ஜோன் கீல்ஸ் ஹோால்டிஸ்ஸைச் சேர்ந்த ஊழியர்களிற்கு பயிற்சியளித்து சான்றிதழ் வழங்கியுள்ளது. அந்த வைபவத்தின் போது ACCA சிறிலங்காவின் முகாமையாளர் செல்வி அஜிதா பெரேரா சான்றிதழ்களை ஜோன் கீல்ஸ் ஹோல்டி நிறுவன நிதி நிர்வாகி ரொனி பீரிஸிடம் கையளிப்பதைக் காண்கிறீர்கள்.



கணனித் துறையில் தன்னிரராகத் திகழும் Microsoft நிறுவனத்தின் நவீன "Hewlett packard கம்பியூட்டர்கள் தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்பம் அண்மையில் வாஷிங்டனில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன்போது இதன் உற்பத்தி முகாமையாளர் கிரேன் சல்லிவன் இத்தொழிநுட்பம் தொடர்பாக உரையாற்றுவதை காண்கிறீகள்.

# புதிய வரலாறு படைத்தோரின் வரிசையில் சிக்மண்ட் ஃப்ராய்டு (1856 – 1939)

உணர்வு கடந்த நிலைகளின் தொடர்பிமையவுகளை ஆராயும் உளநிலைப் பகுப்பாய்வு முறையினைக் கண்டுபிடித்த உளவியலாளரே சிக்மண்ட் ஃப்ராய்டு. இவர் 1856 இல் ஃபிரீபர்க் நகரில் பிறந்தார். இவரது நான்காம் வயதில் வியன்னாவில் குடியேறி, அங்கு ஒரு சாதாரண மாணவராகவே கல்வி பயின்று பல்கலைக்கழகம் சென்று 1881இல் மருத்துவப் பட்டம் பெற்றார். பின் வந்த பத்து ஆண்டுகளில் உளவியல் (Physiology) ஆராய்சிகள் செய்து, நரம்பியல் மருத்துவத்தில் பணியாற்றி உளவியல் மருத்துவமனையில் பணிபுரிந்தார்.

மருத்துவ வல்லுனர் ஜோசப் பிராயர் என்பவருடன் பணிபுரிந்து, 1895 இல் "இழிவு நோய் பற்றிய ஆராய்ச்சி" (Studies in Hysteria) என்ற நூலை அவருடன் இணைந்து வெளியிட்டார். இவருடைய நூல்களிலேயே மிக முக்கியமானது 1900 இல் வெளிவந்த "கனவுகனின் பொருட்கோள்" (Interoretation of Dreems) என்ற நூலாகும். இது நற்சிந்தனை வாய்ந்த நூலாகக் கருதப்பட்டு, பெரும் புகழை இவருக்கு ஈட்டித்தந்தது.

ஃப்ராய்டு திருமணம் புரிந்து, ஆறு குழந்தைகளுக்கு, பின் அவரின் தாடை எலும்பில் புற்றுநோய் கண்டது. அதைக் குணப்படுத்த 1923 இலிருந்து 30 தடவைகள் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. மிகுந்த வேதனைக்கிடையிலும் கடுமையாக உழைத்து அவரது 82வது வயதில் லண்டனில் காலமானார். உள்வியர்த்த கோட்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். இவர் கூறிய கோட்பாடுகள் இனி வரும் நீண்ட காலப் போக்கில் சரியாக இருக்கும் என்று கருத முடியாவிட்டாலும், வரலாறு படைத்தோரின் வரிசையில் இவர் உயர்ந்த இடத்தைப் பெறுகிறார்.

தொகுப்பு: ஜெனிமீரா, வவுனியா .

## முக்கிய ஆண்டுகளும் சிறப்பு விடயங்களும்

1. கி.பி (776) - முதல் ஒலிம்பிக் (கிரிஸ்)
2. கி.மு (261) - கலிங்கப்போர்
3. கி.மு. (58) - விக்ரமசகாப்தம்
4. கி.பி (33) - கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்
5. கி.பி (1492) - கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்
6. கி.பி (1660) - பிரிட்டிஷ் மன்னராட்சி

# சூரிய மண்டலம்

சூரியன், அதன் ஒன்பது கோள்கள். அவற்றின் துணைக்கோள்கள் என்பன, எவ்வாறு தோன்றின என்பதற்கு திடமான ஒரு கருத்து இல்லையெனினும் சூரியமண்டலத்தின் தோற்றம் குறித்து கருதுகோள்களை தெரிவித்துள்ளனர். அவை,



**மோதுகைக்கருதுகோள்:-**

பவ்பொன், பிங்கேட்டன் ஆகியோரின் கருத்துக்களின்படி, ஆதி சூரியனுக்கும் பிறிதொரு நட்சத்திரத்திற்கும் ஏற்பட்ட மோதல் அல்லது உராய்வின் விளைவாக கோள்கள் பிறந்தன என்பதே மோதுகைக் கருதுகோள் ஆகும்.

**புகையுருக் கருதுகோள்கள்:-**

கான்ற், லாப்பிளாஸ் போன்ற சிலரின் கருத்துகளே புகையுருக் கருதுகோள். அதன்படி ஆதி அண்டத்திலிருந்த பலவகை சடப்பொருளின் புகையுருவிலிருந்தே கோள்கள் உருவாகின என்பதாகும். நெபுலா என்ற புகையுரு திரண்டு மையநீக்க விசைக்குள்ளாகி கோள்களை தோற்றுவிக்கிறது.

இன்று 88 உடுத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் இராசிமண்டல உடுக்களும் அடங்கும். உடுக்களுக்கு அடையாளங்களும் உண்டு.

செவ்வாய்க்கும், வியாழனுக்கும் மத்தியில் ஆயிரக்கணக்கான குட்டிக்கோள்களைக் கொண்ட கூட்டம் ஒன்றுள்ளது. இவற்றை குறுங்கோள்கள் என அழைப்பர். 1801 ஆண்டு பியாசி என்பவரால் "செரேஸ்" என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

**ஆகாயக்கற்கள்:-**

வானில் எரிந்துகொண்டு வீழ்கின்ற விண்கற்களையே ஆகாயக்கற்கள் என்பர் அவை வளிமண்டலத்துக்குள் புகும்போது ஏற்படும் உராய்வு காரணமாக, வெப்பமடைந்து எரிந்து வீழ்கின்றன. பெரும்பாலும் அவை பூமியை வந்தடைவதில்லை. தப்பித்தவறித்தான் சில வந்தடைந்தன அவற்றில் 1908ம் ஆண்டும், 1947ம் ஆண்டும் இரு ஆகாயக்கற்கள் சைபீரியாவில் விழுந்தன.

1908ம் ஆண்டு வீழந்த கல்லில் 50சதுர கிலோ மீற்றர் காட்டுப்பரப்பு மட்டமானது.

**வால் வெள்ளி:-**

தலையும் வாலும் கொண்ட நீண்டதோர் ஒளிப்பிழம்பே வால்வெள்ளி. இதன் தலைப் பாகம் புகைமண்டலமாகக் காணப்படும். இது வாயுக்களை வெளிவிடுகின்றது. சூரியனின் ஒளிக்கதிர்கள் இவ்வாயுக்களில் படும்போது வாயுக்களும் அவற்றினைச் சேர்ந்த தூசுகளும் சூரியனுக்கு எதிர்புறமாகத் தள்ளப்பட்டு பிரகாசிக்கின்றன. வால் வெள்ளியில் ஹலியின் வால் வெள்ளியே முக்கியமானதாகும்.

**கானா**

இது 1957 இல் சுகந்திரம் பெற்ற ஒரு குடியரசு நாடாகும். இதன் தலைநகரம் அக்ராவாகும். இதன்பரப்பு 2,39,000 (ச.கி.மீ). இங்கு மக்கள் தொகை 17.1 (மில்லியன்). இங்கு எழுத்தறிவு 63.4% ஆகும்.

இங்கு நடை முறையில் உள்ள மொழி ஆங்கிலம் இதனு டன் 8 தேசிய மொழிகள் உள்ளன. இங்கு கிறிஸ்தவம், இஸ்லாம், பழங்குடி மதம் உள் ளது. விவசாய நாடான இங்கு கொக்கோ உற்பத்தி முதலி டம் பெற்றுள்ளது. இங்கு கனிமலளம் ஏற்று மதி செய்யப்படுகிறது. இந்நாட்டின் பிரதான தொழில் அலுமீனியம், லகுரகத். இது மேற்கு ஆப்பிரிக்க நாடாகும்.

K. மதீரன்,
புனிதமைக்கேல் கல்லூரி

# ஈபில் கோபுரம்

பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் 300அ (984 அடி) உயரமான இரும்புக் கோபுரம் ஒன்றுள்ளது. அதனை ஈபில் கோபுரம் என்பர். இக்கோபுரத்தைக்கட்டி முடிக்க 7300 தொன் இரும்பு செலவாயிற்று இக்கோபுரத்தைக் கட்டியவர் (1989ல்) அலெக்சாந்தர் கஸ்டாவ் ஈபில் என்பவராவர் இக்கோபுரத்தின் மேல் மூன்று மாடிகளுள்ளன.

# ஆறுமுக நாவலர்

சென்ற இதழில் ஆறுமுக நாவலரைப் பற்றிப் பொதுவாகப் பார்த்தோம். இனிவரும் இதழ்களில் அவருடைய வாழ்க்கை வரலாறுகள், அவர் தமிழுக்கும், சைவத்திற்கும், ஆற்றிய பணிகள் என்பன பற்றி விரிவாக ஆராய்வோம்.

ஆறுமுக நாவலர் ஈழத்திலே யாழ்ப்பாணத்தி லுள்ள நல்லூர்ப் பகுதியிலே பாண்டி மழவர் குடியிலே, ஞானப்பிரகாச சுவாமிகள் மரபிலே கந்தப்பிள்ளை சிவகாமியார் என்பவர்களுக்கு அருந்தவப் புதல்வராக மார்கழி மாதம் 1822ம் ஆண்டு திருவவதாரம் செய்தார். இவருக்கு ஆறுமுகப்பிள்ளை என நாமம் சூட்டினார்கள்.

இவர் தம் ஐந்தாவது வயதிலேயே வித்தியாப ரணம் செய்யப்பெற்று நல்லூரிலிருந்த சுப்பிரமணிய உபாத்தியாரிடம் கல்வி கற்றார்.

இவர் வாக்குண்டாம் போன்ற நீதி நூல்களை யும் நிகண்டு, எண்சுவடி முதலிய மற்றைய நூல் களைக் கற்கும் காலத்திலேயே தமிழில் மிகவும் ஆர்வம் கொண்டு நைடதம், பரதம், கந்தபுரா ணம், மறைசை அந்தாதி முதலிய அந்தாதிகளுக்கும் பொருள் கேட்கத் தொடங்கினார்.

இவர், தான் கல்வி கற்றதோடு மட்டுமல்லாது தன்னுடன் சேர்ந்தவர்களுக்கு, அயலில்

# பொது அறிவு

உள்ள வர்களுக்கு என எல்லோருக்கும் தான் கற்ற கல் வியைச் சொல்லிக் கொடுத்தார். விள ங்காத பிள்ளைகளைத் தனியாக அழைத்து கல்வி கற்காதவன் புகழ் பூஜை முதலியவைகளைப் பெற மாட்டான் என்று புத்திமதி கூறுவார்.




இவருடைய 12வது வயதில் "பீற்றர் பார்சிவல்" பாதிரியாருடைய ஆங்கில வித்தியாசாலைக்கு அனுப் பப்பட்டார். இவர் ஆங்கிலத்தைத் திறன்படக் கற்க, தமிழில் இன்னும் ஆழமாகக் கற்க வேண்டும் என்ற ஆவல் அவருக்குள் எழ, அவர் தமிழை ஐயம் திரியறக் கற்க வாரம்பித்தார்.

கோயில்களிலே புராண படனங்கள் இடம் பெறும் பொழுது தவறாது பங்கு பற்றுவார் அச்சமயத்தில் அவருக்கு ஏதாவது ஐயங்கள் ஏற்படும் பட்சத்தில் குறித்து வைத்துப் படனம் முடிந்தவுடன் விளக்கம் கேட்பார். தெளிவாய் இல்லாதவிடத்து அதற்கு தான் விளக்கம் கூறுவார்.

இவரது திறமையைப் பார்த்து அனைவரும், இப்பிள்ளை தன் குலத்தை விளங்கச் செய்வதற்கே உதித்துள்ளது என வியந்தனர்.

தொகுப்பு K. வர்ஷன் கொழும்பு.

-தொடரும்-

### 1) மிகிந்தலை

இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு அனுப்பப்பட்ட மகிந்ததேரரும், மன்னன் தேவநம்பியதீசனும் முதன் முதல் மிகிந்தலையில் தான் சந்தித்தார்கள்

### 2) சிகிரியா:

காசியப்பன் என்ற மன்னன் சிகிரியாக் குன்றில் பாதுகாப்பான ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டான் அத்துடன் அற்புதமான அழியா ஓவியங்களையும் வரைவித்தான்.

### 3) சமன்குத்து

சமன்குத்து என்பது சிவனொளிபாத மலையாகும். இம்மலையில் உள்ள இரு பாதங்கள் புத்தருடையது என பௌத்தரும், சிவனுடையது என இந்துக்களும், ஆதாமுடையவை என கிறிஸ்தவரும் நம்பு கின்றனர்.

### 4) மகியங்கணை

புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்த போது முதன் முதல் காலடி வைத்த இடம் மகியங்கணை ஆகும்.

- **இலங்கையின் முதல் அரசன்?**
  இராவணேஸ்வரன்
- **இலங்கை எப்போது குடியேற்ற நாடாக் கப்பட்டது?**
  (1802) இல்
- **இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆரம்பிக் கப்பட்ட ஆண்டு எது?**
  (1919 இல்)
- **இலங்கையின் முதல் அரசியற் சட்டம் யாரால் எழதப்பட்டது?**
  சேர். ஜலர் ஜெனிங்ஸ்
- **சேர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் யார்?**
  ஆனந்த குமாரசாமி

# குறுக்கெழுத்துப் போட்டி–17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 | 3 | 4 | 5 | 6 ம |
| 7 | 8 | 9 ■ | 10 ■ | 11 | 12 |
| 13 | 14 ■ | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 ■ | 22 ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 ■ |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**மேலிருந்து கீழ்**

1. ஏலம், கற்பூரம்,எரிகாசு, சந்தனம், தேன் எனும் ஐந்தின் கூட்டு
2. நம் உடலின் இன்றியமையாத பாகம் பாதுகாப்போடு அமைந்திருக்கிறது.
4. கவிஞர்கள் இது புனையும்போது பொய்யுடன் கலந்த கற்பனையை அதிகமாகப் பாவிக்கின்றனர்.
5. கடவுளை இப்படியும் கூறுவர்.
6. அடங்காமையைச் குறிக்கும் சொல் குழம்பியுள்ளது.
20. முகம், கூரின்மை, வெட்கம், மதிப்பு என்ற பல பொருள் தரும்
27. உப்புக்கு இப்படியும் ஒரு பெயருண்டு. மிகுதிக்குறிப்புக்கும் பயன்படுத்தப்படும்.
28. இது ஒரு நதியின் பெயர்.

**இடமிருந்து வலம்**

1. தேவர்களுக்கு வழங்கப்படும் படையலின் ஒரு பாகம்
7. அரசவையில் அரசரால் புலவர்களுக்கு பொன்னால் செய்யப்பட்டு பரிசளிக்கப்படும் ஒரு பொருள்.
11. பெண்ணின் பருவநிலை மாற்றம்
15. மனைவியைக் குறிக்கும் இன்னொரு சொல் குழம்பியுள்ளது.
19. பறவையினங்களில் ஒன்று.
23. இது ஒரு வினைச்சொல், வெளியேறுவதைக் குறிக்கும்
25. கொழும்பு மாவட்டத்திலுள்ள ஒரு நகர்ப்புறம்
31. உளவியலாளர் சிக்மன்ட், அவரது.................... லேயே இறந்து கிடந்தார். குழம்பியுள்ளது.

விடைகளை அனுப்பவேண்டிய இறுதித்திகதி 10.07.2004.
அனுப்பவேண்டிய முகவரி:
**தணலின் குறுக்கெழுத்துப் போட்டி –17**
**த.பெ.இல. 1601, கொழும்பு.**

### கண்டுபிடியுங்கள் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

**பரிசுக்குரியவர்**

த.சிம்சோன்
வ/ஸ்ரீநாகராஜா வித்தியாலயம்
நலன்புரி நிலையம்
சிதம்புரம், வவுனியா

**மற்றும் பாராட்டுப் பெறும் சிறுவர்கள்**

யோ.கலாரஞ்சனி
சரசாலை,
சரஸ்வதி வித்தியாலயம்

T.சரத்குமார்
நு/வெஸ்ட் வாட்ஹோ,
தமிழ் வித்தியாலயம்

### வர்ணம் தீட்டும் போட்டி 17ல் பரிசு பெற்றவர்கள்

**பரிசுக்குரியவர்**

ம.சாந்தஸ்வரரூபினி
ஐயனார்புரம், அ.த.க. பாடசாலை
வன்னேரிகுளம்.

**மற்றும் பாராட்டுப் பெறும் சிறுவர்கள்**

கா.அனுசா
வ/இறம்பைக்குளம்,வவுனியா

ஆ.சசிகரன்
ப.லுனுகல தமிழ் ம.வி

### குறுக்கெழுத்து போட்டி 15இல் வெற்றி பெற்றவர்கள்

கே.அரசேஸ்வரன்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

த.யோகராசா
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

# சர்வதேச தரத்திற்குப் பாடக்கூடிய தமிழ் கலைஞர்களை இதுவரை சந்திக்கவில்லை

## கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனுடன் ஓர் நேர்காணல்

தெகுப்பு- விஜை

**வணக்கம் அம்மா, உங்களுடைய முழுப் பெயர்....?**

பதில்:- அருந்ததி ஸ்ரீரங்கநாதன்.

இந்தியாவில் பத்மஸ்ரீ என்பது போல் இலங்கையின் தேசிய விருது கலாசூரி என்ற பட்டம் உண்டு. அதை வழங்கும் போதே அதை எங்கள் பெயருடன் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்வார். அதனால் இந்த ஊடகத்துறையில்கலாசூரி ஸ்ரீரங்கநாதன் என்று சொல்வது தான் வழக்கம். ஆனால் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தான் எனது பெயர்.

**கேள்வி:- கலாசூரி ஸ்ரீரங்கநாதன் அதாவது கலாசூரி என்ற பட்டத்தை உங்களுக்கு யார் வழங்கினார்கள்?**

பதில்:- அது ஜனாதிபதியால் வழங்கப்படுவது. முதல் அது வருடாவருடம் அரசாங்கத்தால் நடத்தப்படும் ஒரு நிகழ்வாக இருந்தது. பெப்ரவரி 4ம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தன்று அறிவிப்பார்கள்.

ஜனாதிபதி மாளிகையில் குடியரசு தினத்தன்று மே 22ம்திகதி வழங்கப்படும். எனக்கு இந்தப் பட்டம் 1989 ம் ஆண்டு வழங்கப்பட்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாச அவர்களால் வழங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது சில வருடங்களாக இடையிடையேதான் செய்து வருகிறார்கள்.

**கேள்வி:- உங்களுக்கு கலாசூரி என்ற பட்டத்தை வழங்கும் போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

பதில்:- சந்தோஷமாகத்தான் இருந்தது. இசைத்துறையிலும் கலைத்துறையிலும் நிறைய நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி அந்தத் துறையிலே ஒரு அங்கீகாரம் பெற்றமாதிரி எனக்கு அந்தப் பட்டம் கிடைத்தது. உண்மையிலேயே எனக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது. அது ஒரு காரணம். மற்றுமொரு காரணம் பல வருடங்களாக சிங்களக் கலைஞர்களுக்குத்தான் இந்தப் பட்டம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. முதல் முறையாக ஒரு தமிழ் கலைஞருக்கு கலாசூரி என்ற பட்டம் நாதஸ்வர வித்துவானான பத்மநாதனுக்கு கிடைத்தது. அதற்கு பிறகு மூன்றாவதாக எனக்கு கிடைத்தது ஒரு பெரியபாக்கியம் என்று நினைக்கின்றேன்.

**கேள்வி:- நீங்கள் இலங்கை வானொலியில் தயாரிப்பாளராக இருந்ததால்தான் இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்தது என்று அதாவது இசைத்துறையிலோ கலைத்துறையிலோ உங்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்ததாக கூறினீர்கள். ஆனால் தற்போது இலங்கை வானொலியிலோ தேசிய சேவையிலோ சரி தமிழ் கலைஞர்கள் இருந்தாலும் அவர்களுடைய திறமைகள் மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்:- இதில் ஒரு விடயத்தைக் குறிப்பிடவிரும்புகின்றேன். இலங்கை வானொலியில் சேர்ந்த படியினால் என்னுடைய ஆற்றலை, எனக்குரிய கற்பனை வளங்களைப் பிரயோகிக்கக் கூடிய வசதி ஏற்பட்டது.

ஆனால் இலங்கை வானொலிக்குச் செல்லும் முன்பே தனிப்பட்ட ரீதியில் நிறைய நிகழ்ச்சிகளைப் பரீட்சார்த்தமாக, புதுமையாக செய்திருக்கிறேன். வீணை பயிற்றுவிப்பதுண்டு வாய்ப்பாட்டு பயிற்றுவிப்பதுமுண்டு. இலங்கையில் முதல் தடவையாக 50 வீணைகள் கொண்ட ஒரு நிகழ்ச்சியை பல தடவைகள் மேடையேற்றி இருக்கிறேன். இதுவரையில் யாரும் இப்படியொரு நிகழ்ச்சியினைச் செய்யவில்லை. இரண்டு வீணையைக் கொண்டு சுருதி பண்ணுவதே கஷ்ரம். ஆனால் 50 வீணைகளையும் 50 மாணவிகளையும் கொண்டு மேடையேற்றியது பரீட்சார்த்தமான ஒரு நிகழ்ச்சி. இதைப் பலதடவைகள் மேடையேற்றியிருக்கின்றேன். அதைவிட நாட்டிய உருப்படிகளுக்கு இசையமைத்திருக்கின்றேன். பல புதிய நாட்டிய நிகழ்ச்சிகளை இயற்றிக் கொடுத்திருக்கிறேன். அத்தோடு நாட்டிய நாடகங்களுக்கு இசையமைப்பதில் ஒரு அலாதிப் பிரியம் எனக்குண்டு. இந்த வகையில் இவற்றை இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்திற்குள் தான் சென்று செய்தேன் என்றில்லை. வெளியில் கலைஞராகயிருக்கும் பொழுதே பல விடயங்களைச் செய்துகொண்டிருந்தேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்தான் மெல்லிசைப் பாடல் என்ற நிகழ்வை ஆரம்பித்தது. தற்போது சக்தி ரி.வியிலும் ஏனையவற்றிலும் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆனால் இந்த நிகழ்வுகளுக்கு பலரை நாங்கள் அழைத்தும் வருவதில்லை. ஒரு சிலர் வருகிறார்கள். பலர் வருவதில்லை காரணம் வறுமையாக இருக்கலாம். இங்கு தலைநகருக்கு வந்து நிகழ்ச்சியில் பங்குபற்றிச் செல்லக் கடினம். சிலபேருக்கு ஒரு தயக்கம். நாங்கள் வானொலியில் அடிக்கடி கூறுவோம். இந்த முகவரிக்கு தொடர்பு கொண்டு இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுமாறு. பல இன்னல்களையும் மீறி எத்தனையோ கஸ்ரப்பட்ட கலைஞர்கள் வந்து பங்கு பற்றியுள்ளனர். நான் பெயர் குறிப்பிட விரும்பவில்லை. இலங்கை வானொலியில் பிரபலமாய் பாடிக் கொண்டிருக்கும் இரண்டு மூன்று கலைஞர்கள் அந்தக் காலத்தில் அதிகமான வறுமையில் இருந்தவர்கள். அவர்கள் நிகழ்ச்சிக்குச் செல்வதற்கு கூட ஒரு புதிய புடவை அணிந்து பாடக்கூடிய வசதி யில்லாமல் இரவல் வாங்கி வந்து பாடிய சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படியானவர் களை அந்த நிலையில் இருந்து நாங்கள் கைதூக்கிவிட்டதால் இப்பொழுது பிரபலமான கலைஞர்களாக இருக்கிறார்கள். ஆனபடியால் சந்தர்ப்பமும், அவர்களுடைய முயற்சியும் கட்டாயம் வேண்டும் ஏதாவது ஒரு துறையில் அவர்கள் முன்னேறுவதற்கு



**கேள்வி:- நீங்கள் பொருளாதாரத்தில் தான் பட்டம் பெற்றீர்கள் என்று கூறியிருந்தீர்கள் அப்படி பொருளாதாரத்தில் பட்டம் பெற்ற உங்களுக்கு சங்கீத ஞானம் எப்படி வந்தது?**

பதில்:- எங்களுக்கு எல்லாக் கலையையும் பயி லக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தது பெற்றோர் தான் சிறுவயதுமுதல். பல்கலைக்கழ கம் போகமுதலே நான் வட இலங்கை சங்கீதத் தில் ஆசிரியர் தராதரம் (வீணை, வாய்ப்பாட்டு) சித்தி எய்தி விட்டேன். பல்கலைக்கழகம் புக முதல் சிறு வயது முதல் ஓடி விளையாடு பாப்பா, சிறுவர்மலர், வளரும் பயிர், மாதர் பகுதி, சித்தி ரம் போன்றவற்றில் நான் சிறந்த கலைஞராக விளங்கினேன்.

சங்கீத ஞானம் எங்கள் குடும்பத்திலிருந்து வந்தது . எங்கள் வீட்டிற்கு அருகிலேயும் ஒரு இசைக்கலைமன்றம் என்று ஒரு கலைப்பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. எனக்கு மூன்று வயதாக இருக்கும்போது பித்துக்குளி முருகதாஸ் கூட அந்த வீட்டில் இருந்தார் என்று எங்கள் அம்மா அடிக்கடி கூறுவார்.

**கேள்வி :- இன்றைய வரை உங்கள் இசைப் பயணம் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

பதில்:- அது ஒரு நீண்ட பயணம் (சிரிக்கிறார்). நான் முன்பு சொன்ன மாதிரி சின்னவயதிலேயே இந்தப் பயணம் ஆரம்பித்து விட்டது. இப்ப ஒரு மூன்று நாலு வருசமாக ரஷ்யாவிலும் சீனாவிலும் வருடாவருடம் நடைபெறும் சர்வதேச நடுவர்களில் ஒரு ஆளாக இங்கு இருந்து நான் அங்கு போய் வருகிறேன். அதேபோல இலங்கையில் இருந்தும் போட்டியாளர்களை அனுப்பலாம். அந்தப் போட்டிக்கு போய் பரிசு பெற்றவர் தான் பாத்தியா சந்தோஸ். இன்று சிங்களத்திலே பிரபலமான பாடகர். தமிழ் பிள்ளைகளை அனுப்ப எத்தனையோ தரம் முயற்சி பண்ணினேன் ஆனால் சர்வதேச தரத்திற்கு ஏற்ற மாதிரி ஒருவரும் இல்லை. அதற்கு ஒரு வயசு எல்லையும் இருக்கிறது. (15-30 வரை)

**கேள்வி:- சர்வதேச ரீதியில் பங்கு பற்றுவதற்கு தமிழ் கலைஞர்கள் ஒருவரும் இல்லை என்று சொல்கிறீர்கள். எங்கள் செந்தணல் பத்திரிகையூடாக இலங்கையில் சர்வதேச மட்டத்தில் பங்குபற்ற தங்களுக்கு தகுதியுண்டு என்று நினைக்கும் பட்சத்தில் பங்கு பற்றலாமா?**

பதில்:- நிச்சயமா. உங்கள் பத்தி ரிகை கூட அந்த சேவையை செய்தால் நன்று. நான் இலங்கை வானொலியில் பணிப்பாளராக இருந்த சமயம் எத்தனையோ கலைஞர்களை சந்திக்கிறேன். சில நல்ல கலைஞரை சந்தித்தால் அவர்கள் வயது எல்லையை மீறியவர்களாக இருக்கிறார்கள்.

**கேள்வி:- இந்த போட்டிகள் எந்த காலகட்டத்தில் நடைபெறும்?.**

பதில்:- ரஷ்யாவில் கசகஸ்தான் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அது ஓகஸ்ட் மாதத்தில் நடக்கும். சங்காசீனாவில் நவம்பர் மாதத்தில் நடக்கும்.

**கேள்வி:- அதற்கு எப்போது விண்ணப்பிக்க வேண்டும்?**

பதில்:- கசகஸ்தாவிற்கு ஏற்கனவே விண்ணப்பித்து முடிந்துவிட்டது. சங்கா சீனாவிற்கு உடனடியாக அடுத்த மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**கேள்வி:- அப்படி சர்வதேச மட்டத்தில் பாடுவதற்கு தகுதியுள்ளவர்கள் உங்களைத் தொடர்பு கொள்ளலாமா?**

பதில்:- நிச்சயமாக தொடர்பு கொள்ளலாம்.

**கேள்வி:- உங்கள் கணவர் மனோத்துவ வைத்தியர் என்று நான் அறிந்திருக்கிறேன். அந்த வகையில் இசைத் துறையிலும் சரி தனிப்பட்ட உங்களுடைய வாழ்க்கையிலும் சரி இந்த முன்னேற்றகரமான வாழ்க்கைக்கு எந்த வகையில் உங்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்.**

பதில்:- என்னுடைய இந்த முன்னேற்றத்திற்கு அவர்தான் முழுக்காரணமும். ஏனென்றால் ஆரம்பத்தில் பெற்றோர் எல்லாத் துறையிலும் பயிற்றுவித்து இவ்வளவு தராதரத்தை பெற்றுத்தந்தனர். ஆனால் அதற்குப் பிறகு முழு ஊக்கத்தையும் என் முயற்சிகளுக்கு பக்கசார்பாக இருந்தது, என்னுடைய கணவர்தான். அவர் மன நல வைத்தியராக இருந்தாலும் அவர் சரியான ஒரு இசைப்பிரியர், மற்றது என்னுடைய திருமணமும் ஒரு காதல் திருமணம்தான் (வெட்கப்பட்டு கொள்கிறார்.) அவர் வைத்தியத் துறையில் இருந்தாலும், நிறைய இசைத்தட்டுகளும், (C.D) 2500 மேல அவருடைய கலக்ஷன் இருக்கு. எனக்கு மூன்று மகன்கள். அவர்கள் ஆண்பிள்ளைகளாக இருந்தாலும் எல்லாம் படித்து வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் தான் சின்னவயதில படிக்க வேணும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தும் பெற்றோர் அதை ஊக்குவிக்கவில்லை என்று சொல்வார். எல்லாப் பிள்ளைகளுமே இசையைப் பயின்றுள்ளார்கள். சித்தாரிலும் பட்டம் பெற்றுள்ளார்கள்.

**கேள்வி:- உங்களுடைய பிள்ளைகள் கலைத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் என்று கூறியிருந்தீர்கள். எந்தவகையான கலைத்துறை என்று கூறமுடியுமா?**

பதில்:- மூத்தவர் சாரங்கன், மற்றவர் ஷியாமளாங்கன் இரண்டுபேரும் சித்தாரில பட்டம் பெற்றிருக்கிறார்கள். இரண்டுபேரும் இசையமைகிறார்கள். இலங்கை வானொலி ரூபவாகினியில் எத்தனையோ பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார்கள். இப்ப இரண்டு மூன்று சிங்கள CDக்கு இசையமைச்சுக் கொண்டிருக்கிறார்கள். மூத்தவர் பாடுவார். மற்றவர் பரத நாட்டியத்திலும் அரங்கேற்றம் செய்தவர். கடைசி மகன் புல்லாங்குழல் படித்துக் கொண்டிருக்கிறார்.

**கேள்வி:- உங்களுடைய இசைகளை தட்டுக்களாக வெளியிட்டுள்ளீர்களா?**

பதில்:- நானாக வெளியிடவில்லை. நான் அதை யோசிக்கவும் இல்லை. எத்தனையோ பேரின் இசைத்தட்டுக்களைச் செய்து கொண்டிருந்ததால் நானாக வெளியிடவேண்டும். என்று யோசிக்கவில்லை. இப்ப யோசிக்கிறேன். பெரிய பிழை விட்டு விட்டுள்ளேன் என்று.

**கேள்வி:- மிக அண்மையில உங்கள் நிகழ்ச்சிகள் ஏதாவது நடைபெற இருக்கிறதா?**

பதில்:- இசை நிகழ்ச்சிகளில் அதற்குப்பிறகு யூலை 17ல் வாசுகி ஜெகதீஸ்னின் அரங்கேற்றப்பாடல் இருக்கிறது.

மேகதூதம் சகுந்தலாவின் கதை சிங்களத்தில் செய்யப்போகிறார்கள். அதில் ஒரு காட்சி வருகி றது. சிவனின் கைலாசத்தில் நடக்கிற மாதிரி ஒரு ஸீன் அந்த ஸீனை என்ர பாணியில போட்டுத் தரச் சொல்லி வசந்தகுமார் என்ற கலைஞர் ஒருவர் சொல்லியிருக்கிறார். அதற்கும் இசையமைத்துக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி:- உங்களுக்குப் பிடித்த, கவர்ந்த கவிஞர், பாடகர் யார்?**

பதில்:- நிச்சயமாக பாரதியார் பாடல்கள் பிடிக் கும்.

**கேள்வி:- குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாதிரி உங்களுக்குப் பிடித்த பாடல்?**

பதில்:- எங்க போனாலும் 'குயிலே உனக்கு அனந்த கோடி' இந்தப் பாடலை பாடச் சொல்லிக் கேட்பார்கள். அந்தப் பாட்டை நான் மறந்தாலும் ரசிகர்கள் விடமாட்டார்கள்.

**கேள்வி:- நீங்கள் படிக்கிற பாட்டு?**

பதில்:- எனக்கு விருப்பம் M.S சுப்புலட்சுமி பாடிய 'குறையொன்றுமில்லை' அந்தப் பாடல் அதோடு கர்ண ரஞ்சனியில "நாரயணா" அந்தப் பாடலும் தான். அந்தப் பாட்டைக் கேட்டாலோ பாடினாலோ மனதில் ஒரு ஆறுதல் ஏற்படும்.

**கேள்வி:-கலைத்துறையோடேயே நீங்கள் ஒன்றிவிட்டீர்கள். சில பேருக்கு வாழ்க்கை ஒருபக்கம் தொழில் ஒரு பக்கம் இரண்டுக்கும் இடையில் தொடர்பு இல்லாமல் தொடர்பு இருந்தாலும் ஆத்ம திருப்தி இல்லாமல் இருக்கும் இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்:-நான் முன்பு சொன்னதுபோல் Satisfy department வேலை செய்திருந்தால் வாழ் க்கை வேறரீதியில போயிருக்கும். அந்த வேலையோடு வீட்ட வந்தா, நாட்டியமும் சங்கீதமும் ஆக இருந்திருக்கும். கடவுள் எனக்கு ஒரு திருப்பு முனையைக் கொடுத்திட்டார். இலங்கை வானொலியிலும் அந்த வேலையை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்குள் போனது எனக்கு ஒரே துறையில உயரக்கூடியதாயிருந்தது. வீட்டையும் எனக்கு முழு சப்போர்ட். அதற்கு கடவுளுக்குதான் நன்றி சொல்ல வேண்டும்.

**கேள்வி:-உங்கள் குரல் இவ்வளவு இனிமையாக இருப்பதற்கு என்ன காரணம்?**

பதில்:- நான் நினைக்கிறேன் வயசு போய்க்கொண்டிருக்கிறதென்று ஆனால் நீங்கள் குரல் இனிமையாக இருக்கிறதென்று சொல்கிறீர்கள் உண்மையில் என் குரலுக்குப் பெரிதாக நான் கவனமெடுக்கிறதாக சொல்லமாட்டேன்.

**கேள்வி:-உங்களிற்கு ரசிகர்களின் ஆதரவு நிறைய இருக்கிறதென்று நினைக்கிறேன். அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள். ரசிகர்களுக்கு என்ன கூறப்போறீர்கள்?**

பதில்:- என்னைப் பொறுத்தவரையில் சில ஆத்மார்த்தமான ரசிகர்களும் இருக்கிறார்கள். சிலர் முகஸ்துதிக்காக கூறுவதுமுண்டு.

கணவர் நல்லதொரு பரம விமர்சகர், அவர் சபையில் இருந்தால் எனக் கொரு பயம் இருக்கும். எத்தனையோ மேடைகளில் பாடியிருக்கிறேன்.

நான் பாடும்போது அவர் சபையில இருந்தால் நான் விட்ட எல்லாப் பிழைகளையும் சொல்லுவார். ஆனால் அது எனக்கு உதவியாக இருந்தது. அது உண்மையான விமர்சனமும் கூட சில நல்ல நண்பர்கள் நல்லா இருந்தா, நல்லது என்றும் சில நேரம் அன்றைக்கு மாதிரி இன்றைக்கு அமையவில்லை என்ன நடந்தது என்றும் கேட்பார்கள் சில பேர் நாட்டியத்துக்காக அல்ல பாட்டுக்காக பார்க்கவந்தோம்" என்றும் சொல்லுவார்கள்.

**கேள்வி:- இந்த போட்டிகள் எந்த காலகட்டத்தில் நடைபெறும்?**
**பதில்:-ரஷ்யாவில் கசகஸ்தான் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அது ஓகஸ்ட் மாதத்தில் நடக்கும். சங்காசீனாவில் நவம்பர் மாதத்தில் நடக்கும்.**

**ரஸ்யா, சீனா, போன்ற நாடுகளில் இடம்பெறும் சர்வதேச இசைநிகழ்ச்சியில் பங்குபற்ற தகுதியுள்ள கலைஞர்கள் எமது பத்திரிகையூடாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்**

# நடீன் கார்டிமருடன் ஓர் உரையாடல்

## இலக்கிய சங்கமம்

**டயானா** - தனது நோபல் பரிசு உரையில் லோல் ஜெனிட்ஸன் குறிப்பிட்டார். சிக்கல் மிக்கதான இக்காலகட்டத்திலே, சமுதாயம் தன் இயல்பை புரிந்து கொள்ளும் வகையி லும் தீவிர அனுபவங்களை சில இடங்களிலி ருந்து வேறிடங்களுக்கு மாற்றும் வகையிலும் உதவுவது உலக இலக்கியத்தினால் முடியக் கூடியதே. "Julu's people" இல் தனக்குத் தெரி யாது தன்னால் கற்பனை செய்து பார்த்திருக்க இயலாது. அல்லது கற்பனையால் கண்டறிந் திருக்க இயலும் என்று அவள் அறிந்து கொள்வதுடன் எந்தக் கற்பனைப் படைப்பும் போட்டியிட இயலாது என்று மௌரீன் அறிந்து கொள்ள முடிகின்றது. அப்பாத்திரம் லோல்ஜெனிட்ஸனை நிராகரிப்பதாகத் தோன் றுகிறது.

**கார்டிமர்** - ஆமாம், முரண்பாடு இருக்கிறது. ஆனால் அம்முரண்பாடுதான் இலக்கியத்தின் சவாலாகும். எழுத்தாளர் என்ற வகையில் உங் கள் படைப்பத் தருகின்ற சவாலாகும். முன்ன தாக என்னிடமிருந்து நீங்கள் மேற்கோள் காட்டினீர்கள். நீங்கள் கண்டறிந்ததை, உங்க ளுக்குத் தெரிந்ததை கண்டறியும் நிகழ்ச்சிப் போக்கில் இருக்கும் உங்களையெல்லாம் கொண்டிருப்பதான, சரியான வார்த்தைகளை யும் சரியான வடிவத்தையும் கண்டறிவதா கும். இப் போது மௌரீன் ஓர் எழுத்தாளர் அல்லது பலரை சோதித்துப் பார்த்து குறை பாடுடைய வர்களாக இருப்பதை அறி கின்றான். ஒரு வேளை அப்புத்தகத்தில் நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். அவளுக்குப் பொருளு டையதாக அமையும் விதத்தில் அவ்வனுப வத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளும் விதத் திலே நான் அவள் கதையை எழுதியிருக்கி றேனா அல்லது எழுதவில்லையா?

**டயானா** - உங்களது பல பாத்திரங்களி னுடைய தனிப்பட்ட வாழ்க்கையானது அவ ற்றின் அரசியல் வாழ்வால் வடிந்து போயிருக் கிறது. என்பது தற்போது 'Burger's Daugh- ter' இல் ஆராய்ந்தறியப்பட்டுள்ளது. ஒன்று இன்னொன்றை துடைத்தழித்து விடுவது தவிர் க்க முடியாததா? அவை இரண்டும் ஒன்றேதானா?

**கார்டிமர்** - அது தவிர்க்க முடியாததென நான் எண்ணவில்லை. ஆனால் தென் ஆஃ பிரிக்காவில், ஏதாவது ஒரு வகையில் அரசி யலால் பாதிப்புக்குள்ளானவர்களுடனான நீண்ட காலம் பரிச்சயம் மற்றும் அவதானி ப்பு மூலம், தீவிரமான அரசியல் ஈடுபாடு தனிப்பட்ட வாழ்க்கையில் மிகுதியான வேத னையை உண்டு பண்ணுவதாகக் கருதுகி றேன். தீவிரமான உதாரணம் ஒன்றைப் பார்க்க லாம். அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டி ருந்த ஒரு தம்பதியரை அறிவேன். அக்கண வர் நீண்ட தண்டனை பெற்றிருந்தார். அவர் ஒரு வெள்ளையர், சிறைக்குப் போனார். அது நல்லதொரு திருமணமாகவே தோன்றியது. அவர்கள் இளைஞர்கள். ஒரு குழந்தை இருந் தது. காதலித்தனர் சந்தோஷமாகத் தோன் றினர். "ஏழாண்டுகள் நான் இங்கேயிருப்பேன், இது நம் வாழ்வின் அங்கம் அரசியலில் தீவிர மாய் ஈடுபாடு கொண்டதன் அங்கம்' என்று அவள் அவனிடம் உறுதிப்படுதததியிருக்க வேண்டும் . ஆனால், அவ்வேழாண்டு காலத் தில் இன்னொருவரைச் சந்தித்தாள், கண வனை விவாகரத்து செய்தாள் என்பது தான் உண்மை. இப்போது நாம் அவளை எப்படி, மதிப்பிடுவது அவன் அவளைக் குறித்து என்ன உணர்வான் என்பதை எப்படி அறி வது? சிறையில் அடைபட்டுள்ள அவனால் இன்னொருத்தியிடம் காதல் வயப்பட முடி யாது. சிறைக்கு வெளியே இருந்த அவள், இளமையும், அழகும் பெற்றவள், நாடு கடந்து வாழ்பவள், குழந்தையை பராமரிக்க சிரமப்படுபவள். யாரோ ஒருவரைப் பார்த்து காதல் கொண்டு விட்டாள். அவனுடன்

**தொகுப்பு: தயாளன் சி.செபனாயகம் சட்டத்தரணி, கொழும்பு.**

வாழ்ந்த அவள் என் கணவன் வரும்போது இவ்விவாகரம் முடிவுக்கு வந்து விடும்' என்று உணர்ந்திருக்கலாம். திருமண நினைவை விடவும் வலுவானதாக அவ்விவகாரம் இருந் திருக்கலாம். அவர்கள் மணம் செய்து கொண் டனர். இங்கே நானொரு நாவலை உங்களுக் குத் தந்து கொண்டிருக்கிறேன். (இருவரும் சிரிக்கின்றோம்) ஆனால், அரசியலில் ஒருவர் கொண்டுள்ள அர்ப்பணிப்பு (இது ஓர் அதீத உதாரணம்) தனிப்பட்ட வாழ்க்கையில் உண் டாக்கும் வேதனையை / சிக்கலை இது உணர்த்தும். ஒவ்வொருவரும் ஒவ்வொருவித மாக இதனை அணுகுதல் முடியும். விவாக ரத்து செய்து கொண்ட அவள் இன்னொரு வரை மணந்து கொண்டாள். சிறையிலிருந்து வெளி வந்த அவன் தன் தனிப்பட்ட வாழ்க் கையை மீண்டும் தொடங்க வேண்டியிருந் தது. சில வருடங்களுக்கு முன்னர், கறுப்பின மனிதன் ஒருவன் குறித்த ஓர் அரசியல் வழ க்கு இருந்தது. பன்னிரண்டாண்டு தண்டனை கிடைத்தது அவனுக்கு. சிறையிலிப்பவரை உறவினர்கள் பார்த்து வருவது சாதாரண காரி யமன்று. அவனது மனைவியான சாதாரண கிராமத்துப் பெண் நீதிமன்றத்தில் துள்ளிக் குதித்தபடி 12 ஆண்டுகள் ஒன்றுமே இல்லை!" என்று கூச்சலிட்டாள். அதனை நினைக்கும் போது இப்போது கூட நெகிழ்ந்து போகி றேன். அது ஓர் அசாதாரணமான நிகழ்வாகும். அவளுக்கு என்ன நிகழ்ந்ததென இன்னும் ஆச்சரியப்படுகிறேன். 'ஒன்றுமே இல்லை!' என்னும் கூச்சலாய் அவள் பீடிக்கப்பட்டிருந் தாளா? எனக்குத் தெரியாது. அப்போது அவளை எனக்குத் தெரியாது. இவையெல் லாம் அரசியல் தனிப்பட்ட வாழ்க்கையால் நேர்ந்த சில வேதனைகள் "Burger's Dau gher" இல் பெற்றோரின் அரசியல் நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டால் குழந்தைகளுக்கு என்ன நிகழ்கிறது. என்பதை ஆராய்ந்திருக்கிறேன்.

**டயானா** - தீவிரவாதிகளின் பிள்ளைகள் தம் பெற்றோர் வழியை விரும்புவதில்லை. தீவிரமான அரசியல் சார்பினின்றும் தம்மை நேர்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர். உங்கள் நாவல் "The Late Bourgeois World" இல் வரும் போபோ, தன் பெற்றோர் பிற பெற்றோர் மாதிரி இருக்க வோதனையிலி ருந்து திரும்பிவிட வேண்டுமென்று" என்று ரோஸா பர்கர் உணர்கின்றார். தீவிரவாதத்தை சுவீகரிப்பதானது பழமைவாதத்தை சுவீகரி ப்து போன்று அவ்வளவு ஒடுக்கு முறையா னதா?

**கார்டிமர்** - சிலவற்றை முன் மொழிகின் றேன். அவர்கள் சுவீகரிக்க விரும்புகின்றார் களா/விரும்பவில்லையா என்று கூற வில்லை. வினவுகின்றேன். இதன் மீது சமயங்களில் ஆத்திரம் தோன்றுவதில்லையா, ஏன் இது திணிக்கப்பட வேண்டுமென்று இளைஞன் ஒருவன் ஆச்சரியப்படுகையில் பொருளில் லையா, மற்றவர்கள் ஏன் எளிதாக வாழ முடி கிறது என்று வினவுகிறேன்.

-தொடரும்.

## நூல் வெளியீட்டு விழா

எதிர்வரும் 04-07-2004ம் திகதி **முல்லைமணி V.சுப்பிரமணியம்** அவர்களின் "**மழைக்கோலம்**" என்ற நூல் வெளியிடப்படவிருக்கிறது. இந்நிகழ்வு **பி.ப 5.00** மணியளவில் **கொழும்பு தமிழ் சங்க** மண்டபத்தில் இடம் பெறும்



*பால வயிரவநாதன் எழுதிய "வாழ்வியல் வசந்தங்கள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.*

*மயூரபதி ஆலய அறங்காவலர் பொன். வல்லிபுரத்திடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் முதற் பிரதியை பெறுகிறார். நடுவில் நுாலாசிரியா் காணப்படுகிறார்.*



*அண்மையில் இலங்கை தமிழ் கலைஞர்களின் பிரச்சனை சம்பந்தமாக புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் கலாச்சார பாரம்பரிய அமைச்சர், திரு. விஜித ஹேரத் அவர்களை சந்தித்து உரையாடியபோது, எடுக்கப்பட்ட படம்.*

*இடமிருந்து வலமாக புரவலர் ஹாஷிம் உமர் அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரா. சந்திரசேகரன் நடிகர் மோகன்குமார் மற்றும் பலர் காணப்படுகின்றனர்.*

## நூல் விமர்சனம்

# ஊடக இயல் கலைச் சொல் அகராதி

ஊடக இயல் கலைச் சொல் என்கின்ற இந்த நூலை அருள் திரு ரூபன் மரியாம் பிள்ளை அவர்கள் ஆக்கியுள்ளார். ஊடக இயலானது அச்சு ஊடகங்கள், மின்னி யல் ஊடகங்கள், என்ற இரு வகை யைத் தன தாக்கி உல கையே உறுட்டித் திரட்டித் தன் கையில் ஏந்தி நிற்கிறது.



இப்படிப்பட்ட ஒரு ஊடகத்துறைக்கு இலங்கைப் பத்திரிகையாளர்கட்கு பத்திரி கைத் துறை மாணவர்கட்கு அருமையான ஒரு பொக்கிசத்தைப் படைத்துத் தந்திருக் கிறார் அருள் திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள்.

பத்திரிகைத்துறை என்பது மிகவும் ஆப த்தானதும், கடினமானதுமாகும். இலங்கை யைப் பொறுத்தவரை இத்துறையானது தமிழ் மக்களையும் அத்துறைசார்ந்தவர்க ளையும் ஊடகத்துறை எட்டி நின்றே பார்கி றது. அதுமட்டுமில்லாமல் ஊடகத்துறை சார்ந்த போதிய கற்கை நெறியே பயிற்சி களோ இல்லை. ஏன் தேவைக்கேற்ப நூல் கள் கூட வெளிவருவது இல்லை. அந்த வகையில் தமிழ் பத்திரிகையாளர்களுக்கு ஊடக இயல் கலைச் சொல் அகராதி என்ற இந்த நூலானது பெரும் கொக்கிஷம் என்றே கூறுலாம். இன் நூலில் ஊடகங் களில் பயன்படுத்தக் கூடிய கலைச்சொற்க ளுக்கான விளக்கங்கள் பெரும்பாலும் இப் புத்தகத்தில் இடம் பெறுகின்றது என்றே கூறலாம். ஆக இப்புத்தகத்தை ஊடகத் துறை சார்ந்த அனைவரும் கற்றறிதல் நலன் பயக்கும்.

இவ் நூலாசிரியரான அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களைப் பற்றி பார்த் தால் இவர் பாது காவலன் என்ற பத்திரிகையின் ஆசி ரியராவார். அத்துடன் இவர் பத்தி ரிகை இயலுக்கு ஒரு அறிமுகம், பத்திரிகை இயல் அடிப் படைகள், மின் னியக்கப் பத்தி ரிகை இயல் ஓர் அறிமுகம்




போன்ற நூல்களை ஊடகவியலாளர்களுக் காகத் தந்து, ஊடகத்துறைக்குப் பெரும் பணியாற்றியுள்ளார்.

A. வாணிஜெயா
Dip. in. Jus

**தணலின் நூல்விமர்சனப் பகுதியில்**

உங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைச் செந்தணலிற்கு அனுப்பி வையுங்கள்

# கவிதைக் களம்

## போதும் நிறுத்து

கண்களின் ஈரம்
காயுமுன்னே - மீண்டும்
கண்கள் கலங்கிவிட்டன.

உழைத்தே உருகிப்போன
எம் சமூகம் தளைத்திட
வந்த ஸ்ரீபாத
கல்விக்கல்லூரியில்
கொள்ளைகள் நிர்வாகமே.

நியாயம் கேட்ட
நாளைய தலைமை
நடுத்தெருவில் தண்டிக்கப்பட்டனர்

ஊழல்மிக்க நிர்வாகத்துக்கு
உதவியானது
மலையகத் தமிழ் அரசியல்.

கைநழுவிப்போகும் - எம்
ஸ்ரீபாத கல்லூரியை
காப்பாற்றப் போராடிய
மலையக ஆசிரிய் மாணவர் மீது
படையெடுத்துத் தாக்கியது
அரச காவல்துறையும்
காடையர் கூட்டமும்
பின்னணியில்
மலையகத் தமிழ் அரசியல்.

போதும் இத்தோடு
நிறுத்திவிடு!
நாளைய நம் சமூகம்
நிமிர, நல்லதாய்
சிந்தி மலையகமே!
எம் சந்ததியைக் காப்பாற்ற.

அஞ்சிவிடாதே
இளைய ஆசிரியசமூகமே
அதர்மம் நிலைக்காது,
அறிவை பெருக்கு
அறுத்திடுவோம்
அநியாயத்தை.

எஸ்.பி.பாலமுருகன்

## காதல் ஆசை



ஒரு முறை
கவிதை எழுதவேண்டும்
உன் பெயரைத் தா...!

ஒரு முறை
கனவுகாண வேண்டும்
உன் கண்களைத் தா...!

ஒரு முறை
காதலிக்க வேண்டும்
உன் இதயத்தைத் தா..!



ஒரு முறை
மாலையிட வேண்டும்
உன் தோள்களைத் தா..!

ஒருமுறை
மரணிக்கவேண்டும்
மயானமாய் உன்
மடியினைத் தா...!

S.தமிழாம்பிகை ஜெகன்
நானாட்டான்

## நீ இல்லாத எல்லாம்

நீ இல்லாத
என் பழைய மனசு
என் மேசையில்
உன்னைப்பற்றி
எழுதாத வெற்றுக்
காகிதங்கள் - உன்
கால்த்தடம் பதிக்காத
மணற்பரப்பு - உன்
நினைவுகள் தோன்றாத
தனிமை உனைப் பார்க்கத்
தோன்றாத பகற் பொழுது
நான் நிம்மதியாய்
தூங்கிய ஏதேனும்
ஓர் இரவு உன் சுவாசம்
கலக்காத கொஞ்சக்
காற்று இன்னும் நான்
வாழ்வதற்குத் தேவையான
நீ யில்லாத எல்லாம்.
வேண்டுமெனக்கு தருவாயா?

கே.எல்.ஹில்மி
சாய்ந்த மருது

## அன்பே உன் நினைவுகள்



பெண்ணே...!
கண்ணுக்குள் - உன்
நினைவுகள்
நீராக மாறின...

கருத்துக்குள் - உன்
நினைவுகள்
சோகமாய் ஆக...

இதயத்திற்குள் -
இரத்தமாய் பாய்ந்தன...

தொண்டைக்குள் - உன்
நினைவுகள்
முள்ளாக உறுத்த
நீமட்டும் மலராகவே
இருக்கிறாய்

பி.சசி
இலந்தகுளம்
நானாட்டான்

## உன் வருகைக்காக

உன்னை பார்க்கும் போதுதான்
என் உள்ளம் மலர்கிறது.
உன் உருவம் எனக்குள் - பொழிகிறது
என் கண்கள் சத்தமின்றி
உன்னோடு - உரையாடுகிறது.
காற்று வருகையில் கன்னி
அவள் சேர்ந்து வரக் கண்டேன்.
உனக்காகவே! காத்திருப்பேன்
வீதியின் ஓரமாய் பாத்திருப்பேன்
உள்ளத்தை உனக்கெனவே
திறந்தேன்
இன்று ஊமையாய்
உதிர்ந்து கிடக்கிறேன்
இனியவளே உன் வருகைக்காக

அல்லிமுத்து. செல்வா
சமர்செட்

## நினைவுப் பூக்கள்!

பூக்கள் கூட
மலர்ந்து உதிர்கின்றன
என் நெஞ்சில் பூத்த
உன் நினைவுப் பூக்கள்
இன்னும் உதிராமல்
மணம் வீசுகின்றன!

க.நிஷாந்தன்
நானுஓயா

## நித்தமும் நிஜ நினைவுகள்

நித்தமும் உன் நினைவில் நீந்துகின்றேன்
நினைவலையில் சிக்கித் தவித்தேன்
தினமும் நேசிக்கின்றேன் வதனத்தை.
பகலில் யோசிக்கின்றேன் பழகியதை,
இதயத்தில் புகுந்துவிட்டதுகாதல்
கழற்ற முடியவில்லை.
கதவுகள் மூடியும் விட்டன
திறப்பு உன்னிடம் உள்ளன
அதனை வேறு அன்பால் திறக்க
முற்பட்டால் ஆபத்தாகிவிடும்
உயிரே உள்ளம் நீ உன்னிடம்.
நிஜமானால் உண்டு. இல்லையென்றால்
இறந்துவிடும் என் இதயம்

நிஜத்தின் நஜிமுத்தீன்
ஏறாவூர் 03ஏ

## உணர்வு

வானம் கறுத்துப் பூதம் போல்
படுத்துக்கிடந்தது.
இடிபாடுகளிற்கு இடையே
இடர்பட்டு நின்ற குடிசைகளிற்கிடையே
நான்
தேடற்கரியதைத் தேடி

சிலகுடிசைகளில்
பூனை விழி விழித்தன
நாலைந்து குப்பிவிளக்குகள்
நாசூக்கான சிரிப்புகள் சில
வேதனையுடன் பிறந்த பெருமூச்சுக்கள்
சூடாக எழுந்த யதார்த்த வாதங்கள்.
செந்தமிழின் இனிமை கொன்ற
செந்தமிழ்கள்.
சினிமாப்பாட்டுக்கள்
இத்தனைக்கும் மத்தியில்
அழுகை ஓலங்கள்



மூளையைக் கலக்கி
நரம்புகளை உலுக்கி
என்புகளை உருக்கி
மனிதநிர்மாணத்தையே
நிலைகுலைய வைட்ட
போலிருந்தது சூழல்.
இதன் நடுவே
தேடற்கரியதை தேடி
இதுவல்ல இடமெனவுணாநது
என் தேடலை திருப்பினேன் புறம் நோக்கி

செ.நேசன்.

# ஒரு மல்லிகை சிலப்பாகிறது

உதிர்வு 08

ஈழவாணி

கல்லறைகளுக்கிடையில் மறைந்து கிடந்தாள் சக்தி.

நேரம் ஆகிக்கொண்டேயிருந்தது. பதினொருமணி ஆகிவிட்டது.

இன்னும் சனநடமாட்டம் குறையவில்லை.

நேரம் செல்லச் செல்ல அங்கு வித்தியாசமான மாற்றங்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன.

"ஸ்ஸ்... ஸ்ஸ்" எனக் கேட்ட சத்தங்கள் பெரிதாகி பேச்சொலிகளாக கேட்கத் தொடங்கின. அதுவும் ஒரு கிராமமே பேசுவது போன்ற ஒலியில் -

"சக்தி மெதுவாக எழும்பினாள், ஆனால் உடம்பு ஒத்துழைக்க மறுத்தது அடித்துப் போட்டாற் போல் சோம்பிப்போய்க் கிடந்தது.

மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். உடல் தன்னிலையை இழந்து கட்டுப்படுத்த முடியாமல் நடுங்கத் தொடங்கியது.

அப்படியே திரும்பவும் தலையைக் கீழே போட்டுப் படுத்துக் கொண்டாள்.

கல்லறை மனிதர்கள் பேசத் தொடங்கினர். ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் திருவிழாக் காலம்போல் உலாவிக் கொண்டிருந்தனர் அந்த மனிதர்கள்.

அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த கல்லறைகளைத் தட்டி எழுப்பினர்.

"டொக்... டொக்"

"யார் பூமியில்"

"இல்லை. பூமியில் மனித பூதங்கள் எல்லாம் உறங்கி விட்டன. வா நாங்கள் கல்லறைப் பூங்காவில் சந்தோசமாகக் காதல் செய்யலாம்.

"நீ உண்மையாகத்தான் கூறுகின்றாயா என்னையும் உன்னையும் பிரித்த மனித பூதங்களைப் பார்க்க நான் விரும்பவில்லை."

"சரிசரி இந்த சந்தோசமான நேரத்தில் எதற்கு அந்தப் பூதங்களை பற்றி வெட்டிப்பேச்சு வா நாம் காதல் செய்வோம்" எனக் கூறிய எலும்புக்கூடு ஒன்று அதன் அருகிலிருந்த எலும்புக் கூட்டின் கையைப்பிடித்துக் கொண்டு "காதல் பிசாசு காதல் பிசாசு ஏதோ சவுக்கியம் பரவாயில்லை" எனப் பாடிக் கொண்டே சென்றது.

இன்னுமொரு எலும்புக்கூடு பயிற்சி எடுத்துக்கொண்டு, மற்றைய எலும்புக் கூட்டிடம் பேச்சுக் கொடுத்தது,

"டேய் மச்சான் மனிதப்பிசாசு வாசமடிக்குதே. சரிடா மச்சான் வா செல்பட்டதில் எனக்கு சின்ன விரல் சுழுக்கிற்று இருந்தாலும், என்ட் சிமாட்டான நட ஒன்றும் பாதிக்கவில்லை. அதைத்தான் நான் எக்சசைஸ் செய்து மெயின்ரன்பண்ணு கிறேன்."

"அது சரிடா மச்சான் இந்த மனிதப் பிசாசுகள் ஏன் நம்மை கண்டா பயப்பிடுகிறங்க இங்க வாழுற தமிழ் மக்களவிட நாம நல்லா இருக்கிறம். அவங்களுக்கு இங்க என்ன சுதந்திரம் இருக்குது. எங்களபார் தனியான கிராமம், தனியான மொழி, நமக்கு நாமதான் ராசா, மந்திரி எல்லாம், நம்மட ஏரியாக்குள்ள யாராவது நுழையிறதா இருந்தா நம்மள மாதிரி அவங்களும் மாறித்தான் இந்தக் கோட்டைக்குள் நுழைய விடுவம். நம்மளுக்கு இருக்கிற சுதந்திரம், உரிமை, தனித்துவம் கூட இலங்கையில் வாழுற் தமிழருக்கு இல்லையடா, பாவம்டா தமிழர்கள்" என்றது மறைய எலும்புக்கூடு.



திடீரென மின்னல் கண்ணைப்பறிக்க இடி முழங்கியது. மழைத் துளிகள் சாதுவாக்கத் தூற ஆரம்பித்தது.

"ஏய் எல்லோரும் கோட்டைக்குள்ள போங்க மழை வருகிறது காய்ச்சல் வந்திடும், இப்ப பரவலா டெங்கு காய்ச்சல் வேறு வருகுதாம், நம்மட ஏரியால ஒரு டாக்டர்தான் இருக்கிறார் எல்லோரும் உள்ள போங்க என்றது எலும்புக்கூடு.

மழை சாதுவாகத்தூறி, பலமாக கொட்டத் தொடங்கியது.

சக்தியின் மீது மழை கொட்டியது. ஆனால் அவள் உடல் வெடவெடவென நடுங்கி வியர்த்துக் கொண்டேயிருந்தது.

எலும்புக்கூடுகள் கல்லறைகளைத் திறந்து வெளியே வந்து பேசியதும் உள்ள சென்றதும் அவளுக்கு அந்த இருட்டில் துல்லியமாகக் கேட்டது.

அவள் மனதை மரணபயம் ஆட்ட எழுந்து ஓடத் தொடங்கினாள். கால்கள் ஓட மறுத்தன இருந்தும் முயன்று பலமாக ஓடினாள்.

திடீரென பலமான ஒரு மனிதர் மோதிக் கொள்ள கீழே விழுந்தவள், அந்த உருவத்தைக் கண்டு மயக்கமே வந்து விட்டதைப் போல் அதிர்ச்சியடைந்து நோக்கினாள்.

தொடரும்...




## காட்டோரக் குடிலில்......

"சொனுத்தார தேரரே... இதற்குமேல் உம்மைத் துன்புறுத்த நான் விரும்பவில்லை... நீர் என் மனைவிக்கு இழைத்த கொடுமைக்கு நான் உம்மைக் கொன்றிருக்க வேண்டும்... ஆனால் தேரர் ஒருவரை வாசலதத்தன் கொன்றான் என்ற பழியைச் சுமக்க நான் விரும்பவில்லை... உம்மிடம் 15 வருடங்களாக நான் இருந்திருக்கிறேன்... என் மனைவியைத் தேடுவதற்காக..... அந்த நன்றி வேறு உமது உயிருக்கு உத்தரவாதம் அளிக்கிறது..."

"ஆனந்ததேரோ..... இல்லை... இல்லை... வாசுலதத்தா... உன்னை நான் அழித்தே தீருவேன்.."

"இப்போதைக்கு அழிவதாக எனக்கு உத்தேசம் இல்லை சொனுத்தாரரே... அப்படியே அழிந்தாலும் நீர் தேடிக் கொண்டிருக்கும் புத்தரின் புனிதக் கலசம் உமக்குக் கிடைக்கவே கிடைக்காது..."

அசையமுடியாத வலியோடு சொனுத்தாரதேரர் மண்ணிலே கிடந்தபடி பார்த்துக்கொண்டிருக்க நீராழிக்குடிலுக்குட்போன வாசுலதத்தன். சிறிது நேரத்தில் கண்மணியோடு வெளியே வந்தான்... கண்மணியின் சிக்குப்பிடித்த சிகை முற்றாகவே களையப்பட்டிருந்தது... புத்த தேரிணிக்கோலத்தில் அவள் அழகாகச் சிரித்தாள்...

"சொனுத்தார தேரரே... புத்தரின் புனிதக் கலசம் தங்களுக்குத் தேவையானால் எங்களைத் தொடர்ந்து வாருங்கள்... ஆனால். இந்தமுறை அந்த மொட்டை மலையிலிருந்து நானே தங்களைத் தலைகீழாகத் தள்ளுவேன்... வீரர்களுக்குக் காட்டும் கருணையை பாலிக் காட்டாறு தேரர்களுக்குக் காட்டுவதில்லை."

மகாமஞ்ச அறை மருந்துக்கூடத்தில்... செந்நிறக்குடுவைகள் இரண்டு இருக்கின்றன.... அதற்குள் பச்சைவண்ணத்தில் மூலிகைத்திரவம் இருக்கும்... ஒரு குடுவைத்திரவம் பட்டதுமே தோலைக் கருக்கிவிடும் எச்சரிக்கை... மற்றத்திரவம் விறைப்பைக் கொஞ்சம்...."

சொனுத்தாரர் காதுகளைத் தீட்டிக் கொண்டார்.. வானம் சடார் சடாரென்று முழங்கி வாசுலதத்தனின் வார்த்தைகளிற் பாதியை விழுங்கிக்கொண்டது....

வாசுலதத்தனின் புரவி துாறல் மழைக்குள்ளே மெல்ல நடந்து பின்னர் வேகம் பிடித்து.... சொனுத்தாரரின் கண்களிலிருந்து மறைந்துபோயிற்று...

சொனுத்தாரர் ஆத்திரத்தோடு முனகிக் கொண்டார்... எப்படியாவது வஞ்சம் தீர்க்கவேண்டுமென்று அவருக்குள் மூண்ட வெறி அக்கினிக்குள் முற்றாக மூழ்கிப் போனதால்.... "சோ" வென்று கொட்டத் தொடங்கிய மழை பற்றிய சிந்தனையேயில்லாமல் மண்ணிலே கிடந்தார்.

வாசுலத்தனும் கண்மணியும் அந்தப் புயல் மழையைப் பொருட்படுத்தாமல் மகிளபுரத்தை நோக்கிய காட்டுச் சாலையிற் பறந்துகொண்டிருந்தனர்... நீண்ட காலமாகத் தன்மீது தனித்துப் பயணஞ் செய்த ஆனந்ததேரர் இன்று இன்னொரு பெண்ணையும் கொண்டுபோவதால் பெரும் உற்சாகம் கொண்ட புரவி, காட்டுப்பற்றைகள் தாழ்ந்த கிளைகள் என்று எதையும் இலட்சியம் செய்யாமலும், இடைக்கிடை வெட்டிய பெரும் மின்னலையும் இடி முழக்கத்தையும் அலட்சியம் செய்தும் சீரான வேகத்தில் போய்க்கொண்டிருந்தது.

நீண்ட நேரப் பயணத்தின் பின்னர்



கண்மணியின் கேலி வார்த்தைகள் சொனுத்தார தேரரைக் கொல்வது போல இருந்தன...

"சொனுத்தாரரே.... கண்மணி நன்கு களைத்துவிட்டாள்... நெடுந்துாரம் நடக்கமுடியாது.. அதனால்..."

"அதனால்.."

ஆனந்ததேரர் வழக்கமாக ஏறிப்போகும் புரவியை இந்த வாசுலத்தன் கொண்டு போக நினைக்கிறான். தங்களுக்கு ஆட்சேபம் ஏதும் இல்லையே..." என்று புன்முறுவலோடு சொன்ன வாசுலதத்தன் பதிலுக்குக் காத்திராமல், ஆகாச சைத்தியத்தை நோக்கிப்போய்ப் புரவியோடு வந்து சேர்ந்தான்...... அந்தப் புரவி சொனுத்தாரரைப் பார்த்து "ஈஈஈஈஈ" என்றது...

குதிரையில் தாவி ஏறிய வாசுலதத்தன் இடக்கையால் வெகு இலகுவாகக் கண்மணியைத் துாக்கி முன்னால் அமர்த்திக் கொண்டான்... இருவரையும் தாங்கிய புரவி ஒருமுறை சொனுத்தார தேரரைச் சுற்றி வந்தது...

சொனுத்தாரருக்குள் வெடித்துக்கொண்டிருக்கும் புயலுக்குப் போட்டியாகவோ என்னவோ வானத்தில் திடீரென்று தோன்றிய முதிர்மேகங்கள் கனைக்கத்தொடங்கி... குளிரை ஏவி... கடகடவென்று நகைத்துப் பின் சிலீரென்று தாரைகளை இறக்கத் தொடங்கியது...

"சொனுத்தாரரே... நாங்கள் வருகிறோம்.. உமது மணிக்கட்டும் இடுப்பும் என்றைக்குமே விறைத்துக்கிடப்பதை நான் விரும்பவில்லை..

காட்டைத் தாண்டிய ஒரு வெளிக்குள் வாசுலதத்தனின் குதிரை பிரவேசித்து... துாரத்திலே தெரிந்த சிறு வெளிச்சத்தைக் கண்டதும் அது காட்டோரக் குடில்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று பழக்கப்பட்டிருந்த அந்தப் புரவி ஊகித்திருக்கவேண்டும்.... சட்டென்று தன் வேகத்தை மட்டுப்படுத்தியது..

"அன்பரே.. அது என்ன வெளிச்சம்..." என்று கேட்டாள் கண்மணி...

"காட்டோரக் குடில்கள் கண்ணி..." என்றான் வாசுலதத்தன்...

புரவி மெல்ல நடந்து குடிலை நெருங்கியபோது குடிலுக்குப் பக்கத்து மரத்தில் இன்னொரு புரவி கட்டப்பட்டிருந்தது தெரிந்தது...

"கண்மணி... இந்தக் குடில்கள் பொதுவாக இருண்டுதான் கிடக்கும்.... வனவிலங்குகளின் மீதுள்ள அச்சத்தால் இரவில் தனித்து எவரும் இந்த வழிகளிற் பயணிப்பதில்லை.... ஆனால் இன்றைக்கு குடிலில் ஒளி தெரிகிறது.... புரவிவேறு கட்டிநிற்கிறது..."

"யாரோ மழைக்கு ஒதுங்கியிருக்கிறார்கள் அல்லவா"

"ஆமாம்... ஆனால்...?"

"தங்கியிருப்பவர் நண்பரா எதிரியா என்று சிந்திக்கிறீர்கள்.. அல்லவா அன்பரே..."

ஆமாம் கண்மணி..." என்ற தொடங்கிய வாசுலதத்தன்... "இந்த மழையில் இனியும் போகமுடியாது... கண்மணி... அதனால் யாராக இருந்தாலும் பார்த்துவிடுவோம்.." என்று முடித்ததோடு புரவியை மரத்தினடிக்குச் செலுத்தி இறங்கினான்... கண்மணிக்கும் கைகொடுத்து இறக்கிவிட்டான்...

இருவரும் மெல்ல நகர்ந்து குடிலை நெருங்கினார்கள்...

வாசுலதத்தன் மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான்...

அதே நேரத்தில் உள்ளே படுத்திருந்த அந்த மனித மலையும் வாசுலதத்தனைத் திரும்பிப் பார்த்தது...

வாசுலதத்தனும் கண்மணியும், மழை பொழியும் அந்த இரவில், காட்டோரக் குடிலின் உள்ளே படுத்திருந்த மனித மலையைக்கண்டு திகைப்புற்று நின்ற அதே நேரத்தில், ஆகாஸஸைத்தியத்திலிருந்து அடர்காட்டுவழியில் சளைக்காது புரவியில் வந்த துட்டகாமினி, மணிக்ககங்கைக்கரையில் நின்றுகொண்டிருந்தான்... எதிர்காலத்தில் மாணிக்ககங்கையென்று பெரும் புகழோடு கதிர்காமக் கந்தனின் காலடியில் தவழப் போகும் அந்தக் கங்கை தன் அலைத் துளிகளைக் காமினிமீது எறிந்து மெல்ல நகைத்து அவன் கவனத்தைத் தன் பால் ஈர்க்க முயற்சிக்கத்தான் செய்தாள்... ஆனால் துட்டகாமினியின் முகம் இறுகிப் போய்க்கிடந்தது...

மகிளபுரத்தளபதி தேனூரனிடம் வாட்போரில் தோற்ற ஆவேசம் அவன் முகத்தில் இன்னமும் அழியாது இருப்பதை வானத்தில் இடைக்கிடை நெளிந்த மின்னல். வெளிச்சம் போட்டுக் காட்டியது... கங்கைக் கரையின் அடர்மரத்தோப்பின் ஒரு மரத்தில் அவன் திடமாகச் சாய்ந்து நின்றபடி கங்கையில் அக்கரையில் கரும்பூதமாகப் படுத்திருந்த அந்தச் சிறு குன்றையே வெறித்துக்கொண்டிருந்தான்... அவ்வப்போது சில்லென்று அடித்த காற்றின் வருடலால் சிலிர்த்துப்போன இலைகள் அவன் மீது தண்ணீர்த்துளிகளைக் கொட்டினாலும் அதை இலட்சியம் செய்யும் மன நிலையில் துட்டகாமினி இருக்கவில்லை... அவனுக்குள் தோல்வியால் வந்த அவமான அக்கினி எரிந்துகொண்டிருந்தது... தன் இடையிலே சொருக்ப்பட்டிருந்த வாளை அவன் வலக்கை வெறுப்போடு வருடியது.

"சே... ஒரு தமிழனிடம் இப்படி ஒரு அவமானத் தோல்வியா? இந்தத் தோல்விதந்த அவமானத்தைத் துடைக்காமல் நான் கண்மூடித் துயிலமாட்டேன்... என்றாவது ஒருநாள் பெரும்படையோடு கிளம்பி... மகிளபுரக் கோட்டையை மண்மேடாக்கி, தேனூரனைக் கொன்று இந்தப் பழியைத் துடைத்துக்கொள்ளுவேன்... இது மகாபுத்தரின் மீது சத்தியம்... சத்தியம்... சத்தியம்..."

அவன் மனம் ஆங்காரமாகக் கூக்குரலிட்டது...

அவனது மனஉணர்வுகளைப் புரிந்துகொண்டதோ என்னவோ வானம் இடி இடியென்று நகைத்தது...

மின்னல் பளீரபளீர் என்று வெட்டியது...

"நீ மகிளபுரத்தை வெல்ல விரும்பினால்... வீரனாகப் படை திரட்டி... களத்திலே அதைச் சாதித்துக்கொள் காமினி... தன்னந்தனியனாக மகாவலிக் கரையில் நின்று எனது கோட்டையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்காதே... கோழையாகத் தமிழர் தலைகளைத் தறிக்கும் வேலுசுமணன் போன்ற நரிகளோடு தொடர்பு வைத்திருக்காதே... அது உன் வீரத்துக்கு இழுக்கு..."

ஆகாஸ ஸைத்தியத்தின் பின்புறக் காட்டுக்குள், துட்டகாமினியைப் பார்த்து நகைத்தவண்ணம் மகிளபுரத் தளபதி சொன்ன அந்த வார்த்தைகள் துட்டகாமினியின் காதுகளில் இன்னமும் எதிரொலித்துக்கொண்டிருந்ததால் அவன் கண்கள் அனலாக எரிந்தன...

தன்னையறியாமல் சினத்தோடு தன் வலக்காலை ஓங்கித்தரையில் மிதித்தான்... கைகளைப் பிசைந்தவாறு காரணமில்லாமலே தனக்குத்தான் ஏதொ பேசிக்கொண்டான்...

மழை பெருத்து ஆலங்கட்டித் துண்டுகளாக விழத்தொடங்கியதோ.. தான் தெப்பலாக நனைந்துபோயிருப்பதோ அவன் புத்திக்கு உறைக்கவில்லை...

"தேனூரா..உன் குருதியை என் வாள் சுவைத்தபிறகே எல்லாளனை நோக்கி என் படைகள் நகரும்... படை திரட்டி வரச் சொன்னாய்... வருகிறேன் காத்திரு..." என்று.. இடியின் ஒலியை மிஞ்சிய குரலில் ஆவேசத்தோடு கத்தினான் துட்டகாமினி...

அந்தக் காட்டுப் பிரதேசத்தில்... மழையிருட்டில்... துட்டகாமினியின் அந்த ஆவேச அலறலால் திகைத்துப்போனதோ என்னவோ... மழை சட்டென்று நின்றுவிட்டது...

ஆனால் அவனது அந்த ஆவேசத்தை அனுபவித்து நகைப்பதுபோல மணிக் கங்கை "சலசல" என்றாள்...

அவளது நகைப்புக்குப் போட்டியாகத் தோப்பின் பின்பக்கத்திலிருந்து "கலகல" வென்று யாரோ சிரித்தார்கள்...

திடுக்குற்றுப்போன துட்டகாமினிவாளை உருவியபடியே வேகமாகத் திரும்பினான்...

இருட்டைத் தவிர எதுவும் அவன் கண்ணுக்குப் புலனாகவில்லை...

ஆனால் அந்தக் குரல் மீண்டும் கிளுகிளுத்தது...

"அவசரப்பட்டு மீண்டும் வாளை உருவ வேண்டாம் வீரரே..."

"யார் நீ...?"

"நான் யாராய் இருந்தாலென்ன... மீண்டும் ஒரு வாட்போரை உமக்குப் பரிசளிக்க நான் மகிளபுரத்தளபதி தேனூரன் அல்ல வீரரே... அதனால் அதை உறையிலே போட்டுக் கொள்ளும்"

துட்டகாமினி கொஞ்சம் திகைத்தாலும் அந்தக் குரலை எங்கோ கேட்டிருப்பதுபோல உணர்ந்துகொண்டதால் இருட்டுக்குள் எச்சரிக்கையோடு விழிகளை எறிந்தான்...

மரக்கூடல்லுக்குள்ளிருந்து மெல்ல அந்த உருவம் எட்டிப் பார்த்ததோடு

"நலமா அரை மீசை வீரரே"

என்று அவனைப்பார்த்து நகைக்கவும் செய்தது.

தொடரும்

## குட்டித்தொடர்........ 5

# காதல் கதை

எஸ். பி. பாலமுருகன்

அன்பே துசாரா
வெலிக்கடையின் சிறை-என்னை
தினம் சித்திரவதைப்படுத்துகிறது.
உன் நினைவே எனக்கு மருந்தாகிறது.
நாட்டில் இனவாதம் எரியட்டும்
நம்மில் இல்லை பேதம்
சிறைக்கதவு உடையும்
இனவாதிகள் மடிவர்கள்
வருவேன் காத்திரு
உன் சரவணன்.........

துசாராவின் கண்கள் நீரூற்றோடு பேசியது.

அவள் அவனுக்கு எழுதிய மடல்

அன்பே சரவணா
உன் வாரிசு என் வயிற்றில்
துள்ளி விளையாடுகிறது
இது சிங்க குட்டியுமல்ல
புலி குட்டியுமல்ல
மனித வாரிசு.
பத்துமாதம் சுமந்து
இனவாதம் கொண்ட
என் தாய் கூட எனக்கு
வேண்டாம்.
இனவாதம் இல்லாத நீ வேண்டும்
காத்திருப்பேன்
நீ வரும் வரை...
இனவாதமும் இனவாதியும்
இருக்கும் வரை
இங்கு சமாதானமேது?
-உன் துசா..........

அவளின் காத்திருப்பு என்னவாகும் சிறைக்கதவு உடையுமா?

இனவாதம் அழியுமா?

சிங்களத்தி வயிற்றில் தமிழனின் கரு வளர கூடாதா? இனவாதிகள் எப்போது மடிவர்.?

இருபது வயதான அந்த இளைஞனான தந்தையைக்காண காத்திருப்போம்.

முற்றும்



# பூவையர் உலகம்

## தணலின் பூவையர் கருத்தாடல்-17



**புதிய கல்வித்திட்டம் மாணவரின் கல்விவளர்ச்சியை மேம்படுத்துகிறதா இல்லையா?**

தணலின் பூவையர்களே இது பற்றிய உங்களுடைய புரட்சிக் கருத்துக்களை தணலின் கருத்தாடலுக்கு அனுப்பி வையுங்கள்.

**தணலின் பூவையர்கருத்தாடல்**
**த.பெ.இல.1601, கொழும்பு.**
தொ.பெ.இல. 011-4715168
தொலைநகல் : 011-4715168

## தணலின் பூவையர் கருத்தாடல் - 16

# குடும்பத்தில் விவாகரத்து ஏற்பட முக்கிய பங்கு வகிப்பது ஆண்களா? பெண்களா?

**குரல :-1**

தாய்க்குப் பின் தாரமென்பார்கள் நன்மையோ, தீமையோ எதுவரினும் தாயின் கருத்திற்கு எதிர்க்கருத்துரைக்கவோ எதிர்வாதம் செய்வோர் பெரும்பாலான ஆண்கள் முயலுவதில்லை. ஆனால் மனைவி என்றொருத்தி வந்து விட்டாற்போதும் தன்னுடைய கருத்து மட்டுமே சரியானது என்று நிரூபிப்பார்கள். ஒரு சாதாரண செயலைக்கூட மனைவியை அவளின் சுயமுடிவோடு செய்ய விடுவதில்லை. எதையாவது எப்படியாவது சொல்லி குழப்புதல், அவளுக்கென்று சுயவிருப்புக்கள் என்று ஒன்று தலை காட்டவும் கூடாது. அடுத்தவர் முன்னிலையில் அவளை மட்டந்தட்டுதல் அவளின் குடும்பத்தைக் குறைகூறுதல். பெண்ணுக்கென்று சுயமரியாதை இல்லாயா? எந்தத் தவறும் பெண் செய்யக்கூடாது ஆனால் அதைத் தாங்கள் செய்வதோடு அதை நியாயப்படுத்தவும் பல காரணங்கள் காட்டுவர்.

பெண் எதையும் பங்கிட்டுக் கொள்வாள். ஆனால் வாழ்க்கையை ஒருபோதும் யாருக்கும் பங்கிடமாட்டாள். தன் கணவனே தனக்கு எதிரியாய் மாறி வாழ்க்கையில் மனைவிக்கு கொடுக்கும் பங்கை இன்னொருவருக்குக் கொடுத்தால், அவள் இனியும் பொறுத்திருப்பாளா (ஒருசிலர் தவிர) தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் ஒளிமயமான எதிர்காலத்தைத் தான் தேட முனைவாள். ஆகவே ஆண்களே விவாகரத்து ஏற்பட முக்கிய காரணம்.

**R. றெஜிமாலினி,**
**மன்னார்.**

**குரல :-2**

பொதுவாக வாழ்க்கை என்பது இரு தரப்பினருக்கும் இடையே அன்புப்பிணைப்பால் ஏற்படும் ஒரு பந்தம். ஆணுக் கும் பெண்ணுக்கும் உள்ள அன்புத் தொடர் பால் தான் இந்த உலகமே தோன்றியது. இறைவனே இருவரும் சமம் என்று ஏற்படுத்திய உறவுதான் திருமண உறவு. ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து வாழாமல் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கினால் விவகாரத்துதான் அதற்குப் பதிலாய் முடியும். மனங்கள் ஒன்றுபட்டால் சுகமான வாழ்வு தோன்றும் அதை விடுத்து ஒருவரை ஒருவர் குறை கூறி, சிறு பிழையையும் பெரிதாக்கி, விருப்பு வெறுப்புகளை அலட்சியப்படுத்தினால் இருவருக்கிடையேயும் உறவுமுறை விட்டுவிடும் எனவே விவாகரத்திற்கு இருவருமே காரணமாக அமையமுடியம் என்பதே எனது கருத்து.

**S. யூலியற் லெம்பேட்,**
**பள்ளக் கமம், முருங்கன்.**

# இன்றைய பெண்களின் மனக் குமுறல்கள்

வேலைக்குப் போகிற பெண்கள் வீட்டிலிருக்கும் பெண்களைப் பார்த்துப் பொறாமைப் படுவதும், வீட்டிலிருப்பவர்கள் அலுவலகம் செல்கிறவர்களைப் பார்த்து எரிச்சல்படுவதும் இயற்கை. ஆனால் வேலைக்குப் போகிற பெண்களின் நிலையே பரிதாபகரமானது. அவர்கள் ஊதியம் வாங்குவது முதற் தேதி மட்டும் தான். மற்ற இருபத்தி யொன்பது நாட்களிலும் பாவம் அவர்கள் பிறருடைய அனுதாபத்துக்கு ஆளாக வேண்டிய நிலையில் தான் இருக்கிறார்கள்.

அரக்கப் பரக்க சமைத்து அடுக்கி விட்டு ஒரு வாய் சோறும் உண்ணநேரமில்லாமல் டென்ஷன் மிகுதியோடு ஓடோடி நெரிசல் தாளாத பஸ்ஸில் ஏறி, ஜன்னல் வழியாக பஸ்ஸை விட்டுக் குதிக்கலாமா? என்கிற ஆவேச உள்ளத்தை அமைதிப்படுத்திக் கொண்டே அலுவலகம் ஓடுகிறார்கள். தாமதமாகிய ஐந்து நிமிடத்திற்கும் மேலதிகாரியிடம் அர்ச்சனை வாங்கி உணர்வுகளை அடக்கி அவருக்குப் பணிந்து சமாதானம் சொல்ல வேண்டும். அங்கு உருவாகும் சிக்கல்களில் உழன்று அவற்றையயெல்லாம் அனுசரித்து விட்டு, மாலையில் பழையபடி ஆண்வர்க்கத்தினர் செய்யும் சில்மிஷங்களை சட்டை செய்யாது, பஸ்ஸின் திருவிழாக் கூட்ட நெரிசலில் வலிய வரவழைத்துக் கொள்கிற பொறுமையோடு திரும்புகிறாள். வெறித்து வரும் வழியில் பார்வைகளையும் பாராததுபோல் சமாளித்துத் திரும்ப வேண்டும்.

வேலைக்குப் போகாத பெண்களுக்கோ பல பிரச்சனைகள். தங்களுடைய பொருளாதார நெருக்கடியையே பெரிதாக எண்ணுவதால், தாங்கள் அனுபவிக்கின்ற சிறுசிறு சலுகைகளையும் பெரிதாக எண்ணத் தோன்றுவ



தில்லை. வேலைக்குப் போகின்றவர்கள் அடைகின்ற தொல்லைகளையும், தொந்தரவுகளையும் அனுதாபத்துடன் நினைத்துப் பார்க்கவும் மனம் ஒப்புவதில்லை.

இன்றைய உலகில் எந்தத் தரப்புப் பெண்களுக்கும் திருப்தியில்லை. போதுமென்ற மனம் இல்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், பொருளாதார நிலையிலே மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கின்ற எளிய மக்கள் எவ்வளவோ பரவாயில்லை. ஆனால் ஓரளவு நல்ல நிலையில் வாழுகின்ற பெண்கள் மனங்களிலோ பிறர் வாழப் பொறுக்காத பொறாமை, புகைச்சல்கள், பொல்லாப்புக் குமுறல்கள், மனவெதும்பல்கள், ஏக்கத்தின் இளையோட்டம், ஏமாற்றுச் சரங்கள் நிலைபெற ஆரம்பித்துள்ளன.

நம் மனம் செம்மைப்பட்ட மனமாக இருந்தால்....! நம் வாழ்க்கையும் நல்ல வாழ்க்கையாக அமையும். இது ஆன்மீக முடிவு. நம் மனம் நல்ல எண்ணங்களையே நினைக்க பழகினால் வாழ்க்கையின் சோர்வுகளும் தளைகளும் தாமாகக் கழன்று போய் வெற்றி வாய்ப்பு தாமாகவே வந்து குவியும். இது அறிவியல் முடிவு.

**பாத்திமா றைஹானா,**
**திருகோணமலை.**

# மண வாழ்க்கை மலர்ந்து மகிழ

மாமியார் தான் ஏற்கனவே ஒரு மருமகளாக இருந்ததை நினைவு கூர்ந்து தன்னுடைய முந்தைய, கசந்த அனுபவங்களை தன் அன்பு மகனின் இன்பத்துணைவிக்கு ஏற்படுத்தக் கூடாது என்பதை மனதில் கொண்டு, புதிதாக வந்துள்ள மணப்பெண்ணை தன் சொந்த மகள் போல் கருதியும், அவள் செய்யும் சிறிய குற்றங்கள் தவறுகளை பெரிது படுத்தாமல் அவளுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி ஆதரித்தும் வரவேண்டும்.

மருமகளும் தானும் ஒரு காலத்தில் மாமியாராக வரக்கூடியவள் என்பதையும், தனக்கு வாய்க்கும் மருமகளைக் கொடுமைப்படுத்தாது இருக்க வேண்டுமென்பதையும் மனதில் கொண்டு, தனது மாமனார் மாமியார் ஆகியோருக்கு பணி விடைகள் செய்து உத்தமியான மருமகளாக நடந்து, தன் கணவனுக்கு வீண் சிரமமும் கவலையும் அளிக்காத வகையில் ஒழுகி தான் புகுந்த வீடு அன்பும், மகிழ்ச்சியும் பெற்று விளங்கச்செயற்பட வேண்டும். கணவனும் தனக்கு வாழ்க்கைத் துணைவியாக, வேறிடத்திலிருந்து வந்திருக்கும் அந்தப் புதுப்பெண்ணின் மீது அன்பும் கனிவும் ஆதரவும் காட்டி, இதம் பதமாகப் புத்திமதிகள் கூறி, மாமியார்-மருமகள் பூசல்களில் கட்சி சேராமல் நடுநிலை, பொறுமை இவற்றைக் கடைப்பிடித்து மனைவி பெற்றோர் இவர்களின் மனக்கசப்புக்குள்ளாகமல் நடந்து கொள்ள வேண்டும். அன்பு, வார்த்தையைவிட ஆழ மானதாக இருக்கலாம். அதனால் அதை வெளியிட்டுக் காட்டித்தான் விளங்க வைக்க வேண்டும்.

எனவே எரிச்சல்களை மனதில் சேரவிடாதீர்கள். பிரச்சினைகள் கிளம்பும் போது அவை பற்றி பேசி முடிவுகாணுங்கள். உங்களால் பேசித் தீர்த்துக் கொள்ளமுடியாதவைகளை ஒரு நல்ல ஆலோசகரிடம் எடுத்துக் கூறி அவற்றிக்கு பரிகாரம் பெறுங்கள். அப்போது தான் இல்லற வாழக்கையில் இன்பம் கண்டு வெற்றி பெற முடியும். மண வாழ்க்கை மலர்ந்து மகிழ்ச்சி நிறைந்து மணங் கமழும்.

**தொகுப்பு: கே. எல். ஹில்மி,**
**சாய்ந்தமருது -13.**



# கனவுகளுக்கான பரிகாரங்கள்

பொதுவாக நல்ல பலன்களைச் செய்யும் கனவுகள் நல்ல கனவுகள் என்றும் கெட்ட பலன்களைச் செய்யும் கனவுகள் கெட்ட கனவுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நல்ல கனவுகளைக் காணும் போது மனம் சந்தோசமடைகிறது அதே நேரம் கெட்ட கனவினால் மனம் சஞ்சலப் படுகிறது.



**வே. தமையந்திரன்**

கெட்ட கனவுகளுக்குப் பரிகாரகாரமாக இறைவனை வழிபடலாம். ஒவ்வொரு வகைக் கனவுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை வழிபட வேண்டும்.

**காரியத்தடை:—**

நம் காரியங்கள் தடைப்படக் கனவு கண்டால், விக்கினங்களையும் விநாயக ருக்கு அர்ச்சனை செய்து வழிபடலாம் அல்லது விநாயக அகவல் படிக்கலாம்.

**பணநஷ்டம்:—**

கைப் பொருட்களை இழப்பதுபோல் கனவு கண்டால், மகாலக்ஷ்மியை வணங்கி கனகதார ஸ்தோத்திரத்தையும் உச்சரித்து வரலாம்.

**தெய்வங்கள்:—**

தெய்வங்களைக் கனவு கண்டாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை மட்டும் கனவு கண்டால் அத் தெய்வத்தை வழிபடவேண்டும்.

**இறந்தவர்கள்:—**

கனவில் இறந்தவர்களைக் கண்டால் ஏகாதசி விரதம் இருக்க வேண்டும். கோயிலில் நிவேதனம் செய்து அனைவருக்கும் கொடுக்கலாம்.

**பாம்பு:—**

பாம்பைக் கனவில் கண்டால் பாம்புப் புற்றுக்கு பால் வார்க்கலாம். அல்லது சிவ பெருமானை வணங்கலாம்.

**வியாதிகள்:—**

நோய்கள் வருவதற்கான கனவுகளைக் கண்டால் நவக்கிரக வழிபாடு செய்யவேண்டும் ஒவ்வொரு நோயும் ஒவ்வொரு கிரகத்தின் ஆதிக்கத்தால் ஏற்படுகிறது. அதனால் கிரக வழிபாட்டோடு நவக்கிரக ஸ்தோத்திரமும் உச்சரித்து வரலாம்.

**பயமுறுத்தும் கனவுகள்:—**

கனவில் பேய் பிசாசுகள் தோன்றிப் பயமுறுத்தினால், சிவபெருமானை வழிபட்டு வர அவை வருவது நிற்கும்.

**பலவீனம்:—**

உடல் பலவீனம் ஆவது போல் கனவு வந்தால், அனுமனை வழிபட்டு வரவேண்டும்.

**கவலை:—**

கவலையை ஏற்படுத்தும் கனவுகள் வந்தால் துர்க்கையை வழிபட்டு வரலாம்.

**பகைவர்:—**

பகைவரைக் கனவில் கண்டால் மகா விஷ்ணுவை வழிபடலாம்.

**கல்வி:—**

கல்வி தடைப்படுவதாக கனவு கண்டால் சரஸ்வதி தட்சணாமூர்த்தியை வழிபடலாம்.

- தொடரும.

# தமிழர்கள் வாழ்வு

தொடர் 22

-சத்தியா-



# ஏமாற்றப்பட்ட தமிழினம்

பிறெயின் செனவிரெத்தின பிறிதோரிடத்தில் வருத்தத்தோடு "சிறிலங்கா எனும் மொத்த நாட்டில், தமிழராக இருக்கும் பட்சத்தில் அவரைக் கொல்வது அனுமதிக்கப்படக் கூடியதே என்ற கருத்து பரவிவருவது வியப்புக்குரியதாக இருக்கிறது. தமிழர்கள் தெற்கு ஆபிரிக்காவின் கறுப்பு நீக்ரோக்கள் நடத்தப்படுவதைப் போல மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டுக் கேவலப்படுத் தப்படுகிறார்கள் என்றார்.

பிரெயின் செனவிரெத்தினவின் கருத்து மேலெழுந்தவாரியானதல்ல, சிங்களப் பேரினவாதிகளின் வேதப்புத்தகமான



மகாவம்சம் கூட இதனையே கூறுகிறது. போர் வெற்றியின் பின் இலட்சக்கணக்கான மனிதர் (தமிழர்)களைக் கொன்றதற்காக துயருற்றிருந்த துட்டகைமுனுவை தேற்றவந்த 5000புத்ததேரர்களும் "பௌத்த மதத்தை ஏற்றுப்பேணாத தமிழர்கள் விலங்குகளைவிடக் கேவலமானவரென்றும் அவர்களைக் கொல்வது கொலையாகாது" என்றும் கூறித் தேற்றுவதாக மகாவம்சம் கூறுகிறது. இலங்கையில் வனவிலங்குகளுக்குக் கூடச் சரணாலயம் உண்டு தமிழர்கள் மதிப்புடன் வாழ அதுகூடக் கிடையாது. என்று பேசினார் வை.கோபாலசாமி உடன்படிக்கையின் கீழான எந்தவொரு விடயமும் நிறைவேற் றப்படாத நிலையில் உயிரிழப்புக்கு ஆளானபோதும், விடுதலைப்புலிகளோ தமிழ் மக்களோ உணர்ச்சிவசப்பட்டு ஆயுதத்தைத் தூக்கவில்லை. இடைக்கால மாகாண சபை அமைப்பதிலுள்ள இழுத்தடிப்பை, சிங்களக் குடியேற்றத்தை, பொலிஸ், ஊர்காவற்படை ஆயுதந்தாங்கிய தமிழ்க் குழுக்களின் அட்டூழியத்தை இந்திய அரசுக்கு தெரிவித்து அதைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் அமைதி வழியான போராட்டத்தைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

விடுதலைப்புலி திலீபன் 15-09-87 இல் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் கோவில் முன்றலிலே சாகும்வரையான உண்ணா நோன்பை ஆரம்பித்தார். இந்திய, இலங்கை உடன்படிக்கையை உள்ளவாறு நிறைவேற்றும்படியும், விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு வழங்கிய உறுதி மொழியைச் செவ்வனே நிறைவேற் றும்படியும் கோரிக்கைவிடுத்து அவரது உண்ணா நோன்பு ஆரம்பமானது. மக்கள் வெள்ளம் அவர் முன்னே திரண்டது. பல்வேறு இடங்களில் அவரது கோரிக் கையை ஆதரித்து வலுச்சேர்க்கும் வகையில் உண்ணாநோன்புப்போர் விரிந்தது. முல்லையில் சிங்களப் படைக ளினால் சொந்த நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட கொக்கிளாய் மக்கள் மறியற் போர் செய்தனர். ஆனால் இந்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை.

மாறாக சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் டிக்சிற், திலீபனது போராட்டத்தை இந்தியாவுக்கு எதிரான போராட்டமாகக் கருதிக் கொண்டு அப்போராட்டத்தை இழிவு செய்வது போலப் பேசி தமிழர்களின் ஆத்மாவை மேலும் காயப்படுத்தினார் திலீபன் 26-09-1987இல் உயிர் துறந்தார். இந்தச் சாவு தமிழ் மக்களின் மனதிலே பெரும் அலையைத் தோற்றுவித்தது. இலங்கை இந்திய உடன்படிக்கையின் நேர்மையிலும் இந்திய அரசின் தலையீட்டிலுள்ள நேர்மையிலும், இந்திய அமைதிப்படைகளின் நேர்மை யிலும், தமிழ் மக்களுக்குப் பெருத்த ஐயம் நிலவியதால் விடுதலைப் புலிகளின் பின்னே மக்கள் அணிதிரண்டனர். உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடத் தொடங்கியதும் இந்திய அரசு, மீண்டும் புலிகளுடன் 1987.09.29இல் ஒரு ஒப்பந்தத்தினைச்செய்து கொண்டது. இதன்படி இடைக்கால மாகாணசபையை தாமதமின்றி அமைக்க ஒப்புக் கொண்டது. இந்த மாகாணசபையின் 12 உறுப்பினர் களில், முதல் அமைச்சர் உட்பட 7 பேரை விடுதலைப் புலிகளுக்கு வழங்க சம்மதித்தது.

எனினும் புலிகளின் பட்டியலில் முதலமைச்சர் பதவிகுறித்துரைக்கப்பட்ட பத்மநாதனின் பெயரை ஜே.ஆர்.ஜெய வர்த்தனா ஏற்க மறுத்தார். பத்மநாதன் அந்த வேளையிலே போராட்ட காரணங்களுக்காக குற்றஞ்சாட்டப் பட்டிருந்த பல தமிழர்களில் ஒருவராக இருந்தார். ஒப்பந்தத்தின் 2:11 பிரிவு வெறும் ஏட்டு எழுத்தாக இருந்தது அரசியற் கைதிகளை சிங்கள அரசு ஒப்பந்தத்தின்படி விடுதலை செய்யவில்லை, ஆனால் சிறை வழக்கு என்று காரணங்காட்டி பத்மநா தனின் பெயரை ஏற்க மறுத்தது. இந்தப் பத்மநாதன் பின்னர் சிங்கள ஆட்சியா ளரால் மட்டக்களப்பு அரச அதிபராகப் பணியமர்த்தப்பட்டு அண்மையில் ஓய்வு பெற்றார் என்பது கூர்ந்து நோக்க வேண்டிய ஒன்றாகும்.

இதேவேளை பொதுமன்னிப்பு வழங்கப் பட்டிருந்தும் கடற்புறாவிலே கடலில் போன விடுதலைப்புலி உறுப்பினர்களில் 17 பேரை சிறிலங்கா கடற்படை, அவர்கள் ஆயுந்தாங்கியிராத போது கைது செய்து பலாலி முகாமுக்குக் கொண்டு வந்து அடைத்து வைத்தது. விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களான புலேந்திரன், குமரப்பா போன்றோரும் இந்தப் 17 பேரில் அடங்குவர். விடுதலைப்புலிகள் இந்தியா விடம் முறையிட்டனர். ஆனால் இந்தியா எதுவும் பேசாது இருந்த நிலையில் உடன்படிக்கையை மீறி தமிழ்ப்புலிகளை கொழும்புக்கு கொண்டு செல்ல சிறிலங்கா அரசு முயற்சி செய்தது.

## இலங்கையில் வனவிலங்குகளுக்குக் கூடச் சரணாலயம் உண்டு தமிழர்கள் மதிப்புடன் வாழ அதுகூடக் கிடையாது.

தொடரும்.

# செந்தனல் வார இதழ் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான போட்டிகள்

செந்தனல் வார இதழ் தனது ஓராண்டு நிறைவையொட்டி பாடசாலை களுக்கிடையிலான பின்வரும் போட்டி நிகழ்வுகளை அகில இலங்கை ரீதியாக நடாத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் (பகுதி 2) ல் உள்ள விண் ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, பாட சாலை அதிபரின் சிபார்சுடன் 30/06/2004 ம் திகதிக்கு இடையில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங் களுடன் பங்கு பற்றும் மாணவர்கள் விபரத்தையும் இணைத்து அனுப்பி வைக்கவும். இறுதிப்போட்டிகள் ஆடி மாத நடுப்பகுதியில் நடைபெறும்.



## (பகுதி - 1) நிகழ்ச்சி நிரல்

- கவிதை (எழுதுதல்) - (பிரிவு - 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்
  (பிரிவு - 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்.
- சிறுகதை எழுதுதல் - (பிரிவு - 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்.
  (பிரிவு - 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்
- பேச்சு - (பிரிவு - 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்.
  (பிரிவு - 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்

ஒருவர் மட்டும்

(போட்டிக்கு முன் தலைப்புக்கள் தரப்பட்டு பதினைந்து நிமிடங்கள் தரப்படும்)

- அபிநயப்பாடல் - பத்து வயதிற்கு கீழ்பட்டோர் (6 -10பேர்) 10 நிமிடம்
- நாடகம் - திறந்த போட்டி
  1) இலக்கிய நாடகம் (25-30 நிமிடம்)
  2) சமூக நாடகம்
- நாட்டிய நாடகம் - திறந்த போட்டி (25 நிமிடம்)
- வில்லுப்பாட்டு - திறந்த போட்டி (30 நிமிடம்)
- குழு நடனம் (10பேர்) - திறந்த போட்டி (25 நிமிடம்)
- பரத நாட்டியம் (தனி) - திறந்த போட்டி (10 நிமிடம்)
- விவாதம் (6பேர்) - திறந்த போட்டி (30 நிமிடம்)

(போட்டிக்கு முன்பாக தலைப்புக்கள் தரப்பட்டு ஆயத்தம் செய்வதற்கு பதினைந்து நிமிடங்கள் தரப்படும்)

- கிராமியப் பாடல் (தனி) - (பிரிவு - 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்.
  (பிரிவு - 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்

ஒருவர் மட்டும்

(சுருதிப் பெட்டியுடன் கிராமிய வாத்தியக்கருவிகள் உபயோகிக்க வேண்டும்.)

- தனிப்பாடல் - பத்து வயதிற்குட்பட்டோர் (5 நிமிடம்)
  (பாரதியார், நவாலியூர்சோமசுந்தரம்பிள்ளை ஆகியோரின் பாடல்கள் மட்டும் பாடலாம்).
- கதை சொல்லுதல் - பத்து வயதிற்குட்பட்டோர் (3 நிமிடம்)

(முகபாவனையுடன் கூறுதல் வேண்டும், கையசைவுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.)

## (பகுதி - 2)

- பாடசாலையின் பெயர்: ________
- மாவட்டம்: ________
- வலயம்: ________
- பங்குபற்றும் போட்டிகள் விபரம்: ________
- தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ________
  (அதி/ ஆசி தொ.இலக்/ முகவரி) ________
- பொறுப்பாசிரியர், அதிபர், கையொப்பம்: ________

போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு நிகழ்வுகள் பற்றிய மேலதிக விபரம் அனுப்பி வைக்கப்படும்.

- போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு, பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
- செந்தணல் பத்திரிகையின் ஓராண்டு பூர்த்தி விழாவில் சிறந்த நிகழ்வுகள் அரங்கேற்றப்படும்.
- இறுதிப் போட்டிகள் கொழும்பில் பாடசாலை ஒன்றில் நடைபெறும்.

## சித்திரமும் சிறுகதையும்

# கன்னத்தில் முத்தமிட்டாள்

வரப்பு வாய்க்கால் இடையே ஆற்று நீர் "கொள கொள" என ஓடிக்கொண்டிருந்தது. வய ல்காடு பச்சைப் பசேல் என செழித்து இள ங்காலைக் காற்றில் சுந்தரமாகத் தலையசை த்து மகிழ்ந்து கொண்டிருக்க, வீட்டிற்குப் பின் புறமாக இருந்த வாழைத் தோட்டத்தில் இரு ந்து, புதுப் பெண் காஞ்சிபுரம்பட்டுடுத்தி நடந் துவரும் வேளை சரசர என எழும்பும் ஒலி போன்ற சத்தம் மனதிற்குள் இனிமை சேர் த்துக் கொண்டிருக்க, "தமயந்தியும்" அவள் தம்பி "கரனும்" அந்த அழகிய சூழல் நிறைந்த வீட்டின் கேற்றினைத் திறந்து மெதுவாக உள்ளே பாதங்களை வைக்கின்றனர்.

தமயந்தியின் மனதினுள் ரெயில் ஓடியது. "அத்தான் இன்று என்ன நிலையில் இருப்பாரோ, பிள்ளையாரப்பா" எனக் கன்னத்தில் போட்டுக் கொண்டே நடையைத் தொடர்ந் தாள். கரனின் கைகளைப் பிடித்துக்கொண்டே.

உள்ளே செல்லச் செல்ல சத்தம் செவிகளில் பெரியதாகியதோடு காட்சியும் கண்களில் அமிலத்தைக் கொட்டின.

ஒருகையில் கசிப்புப் போத்தல், மறு கையில் அக்காளின் கொண்டையைப் பிடித்து ஏதோ பலமாக கத்துகிறார்.

எதேட்சையாகத் தம்பியும் தங்கையும் வருவதைக் பார்த்த காந்தி அக்கா "சீ... விடுங்க, இந்தா பாருங்க, தங்கச்சியும் தம்பியும் வர்றாங்கள், இந்த நேரத்திலயாவது என்ன நிம்மதியா இருக்க விடுங்கோ" என தன் கணவனின் கையைத் தட்டிவிட, அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிடுகிறான். அவள் கன்னத்தைப் பொத்திக்கொண்டே வீட்டினுள் ஓட, அவள் சேலைத்தலைப்பினைப் பிடித்துக் கொண்டு அவளை, அவள் குடும்பத் தை ஒழுக்கத் தை என அண்டை அயல் எல்லாம் கேட்க்கக் அடித்து ஆர்ப் பாட்டம் பண்ணுகிறான்.

"அக்கா அப்ப நாங்க போயிற்றுவாறம். தம்பி வா" என அவள் எழும்புகிறாள்.

"இருங்கோ சமக்கிறன் சாப்பிட்டுவிட்டுச் போங்கோ. எதாவது வேணுமா தமயந்தி" என்றாள் அக்கா.

"இல்லக்கா நாங்க கிளம்புறம்" என வாய் தான் முணுமுணுத்தது. உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

"நாளைக்கு கடையில கடன் குடுக்கவேணும், பாட்டிக்கு மருந்து வாங்கவேணும், தனக்கும் தம்பிக்கும் பள்ளியில் சோதினக் காசு கட்டவேணும், ஏன் மத்தியானம் சமைக்கச் சாமான் கூட இல்லை. இத்தனைக்கும் மத்தியில் காலையில சாப்பிடக் கூட இல்லாம அக்காவிடம் கேட்டு ஏதாவது செய்வமெண்டுவந்தா இங்க இப்பிடிப் பிரச்சன இருக்கேக்க எப்பிடிக் கேக்கிறது"

அப்பா, அம்மா இறக்க, பாட்டியின்ர தயவில் இருக்கேக்க அக்கா கலியாணம் செய்தா எங்களையும் பாப்பா எண்டு, இருந்த ஒரு காணித்துண்டோட வீட்டையும் சீதனமாகக் குடுத்தும் கலியாணம் கட்டிவைச்சு பாட்டியும் நம்பிக்கையோட இருந்தா எங்களையும் அவா பார்ப்பா எண்டு. ஆனா இப்ப அடுத்த நாளிக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல ம்.." என பெருமூச்சு விட்டுக் கொண்டே தொண்டை வரைவந்த விக்கலை அடக்கி, விழியில் வழிந்த நீரை வழித்து விட்டபடியே தம்பியையும் அழைத்துக்கொண்டு வாசலைத் தாண்டிச் செல்கிறாள்.

அவர்கள் ஓசை கேற்றைத் தாண்டி மறையும் வரை பார்த்திருந்த காந்தி தன் கணவனின் கைகளைப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள். "அசத்திட்டீங்க நீங்க. பிரமாதமா நடிச்சிட்டீங்க, எங்க நீங்க சொதப்பிடுவீங்களோ எனப் பயந்திட்டன்" எனக்கூறி "பாவம் பசங்கள்" என இருவரும் கலகலவெனச் சிரித்தனர்.

குருவிச்சி
வவுனியா



## முள்ளில் விழுந்த பட்டுச் சேலை

பாலு வேலைக்கு போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அவளின் அழகிய மனைவி தேவி சாப்பாட்டுப் பார்சலை கணவனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னாள்.

அக்கம்பக்கத்தவர்கள் எல்லோரும் பெருநாளுக்கு புதுப்புது உடுப்பு வகைகள் எடுத்து விட்டார்கள். நானும் எடுக்க வேண்டும். உடனே பணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள் டார்லிங் என்று அன்புக் கணவனை வழி அனுப்பி வைத்தாள்.

அன்பு மனைவியின் ஆசையினை எப்படிச் சரி நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று சிந்தித்தவாறே வேலைத்தளத்தை அடைந்தான் பாலு.

ஐந்து மணிக்கு வந்து சேரவேண்டிய கணவன் ஆறு மணி தாண்டியும் வராததை யிட்டு கவலையுடன் அவன் வரும்வரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் தேவி. கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அவள் சென்று கதவைத்திறந்தாள். அங்கே தன் கணவனுடன் ஒன்றாக வேலை செய்யும் சசி நின்று கொண்டிருந்தான். பாலு ஏன் இன்னும் வந்து சேரவில்லை என்று பதட்டத்துடன் கேட்டாள் தேவி. அவசர வேலை ஒன்றின் காரணமாக பாலுவை மனேஜர் வெளியூருக்கு அனுப்பி இருக்கிறார். நாளைக்குத் தான் வீட்டுக்கு வருவான் என பாலு தன்னிடம் சொல்லி அனுப்பிய தாகவும் சசி சொன்னான். இதைக்கேட்ட தேவி க்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

கணவனின் நண்பன் என்பதாலும் கணவனின் தூது சொல்ல வந்த காரணத்தினாலும் தேவி சசியை வீட்டினுள் அழைத்து தேனீர் கொடுத்தாள். தேவியின் அழகில் மெய் மறந்தான் சசி வீட்டில் வேறு யாரும் இல்லை என் பதையும் அறி ந்து கொண்டு தேவியிடம் நெருங்கினான். தேவி இடம் கொடுக்கவில்லை பாலுவிடம் சொல்லுவேன் வெளியே போ என்றாள்.

சசி தன் சட்டைப் பையி லிருந் து இரண்டாயிரம் ரூபா நோட்டுக்களை எடு த்து தேவியிடம் கொடுத்தான். அவள் கண்களில் பட்டுச்சேலை மின்னியது. தாராளமாக சசிக்கு இடங் கொடுத்தாள்.

அன்றிரவை அவளுடன் கழித்த திருப்தி யுடன் விடியும் முன் சசி புறப்பட்டான். வெளியூர் சென்ற பாலு வேலைகளை முடித்துக் கொண்டு தன் இனிய மனைவிக்கு பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

ஏன் என் அன்பே இரவு தனிமையில் தவிக்க விட்டுவிட்டேன் என்று என்னுடன் கோபமா என்று செல்லமாக தேவியிடம் கேட்டான் பாலு. இல்லை என்பது போல தலையாட்டினாள் தேவி.

அதுசரி சசியிடம் நான் இரவுக்கு வரமாட்டேன் என்று சொல்லி அனுப்பியிருந்தேன். அத்துடன் ரூபா இரண்டாயிரம் அனுப்பியிருந்தேன் கொடுத்தானா என்று பாலு கேட்ட போது முள்ளில் விழுந்த பட்டுச் சேலையானது அவளின் இதயம்.

இரா.கோனேஸ்வரன்
கண்டி வீதி
நுவரெலியா.

## கதையல்ல நிஜம்

"பட்ட வெயில் படாதபாடுபடுத்துது. என்ன செய்ய மலையேறி கொழுந்தெடுத்தாத் தான் நம்ம வயிறு நெரயும் தேர்தல்ல ஓட்டுபோட்டு இத்தன காலத்துக்கு நமக்கு என்ன கெடச்சிச்சி" ....ம்....... ஒப்பிரானே என்று செண்பகம் மனதில் நினைத்தபடி வந்தாள்.

வேலை விட்டு, தேயிலை கொழுந்தை கொடுத்திட்டு லயத்துக்கு வந்த செண்பகம் வீட்டில இரவுச் சாப்பாட்டுக்கு ஒன்றும் இல்லாததால் சிங்கள நாட்டில் (கிராமம்) உள்ள காமினி முதலாளி கடைக்குச் செல்ல ஆயத்தமானாள். புத்தக காசுக்கு பொருட்கள் வாங்க. (மாத வருவாயில் செலுத்த).

முன்னைய மாதிரியில்லை சிங்கள கிராமங்கள் இப்போ இனவாதத்தால் மட்டுமல்ல கசிப்பு, கலாச்சார சீரழிவுகள் அங்குதான் அதிகம். செண் பகம் காமினி கடைக்கு போகும் வழியில் கசிப்பு போத்தலுடன் வந்த தர்மதாசவைக் கண்டு பயத்துடன் வேகமாய் நடக்க அவன் எட்டி செண்பகத்தின் சேலையைப் பிடித்து இழுத்தான் "அடியே தமுல நாயே இங்கவா" "ஐயோ தர்மதாச அண்ண என்ன விட்டுடுங்க கும்பிடுகிறேன்" என்றாள்.

"அடியே தமுல நாயே இது எங்கட நாடு........ நாங்க நெனச்சா எதுவும் செய்வோம் வாடி நாயே என்னோட ..... தமுலச்சி எல்லாம் எங்களோட அடிமை நாயே....." என்ன திமுரு இருந்தா சிங்கள நாட்டுல தமுல நாய்க எடம் கேப்பிங்க....." என்று செண்பகத்தை இழுத்தவாறு அவளை மானபங்கப்படுத்தினான் தர்மதாச. அவள் கதறியும் யாரும் உதவிக்கு வரவில்லை.......

வெளியில யாருக்கும் தெரியாது இப்படித் தான் எத்தனையோ தோட்டத்து (மலையக) செண்பகங்கள் சிங்கள காடையர் கையில் சீரழிகின்றனர். கசிப்பு, கஞ்சா போதைப் பொருட்களுக்கு அரசியல் வாதிகள் துணை.

செண்பகம் ஒப்பாரி வைத்தாள் "ஐயோ கடவுளே எங்கட நெல மாறாதா? எங்களுக்கு பேச ஒழுங்கான தமுல் அரசியல்வாதிகள் வரமாட்டாங்களா? இந்த தேர்தலோட தமுலங்க படுற கஸ்டத்த பாருங்க.......... மாரி ஆத்தா.... எனக்கு நடந்தது இனி யாருக்கும் நடக்காம காப்பாத்து.... இனி ஏ......... வாழ்க்கை நாசமாபோச்சு................ எப்பதான் எங்க தோட்டகாட்டான் நெல மாறும்.

எஸ்.பி.பாலமுருகன்




# பேய் பங்களா

மாரிகால மழை இருட்டு வானமே பிளந்து விட்டாற்போல் மழை விடாமற் கொட்டிக் கொண்டிருக்க அதற்குப் போட்டியாய் காற்றும் மரங்களை வீழ்த்தத் தொடங்கியிருந்தது.

தெருநாய்கள் ஒன்றையொன்று தொடர்ந்து ஊளையிட்டு, அந்த இரவைப் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தன. பூட்டிய அந்த அறையினுள் சூழ்ந்திருந்த நிசப்தமும் அதற்கு வலுவூட்டிக் கொண்டிருந்தது. ஏற்றி வைக்கப்பட்டிருந்த சிறு ஒளியில் நிர்வாணமாய் நின்றிருந்த ஐவருக்கும் மத்தியில் சுருண்டு போய் வலியால் முனங்கிக் கொண்டிருந்த அந்த மனிதனை, மீண்டும் வற்புறுத்தினான் அவர்களின் தலைவனான ஜோன், "டேய் சிங்கா எழும்பு இன்றைக்கு உன்னுடைய முறை நீதான் போக வேணும் உன்னை விடமாட்டேன். இதுக்குச் சம்மதிக் வில்லையென்றால் உனக்கு முடிவு அந்த ஆலமரம் தான்" என்று அடிக்குரலில் சீறினான்.

திடீரென்று ஆந்தை யொன்று பயங்கரமாய் அலறியது. செடிகள் முறிபடும் சத்தமும் சலசலப்பும் மிக மெதுவாய்க் கேட்டது. ஜேமிஸின் கண்களில் சந்தோசம் மின்னலடிக்க "இண்டைக்கு நல்ல வேட்டைதான் நிறையப் பேர் வருகிறார்கள் போல் இருக்கு இந்த சனியன் எழும்பமாட்டான் போல் இருக்கு சிங்கா இது கடைசித்தடவை கெதியாக வெளிக்கிடு ஆட்கள் வந்திட்டினம் இல்லையென்றால் தெரியும் தானே" மீண்டும் வற்புறுத்தினான்.

அதேநேரம் மணியண்ண மெதுவாக் கதையுங்கோ அதில்தான் அந்தா தெரியுது அந்த பேய் பங்களா அதுக்குள்ளதான் அவன் போனதைக் கண்டனான்.

"ஓமடா ரவி பாவம் இந்த ஊர்ச் சனங்கள் பேய் பிசாசு என்று வேட்டையாடுவதையும் பறிகொடுக்கிறது. அதுவுமல்லாமல் உயிரையும் விட்டுடுதுகள். உனக்குப் பக்கத்திலே நிற்கிற உந்த ஆலமரத்தில் தான் ஒரு முண்டம் நிர்வாணமா தொங்கினதாம். "என்ன காளியண்ண சரிதானே" ஓம் தம்பி அதுவும் ஒரு இளம் பெடியன் ஆரண்டு தெரியேல்ல. இதக்கண்டுவிட்டுத்தான் சிவமக்காட புருஷன் பேச்சு மூச்சில்லாமக் கிடக்கிறார். இதோட மூன்று பேரை இதில தொங்கியிருக்கிறார்கள்.

குஞ்சுக்குளம் ஊடாக பெரிய முறிப்பு போகும் பாதையில் வைத்து நடக்கும் கொள்ளையடித்தலுக்கும் அந்தக் காட்டுக்குள் வேட்டைக்குச் செல்வோரைப் பயமுறுத்தும் கறுப்பு நிர்வாண உருவங்களுக்கும் ஆலமரத்திற் தொங்கும் முண்டங்களுக்கும் அந்த பங்காளாவில் கேட்கும் அலறலுக்கும் இடையில் ஏதோ ஒரு தொடர்பு இருக்க வேண்டும் மென்று ஊகித்து பக்கத்து ஊரில் இருந்து இருவரை அழைத்துக் கொண்டு கொஞ்சம் துணிவுள்ள காளியும், ரெஜியும் அதைக் கண்டுபிடிக்க புறப்பட்டு வந்து தக்க சமயத்தைப் பார்த்து பலத்த ஆயத்தங் களுடன் காத்திருந்தனர்.

இடையே வெட்டிய மின்னலில் ரெஜியின் மணிக்கூடு நேரம் இரண்டைக்காட்டி, பார்த்ததும் நேரம் சரி சத்தம் போடாமல் வாங்கோ பின் பக்கத்தாலா போவம்.

எவ்வளவு சொல்லியும் ஏழும்பாதவனை என்ன செய்வது? மணி இரண்டையும் தாண்டப்போகுது யாரைப் போகச் சொல்வது என்று மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தவன், பக்கத்தில் நின்றவனின் கால் சுரண்டலில் திகைத்து நிமிர்ந்தபோது என்ன செய்வது என்று தோன்றாமல் ஸ்தம்பித்து நின்றான்.

நீட்டிய கட்டுத்துவக்குகளோடு நின்றிருந்த நால்வரையும் தாண்டித் தப்பிப்போக வழி தெரியாது ஐவரும் சிலையாகிப் போயினர். இவ்வளவு காலமும் ஊர் மக்களை பேய் பங்களா என்ற பெயரில் ஏமாற்றி கொள்ளையடித்துக்கொண்டிருந்தவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதால் தலைகுனிந்து நின்றனர்.

அங்கிருந்த கறுப்புத்துணியால் அவர்களைப் போர்க்கச் சொல்லி காவல் துறையினிடம் ஒப்படைப்பதற்காக துப்பாக்கி முனையில் நடத்திச் சென்றனர். ரவி குழுவினர் மழை ஓய்ந்துவிட்டதாலும், இனி ஒரு முண்டத்தை சுமக்கத்தேவையில்லை என்பதாலும் அந்த ஆலமரம் ஒருமுறை சிலிர்த்து நிமிர்ந்தது.

ஷங்ரமதி
கொழும்பு - 03

# மணற் திட்டுக்குள் சிவன் சிலை

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா நூக்குவத்தை தோட்ட இளைஞர் சிலர் மஷாகலை நீர்த்தேக்கத்தில் தங்களது மீன் பிடி வள்ளங்களில், நீர்த்தேக்கத்தில் உள்ள மணற் திட்டுகளுக்கு சென்று அங்கு



மணல் அகழ்வு மேற்கொண்ட வேளையில், சிவன் சிலை ஒன்று தென்பட, அச்சிலையும் சிலையுடன் இரண்டு கருங்கற்களால் செய்யப்பட்ட கம்பங்களும் எடுத்துக் கொண்டு சென்று அதே தோட்ட ஆலயத்தில் வைத்து பூஜை மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறு கிடைக்கப் பெற்ற சிவலிங்கச் சிலை 18 அங்குல உயரமும், 36 அங்குல சுற்றளவும் கொண்டதாகும். மேலும் இரண்டு கம்பங்களும், சுமார் 36 அங்குல உயரமும் 12 அங்குல சுற்றளவும் கொண்டதாகும்.

மேலும் இது சம்பந்தமாக முன்னோர்களிடம் விசாரித்தபோது அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

இந்த சிவன் ஆலயம் சுமார் 1871ம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்டதாகவும் இவ்வாலயம் இந்தியாவில் உள்ள கேரளப் பகுதி மக்கள், அக்காலப் பகுதியில் சிவனொளிபாத மலையில் உள்ள சிவனுடைய பாதத்தை தரிசிக்க வந்து போயுள்ளதாகவும், அதற்கான சான்றுகள் உள்ளன எனவும் கூறப்படுகிறது. சிவனொளிபாத மலையில் ஒரு பிள்ளையார் ஆலயம் அமைத்தும், அதில் வழிப்பிள்ளையார் தங்கும் மடம் அமைத்தும் உள்ளனர்.

லக்சபான தோட்ட காவடிப் பாலமருகே கடைத்தொகுதி ஒன்றின் பக்கமாக ஒரு சிறிய அளவில் இந்த சிவன் ஆலயத்தை அமைத்து வழிபட்டதாக முன்னோர் கூறுகின்றனர். ஆனால் அவர்களுக்குப் பின் அந்த சிவன் ஆலயத்தை குஞ்சு ஆசாரி பார்த்து அதற்கான பூஜைகளும் செய்ததாகவும் அவரின் மறைவுக்குப் பின் அவரது மகன் கூன் ஆசாரியின் பொறுப்பில் அவர் அவ்வாலயத்தைப் பார்த்து அதற்கான பூஜைகளும் மேற்கொண்டதாகவும் அவரது கால கட்டத்தில் அந்த ஆலயத்தில் ஒரு விநாயகர் சிலையும் வைத்து, கல்யாண மண்டபமும் அமைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

1969ம் ஆண்டு மவுசாகலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டதும் நீர்த்தேக்கத்தில் அவர் இந்த ஆலயத்தை பற்றி சிந்திக்காமல் விட்டுவிட்டார். நீர்மட்டம் திடீரென உயரவே ஆலயத்தை கைவிட்ட நிலையில் மஸ்கெலியா மக்கள் புதிய நகருக்கு வந்துவிட்டனர். அதன் பின் அந்த கூன் ஆசாரியும் இறந்துவிட்டார். அவர் மறைவுக்கு பின் அவரது மகன் மாட சாமி ஆசாரி இந்த ஆலயத்தை பற்றி சிந்திக்காமல் விட்டுவிட்டார்.



தற்போது கடும் வெப்பம் காரணமாக கடந்த மாதம் நீர் வற்றியதால், முன்னர் குறிப்பிட்ட நூக்குவத்தை தோட்ட மக்கள் அந்த சிலையையும் இரண்டு கம்பங்களையும் மட்டுமே எடுத்து பூஜை செய்து வருகின்றனர்.

ஆனால் அந்த இடத்தில் இன்னும் பலவிதமான ஆலய பொருட்கள் விநாயகர் சிலை உள்ளதாகவும் நமது முன்னோர் கூறுகின்றனர். இவ்வாறாக கிடைக்கப் பெற்ற இந்த சிவன் சிலையை தம்முடைய சிலை என கருதாமல், சிவனொளிபாதமலை அடிவாரத்தில் கடந்த காலத்தில் ஆலயம் அமைக்க, அதே தோட்ட நிர்வாக இடம் ஒதுக்கி தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த இடத்தில் சிவன் ஆலயம் ஒன்றை அமைத்து, வருடாவருடம் சிவனொளி பாத மலைக்கு 6 மாதகாலம் யாத்திரிகள் வருவதால் சிவன் ஆலயத்தை தரிசித்து, சிவன் பாதத்தை மலை ஏறி தரிசித்து செல்ல வாய்ப்பாக அமைக்க, இந்து சமய கலாச்சார அமைச்சு வசதி செய்து கொடுக்க முன் வரவேண்டும் என கூட்டாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இவ்வாலயத்தை எமது இலங்கை வாழ் மக்கள் மட்டும் அல்லாது வெளிநாட்டு மக்களும் வந்து தரிசித்து செல்ல இந்த சிவனொளிபாத மலை அடிவாரத்தில் அமைத்தால், வாய்ப்பாக அமையும். மேலும் வருடா வருடம் சிவன் கிரியைகளை மலையகப் பகுதியில் வெகு சிறப்பாக நடாத்த இந்த ஆலயம் பெரும் உறுதுணையாக இருப்பதுடன், மலையகப் பகுதி எங்குமே ஒரு மாபெரும் சிவன் ஆலயம் இல்லாத குறையையும் இது நீக்கும். அதற்கான ஏற்பாட்டை எமது இந்து சமய இந்து கலாச்சார அமைச்சர் மேற்கொண்டு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

## உங்கள் ராசி பலன்கள்

ஜோதிட சக்ரவர்த்தி

தொடர்ச்சி....



### துலாம்

**ஏ.எம். ராஜகோபாலன்**

**13.04.2004 முதல் 18.08. 2004 வரை (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)**

துலா ராசியினருக்கு அனுகூலத்தைச் செய்யும்படி கிரக நிலைகள் சஞ்சரிக்கின்றன. குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிலவும். பெண் அல்லது பிள்ளைக்குத் திருமணம் தடைப்பட்டிருந்தால், இப்போது வரன் அமையும் சுபச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் விவாகம், நிச்சயதார்த்தம், சீமந்தம், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், குழந்தைக்கு ஆண்டு நிறைவு போன்ற சுப நிகழ்ச்சிகள் நிகழும். சிலர் சொந்த வீடு வாங்கி, புதுமனை புகுவார்கள். வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும். பொருளாதாரம் சீரபடும். உடல் நலன் திருப்திகரமாக உள்ளது. ஒரு சிலருக்கு எதிர்பாராத பொருள் வரவும் உண்டு. பூர்வ புண்ணிய ஸ்தானத்தை குருபகவான் பார்ப்பதால், தீர்த்த, ஸ்தல யாத்திரை ஒன்று கிடைக்கும்.

உத்தியோகத்துறையினருக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படுவது உறுதி. அரசாங்க உத்தியோகத்திற்கு முயற்சி செய்பவர்களுக்கு நிச்சயம் வெற்றி உண்டு. பதவி உயர்வும், சிறு ஊதிய உயர்வும் கிடைக்கும். வெளிநாடுகளில் வேலை பார்த்துவரும் இந்த ராசியினருக்கு முன்னேற்றமான கால கட்டமிது. தொழிலதிபர்களுக்கு மிகவும் அனுகூலமான பலன்கள் ஏற்படும். உயரதிகாரிகள் நல்ல ஆதரவு தருவார்கள். தொழிலை விஸ்தரிப்பதற்கும், புதிய கிளைகள் தொடங்குவதற்கும் தக்க நேரமிது. வங்கிகள், மற்ற தனியார் நிதி நிறுவனங்கள் ஆகியவை உங்களுக்கு ஆதரவும், உதவியும் உடனடியாக அளிக்கும்.

ஏற்றுமதி, இறக்குமதித் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குச் சிறந்த யோக காலம் இது. வியாபாரம் மேலும் அபிவிருத்தி அடையும், கொடுக்கல் வாங்கலில் திருப்தி ஏற்படும். புதிய வியாபாரத்துறைகளில் புதிதாக முதலீடு செய்வதென்றால் இப்போது செய்யலாம். கைக்கு வரவேண்டிய பாக்கிகளை இப்போது வசூல் செய்துகொள்ளலாம். பாதியில் நின்று போன படத்தயாரிப்புகளை இப்போது முடித்து வெளிக்கொணர முடியும்.

விவசாயத் துறையினருக்குத் தண்ணீர் வசதி கிடைத்துப் பயிர் செழிக்கும். தானியங்கள் விளைச்சல் திருப்திகரமாக இருக்கும். வருமானத்திற்கும் குறைவிராது. சிலருக்குப் புதிய கால்நடைகள் வாங்கும் யோகமும் அமைந்துள்ளது.

**19.08.2004 முதல்**
**13.04.2005 வரை**

குருபகவானால் இதுவரை நீங்கள் அடைந்துவந்த அபார நன்மைகள் இப்போது சிறிது குறையும். முக்கியக் குடும்ப விஷயங்களைக் கவனித்துக்கொள்பவர் குருபகவான். அவர் விரயத்தில் நின்றதால் குடும்பத்தில் வீண் செலவுகள் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகச் செலவுகள் ஏற்படும். அலைச்சல் மிகும். திருமண சம்பந்தமான முயற்சிகள் தடங்கலும், பணவிரயமும் ஏற்பட்டு, அதன் பின்பு வரன் அமையும். வயிற்றுவலி அஜீரணம், பலவீனம், சோர்வு, காய்ச்சல் போன்ற சிறுசிறு உடல் உபாதைகளால் சோர்வு உண்டாகும். சில தருணங்களில் மருத்துவச் செலவுகளும் ஏற்படும். அதனைச் சமாளிப்பதில் சிரமம் இராது. சப்தம ஸ்தானத்தில் உலவும் ராகுவினால் இதுவரை மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருக்கும். இனி மனைவிக்கு உடல் உபாதைகள் குறைவதோடு உடல்நலனும் அபிவிருத்தி அடையும், மருத்துவச் செலவுகள் இராது. நிதி நிலைமை ஒரே சீராக இருக்கும். அவ்வப்போது எதிர்பாராத பல செலவுகள் ஏற்பட்டாலும் பற்றாக்குறைக்கு வாய்ப்பில்லை. ஒரு சிலருக்கு அன்னிய தேசப் பிரயாணம் ஒன்றும், அதனால் அலைச்சலும் ஏற்படும்.

உத்தியோகத் துறையினருக்குப் பொறுப்புக்களும், வேலைச்சுமையும் அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது. மேலதிகாரிகளுடன் சிறு கருத்து வேற்றுமை ஏற்பட்டு, பின்பு நல்லபடி முடியும். வேலைக்காக முயற்சி செய்யும் அன்பர்களுக்கு வேலை கிடைப்பதில் தாமதமேற்படும்.

**அறிவுரை:-**

ஆகஸ்ட் 18-ம் தேதிவரை இந்த ராசி அன்பர்களுக்கு உற்சாகமான காலம் இருப்பினும் ஆகஸ்ட் 19, 2004லிருந்து எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். ஆதலால் திட்டமிட்டு செலவு செய்வதும் அவசியமற்ற செலவுகளைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமாகும். செய்யும் தொழிலில் அதிக உழைப்பு இருக்கும். அதனால் உடலும், உள்ளமும் சோர்வுறும். இத்தகைய தருணங்களில் மனதைத் தைரியமாக வைத்துக்கொள்வதும், பணிகளில் ஊக்கம் குறைவதைத் தவிர்த்தலும் அவசியம்.

**பரிகாரம்:-**

காலை, மாலை இரு வேளைகளிலும் ஸ்ரீ லட்சிமிநரசிம்மர் ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்து வரவும். தினமும் ஒரு சர்க்கமாவது (அத்தியாயம்) சுந்தரகாண்டம் பாராயணம் செய்து வாருங்கள். பிரதோஷ விரதம் இருப்பதும் நல்லது.

இராசி பலன் அடுத்த இதழில்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## அரச ஊடகங்கள்.....

அதன்பிறகு நுகேகொடையில் இராணுவப் புலனாய்வுப் பாதுகாப்பில் ஒரு வீட்டில் இருந்தோம். அங்கு கருணாவின் மனைவியும் பிள்ளைகளும் எங்களோடு இருந்தனர். ஒருநாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் என்னோடு தொடர்பு கொண்டு, மீண்டும் புலிகள் இயக்கத்தில் இணையுமாறு கேட்டிருந்தார. அவ்வேளை மிகுந்த பாதுகாப்பு போடப்பட்டிருந்ததால் வெளியேறமுடியவில்லை.

புலி உறுப்பினர் என்னோடு தொடர்பு கொண்டதை கருணாவின் மனைவி அவதானித்து அவரிடம் கூறியதையடுத்து கருணா "யாரிடம் தொடர்பினை ஏற்படுத்தினாய்" என்ற போது எமது போராளிகள் எம்மை அழைக்கின்றார்கள் என்றேன். ஆனால் அவர் என்னிடமிருந்த கையடக்கத் தொலைபேசியைப் பறித்துவிட்டார்.

அந்த வேளையில் பலர் சாதாரண உடையில் வந்து போவார்கள். அவர்களில் டக்ளஸ் தேவானாந்தாவும் இருந்தார். அவருடன் கருணா அடிக்கடி பேச்சு நடத்தினார். தனியாக ஒரு அரசியல் கட்சியை ஆரம்பித்த போது, டக்ளஸ் உடன் இணைந்து கட்சியை அமைக்கப்போகிறீர்களா எனக் கேட்டதற்கு அவ்வாறில்லை தனியான ஒரு கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாக கூறினார்.

அவரது நிலமை வித்தியாசமாகி தனது குடும்ப சுயநலனுக்காகவே செயற்படுவதைக் கண்ணுற்ற நாங்கள் எங்கள் குடும்பத்தினரிடம் எங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டோம். அதற்கு உங்களுக்கு தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். இந்தியாவிற்கோ அல்லது வெளிநாட்டிற்கோ அனுப்பிவைப்போம் என்று கூறினார்.

அவரும் வெளிநாடு செல்லப்போவதை அறிந்த நாம், எமது உறவினரோடு தொடர்பு கொண்டு மட்டக்களப்பிற்கு வந்தோம். நாங்கள் தொடர்ந்து இயங்குவதா அல்லது வீட்டிற்குச் செல்வதா என்பதை தமிழீழ விடுதலைப்புலிகளே தீர்மானிக்க வேண்டும் என்று நிலாவினி கூறினார்.

ஏனைய மூன்று பெண்போராளிகளும் நாங்கள் அனைவரும் இணைந்து எமது தேசியத் தலைமையினையும் எமது போராட்டத்தினையும் தொடர்ந்து மதித்து நடக்க இணைந்து செயற்படுவோம் என்று கூறினார்கள்.

கருணாவை கொழும்புக்கு அழைத்து வந்ததாக அஸிசாஹிர் ஒப்புக் கொள்கிறார்:

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, கருணாவை கொழும்புக்கு அழைத்து வந்ததை ஒப்புக் கொண்டதாக பி.பி.சி தமிழோசை தெரிவித்துள்ளது. மேலும் அவர் மோதலைத் தவிர்ப்பதற்காக கருணாவை சமரசம் செய்து நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு வழிசெய்யுமாறு விடுதலைப்புலிகளே என்னிடம் கேட்டனர் என்றும் அதன் நிமித்தம் சிறுபராய நண்பரான கருணா ஏப்ரல் 12ம் திகதி வெளிநாடு செல்ல போக்குவரத்துக்கு உதவி கேட்டதாகவும், அதன்பின் அவருக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் கூறினார்.

**புலிகளைப் பலவீனப்படுத்த கருணா ஒரு ஆயுதமா?**

கருணாவைப் பயன்படுத்த விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி அரசாங்கமும் முயலுமானால் அது தவறான நடவடிக்கையாகும். அத்தோடு அது கண்டிக்கத்தக்க விடயமாகும் என்று முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மாநாட்டில் "கருணாவைப் பயன்படுத்தி தம்மைப் பலவீனப்படுத்த அராங்கம் முயல்வதாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனரே" எனக் கேட்டபோது அதற்குப் பதிலிளிக்கும் வகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கருணா விவகாரம் புலிகளின் உள்விவகாரமாகும். ஆனால் அரசாங்கம் அதைப் பயன்படுத்துவது தவறானதாகும். அத்தோடு முஸ்லீம் காங்கிரஸ் பலவீனமடைந்தால் நாங்களும் அவர்களுடன் பேசமாட்டோம். அரசு பலவீனம் அடைந்தால் புலிகள் அரசுடன் பேசமாட்டார்கள். அதேபோல் புலிகள் பலவீனமடைந்தால் அரசாங்கமும் அவர்களுடன் பேசாது.

இந்த நிலையில் இவ்வாறான தவறான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பது கண்டிக்கத்தக்கது. தமிழ் பேசியதை பலவீனப்படுத்தும் முயற்சிகளை நாம் கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக நாடு அதற்கான விசையை கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. ஆகவே இத்தகைய நிலையை எவரும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.




தொகுப்பு:- ஜெயம்

# யுவராஜ்சிங் ஜோடி சேருவது தொடர்பாக செவாக் அதிருப்தி

இந்த வருட இறுதியில் இந்தியாவுடன் டெஸ்ட் தொடரில் விளையாட அவுஸ்தி ரேலியா, தென் ஆபிரிக்கா ஆகிய அணிகள்



இந்தியா வரவுள்ளன. இரண்டுமே சவாலான அணிகள் தான் ஆனாலும் இம்முறை அவுஸ் திரேலியா அணியை வென்றேதீரவேண்டும் என்ற முடிவில் தீவிரமான பயிற்சியில் இந்திய அணி இறங்கியுள்ளது.

இந்தப் போட்டியின் போது ஆரம்பத் துடுப் பாட்டத்தில் அதிக நேரம் நின்று விளை யாடும் வீரரே என்னுடன் ஆட்டத்தில் ஜோடி சேர வேண்டும் என்று இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் செவாக் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். நடைபெற இருக்கும் போட்டியில் இவருக்கு ஜோடியாக இணைந்து விளையாட அணியின் வீரர் கங்குலி யுவராஜ் சிங்கை அனுப்புவதாக முடிவு செய்துள்ளார். இந்த முடிவுக்கு மறைமுகமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் செவாக். இதுபற்றி மேலும் செவாக் தெரிவிக்கையில் "இந்தப் போட்டிக ளில் என்னுடன் இணைந்து ஆரம்ப ஆட்டக் காரராக யுவராஜ்சிங் களமிறங்கப் போவதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஆனால் அவருடன் சேர்ந்து நிறைய ஓட்ட ங்களை குவிக்க முடியுமா என்ற கேள்வி என க்கு இப்பொழுதே எழுந்துள்ளது.

ஏனெனில் நான் அடித்து விளையாடும் வீரர். எவ்வளவு நேரம் களத்தில் இருப்பேன் என்றே தெரியாது. ஒரு ஓவர் முடிவிலும் ஆட் டமிழக்கலாம். 100 ஓவர் முடிவு வரையிலும் கூட விளையாட முடியும் எனவே என்னுடன் விளையாடும் வீரர் நின்று விளையாடக் கூடிய வராக இருக்க வேண்டும்" என்றார்.

செவாக்கின் இந்தப் பகிரங்கமான பேட்டி யினால் இந்திய அணியில் குழப்பம் ஏற்பட் டுள்ளது. ஏனெனில் அணித் தலைவரின் முடி வை நேருக்கு நேராக விமர்சனம் செய்து ள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது. இது தொடர்பாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் பாலி உம்ரிகர் கருத்து தெரிவிக்கையில் "ஆரம்பஆட்டக்காரராக யார் இறங்க வேண்டும் என்பதை முடிவு செய்ய செவாக் யார்? அது அணித் தலைவ ரின் தனிப்பட்ட முடிவு. அதில் தலையிட இவரிற்கு உரிமை இல்லை என்கிறார்.

"ஆரம்ப ஆட்டக்காரராக யார் இருக்க வேண்டும் என்பதை அணித்தலைவர் தான் தீர்மானிக்க வேண்டும். அப்படியே மாற்றுக் கருத்து இருந்தாலும் அதை தனிப்பட்ட முறையிலே அணித்தலைவரிடம் தெரிவித் திருக்கலாம்" என்கிறார். மற்றுமொரு முன் னாள் தலைவர் நாரி கான்ட்ராக்கடர்.

# முரளி கட்டாயம் அவுஸ்திரேலியா வரவேண்டும்

## அவரை நான் வரவேற்கிறேன்.

நமது நாட்டின் உலக சாதனை மன்னன் என்று வர்ணிக்கப்படும் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் அவுஸ்திரேலியப் பயணத்தின் முடிவு தொடர்பாகப் பலரும் பல வண்ணம் தங்களது கருத்துக்களையும், விமர்சனங்களையும் தெரிவித்த வண்ணம் இரு க்கின்றார்கள்.

முரளி பந்தை எறிகின்றார் என்ற குற்றச் சாட்டை அவுஸ்திரேலியப்பிரதமர் ஜோன் ஹோவர்ட் சாடியிருந்தார். அது தொடர்பான விசாரணைகள் இடம் பெற்றதும், வைத்தியப் பரிசோதனையின் பின்னர் பிறப்பிலேயே முர ளியின் கையில் வளைவு இருப்பதாகவும் தக வல்கள் வெளிவந்தமை யாவரும் அறிந்ததே. ஆனாலும் இதைப் பொருட்படுத்தாமல் ஒரு நாட்டின் பிரதமரே நாகரீகமற்ற முறையில் விமர்சனங்களை செய்த பின் அந்த மண்ணில் விளை யாடுவதற்கு எந்த வொரு தன்மான முள்ள விளையா ட்டு வீரனும் செல்ல மாட்டான். அந்த வகையில் தான் நமது நாட்டு வீரன் முரளியும் தனது முடிவை பறைசாற் றியுள்ளார்.



கடந்த காலங்களில் முரளி தனக்குச் செய் யப்பட்ட அவமதிப்புக்களைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவிற்கு விளையாடச் செல்ல மாட்டேன் எனத் தெரிவித்திருந்தார் பின்னர் விளையாடினார் இதைப்போல் இம்முறையும் நடக்கும் என பலரும் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். ஆனால் இம்முறை முரளி தனது முடிவில் மாற்றத்தைக் காட்டியுள்ளார். இவரு டைய இந்த முடிவை இலங்கை கிரிக்கெட் சபையும் புரிந்து கொண்டு வீரரின் உணர்வுக ளிற் மதிப்புக் கொடுத்து ஏற்றுக் கொண்டு ள்ளது. இவருடைய இந்த முடிவை அடுத்து அவுஸ்திரேலியப் பிரதமர். "முரளி பற்றி நான் தவறுதலாக எதுவும் சொல்லவில்லை. அவர் இங்கு விளையாட வரவேண்டும் அவரை நான் வரவேற்கிறேன்" என்கிறார்.

ஆனாலும் முரளியின் இந்த முடிவுக்கு காரணம் இவரின் குற்றச்சாட்டே என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அத் தோடு முரளியின் முடிவு பற்றி அவுஸ்திரே லியா சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோன் விமர்சனம் செய்திருக்கிறார். இதுபற்றி அவர் கூறுகையில் "விமர்சனங்களையெல்லாம் முரளி பொருட்படுத்தவே கூடாது. இதைச் சந்திக்கும் பக்குவமும் முரளிக்கு இல்லை. நம்மைப் பற்றி விமர்சனங்கள் வரத்தான் செய் யும். அதையெல்லாம் கண்டு கொள்ளக் கூடாது. மனதை மாற்றிக் கொண்டு முரளி இங்கு விளையாடுவதற்கு வரவேண்டும் என்கிறார் ஷோன் வோர்ன்.

## முரளிதரனிற்கு மணமகள் தேவை

w.w.w..tamil matrimony.com என்ற இணையத்தளத்தில். சர்வதேச கிரிக்கெட் வீரர் முரளிதரன் தனக்கு தேவையான வாழ்க்கைத் துணையை தேடுகிறார். ஆர்வ முடையவர்கள் விண்ணப்பிக்கமுடியும். அவர்கள் எந்த சாதிகளை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற விபரங்கள் வெளி யிடப்பட்டுள்ளன.

ஆனால் இதுபற்றி முரளி கூறுகையில் தான் இணையத்தளத்தில் பெண்தேட வில்லையென்றும் இவ் விளம்பரம் வேடிக் கையாக யாராவது செய்திருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

# கொரியாவில் நடைபெறவுள்ள போட்டியில் கலந்துகொள்ள மன்.புனி. சவேரியர் அணி தெரிவு

எதிர்வரும் ஜூலை மாதம் 20ம் திகதி தொ டக்கம் 27ம் திகதி வரை கொரிய நாட்டின் சோல் எனும் இடத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச சமாதான விளையாட்டு விழாவில் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணியும் தெரி வு செய்யப்பட்டுள்ளது.

அகில இலங்கை ரீதியாக உதைபந்தாட் டத்தில் சம்பியன் பட்டத்தை மேற்படி பாட சாலை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்த க்கதாகும்.மன்னார் மாவட்டத்திலிருந்து வெளி நாடு ஒன்றுக்கு போட்டியில் பங்குபற்றச் செல் வது இதுவே முதல் தடவையாகும்.

மேற்படி போட்டியில் கலந்து கொள்ளப் பாடசாலை அதிபரும் இரண்டு பயிற்றுவிப் பாளரும் உட்பட 18 பேர் செல்லவுள்ளனர்.

பயணச் சீட்டுச் செலவைத் தவிர உணவு, உடை, தங்குமிடவசதி உட்பட பல வசதிகளை சர்வதேச சமாதான விளையாட்டுக்குழு பொறுப்பேற்பதாகவும் பயணச்சீட்டை பங்கு பற்றச் செல்பவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரியாவிற்கு சென்றுவர ஒருவருக்கு 56,000/= ரூபா செலவாகும் எனவும் இத் தொகையை வறிய மாணவர்களால் செலுத்த முடியாததை இட்டு அதை நலன்விரும்பிகளி டமிருந்து எதிர்பார்ப்பதாக பாடசாலை அதி பர் அருட் சகோதரர் ஸ்ரெனிஸ்லஸ் குறிப்பிட் டுள்ளார். மேலும் இப்போட்டிகளுக்குச் செல்ல இருப்பவர்களுக்கான அனுமதியை வட கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரு டாக பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாகவும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆபேல் றெவல் தெரி வித்தார்.

A.S.M.ஜாவித்




# பதில்கள்

**? அன்பின் திரிசூலியாரே!இன்று நிலவிக் கொண்டிருக்கும் அமைதி நிலை நீடிக் குமா?**

**யாழினி, வாரிக்குட்டியூர், வவனியா.**

! நம்புவோம், நிலைக்கும்........... நிலைக்க வேண்டும், நிலைக்க வைப்போம்.

**? அன்பின் திரிசூலியாரே! காதல் எப்போது சுகமானது?**

றமணன், வவுனியா

! எப்போதாவது மட்டும் சுகமாய் இரு ப்பது என்றால் அது காதலில்லை, எப் போதுமே சுகமானது தான் காதல்.

**? அன்பின் திரிசூலியாரே! கடமையை மறந்து செயல்படுபவர்கள் பற்றி?**

ரஜன், கொழும்பு - 06.

! பிழைகளைத் தட்டித்திருத்த, நியாயமான உரிமையைக் கேட்க, உரிமை இல்லாத வர்கள.

**? அன்பின் திரிசூலியாரே! கவிஞர்கள் பெண்களைத்தான் அதிகமாகப் புகழ்ந்தும் வர்ணித்தும் பாடுகிறார்களே?**

குமுதினி, சொய்சாபுர.

! குறைகளை மறைக்க, அல்லது இல்லாத குறைந்த அழகை மெருகுபடுத்த ஆடை அணிகலன்களை அணிவதில்லையா, என்ன குமுதினி புரிந்திருக்கும் என நினைக்கிறேன்.

**? அன்பின் திரிசூலியாரே! பெண்ணின் மனதை எவ்வாறு அறிந்து கொள்ள முடி யும்?**

செந்தில்குமரன், குருமன்காடு, வவுனியா.

! செந்தில் நீர் ஒரு பெண்ணாக மாறி னால் நிச்சயம் முடியும்

**? அன்பின் திரிசூலியாரே! இங்கே சில அரச அதிகாரிகள் வீட்டில் கிழக்கு கிராமப்புற, மலையக சிறுமிகளை வேலைக்கு அமர்த்தியுள்ளார்களே இதற்கு என்ன செய்யலாம்?**

ர.திலீபன், மட்டக்களப்பு.

! தமது சிறு பிள்ளைகளை வேலைக்கு விடத் தயாராகப் பெற்றோர் இருந்தால், வேலைக்கு அமர்த்துபவர்களைக் குற் றம் கூறமுடியாது.

**? கோல்பேசில் அகோர வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் மெய்மறந்து போயிருக்கிறார்களே...**

P. றாகுலன், கொழும்பு -6.

! குடைகளைப் பிடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் றாகுலன் இனிமேல் கவனித்துப் பாரும்

**? கருணாவை பகடைக்காயாக வைத்து அரசு புலிகளை வென்றிடுமா?**

S. சுமன், வாழைச்சேனை.

! இந்த மூன்று தசாப்த காலத்தில் எத்தனை கருணாக்களைக் கண்டிருப்பார்கள் விடுதலைப் புலிகள் இவை எல்லாம் அவர்களுக்குத் தூசிப்படை மாதிரி.

**? அன்பின் திரிசூலியாரே! நான் ரஜனி ரசிகை ரஜனியின் புதிய படமான ஜக்கு பாய் படத்தில் எப்படி வசனம் பேசுவார் தெரியுமா?**

தீபராணி, முள்ளியவளை.

! இதை எல்லாம் யோசித்து வீணாக்க எனது டைமை வேஸ்ராக்க விரும்ப



வில்லை ஆனால் படித்த ஞாபகத்தில் சிலவற்றை

* பாலிலே தண்ணீர் கலக்கலாம்... தண்ணீரிலே பொலிட்டிக்ஸ் கலக்கக் கூடாது.
* இந்த ஜக்குபாய்.. பாய்ல உட்கார்ந்தா பனிமலை,
  பாயை விட்டெழுந்தா எரிமலை
* எனக்குத் தண்ணியில கண்டம் ஆனா கண்டங்கள் எல்லாமே தண்ணியில தான் இருக்கு.

**உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரிசூலியின் பதில்கள்**

**த.பெ.இல: 1601, கொழும்பு -03.**

# தித்திக்கும் திரை



# வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்



கமலின் காமடி படங்களான சதிலீலாவதி, காதலாகாதலா, தெனாலி, அவ்வை சண்முகி, பஞ்சதந்திரம் ஆகிய படங்களை ரசிகர்கள் எளிதில் மறந்துவிட முடியாது ஏனென்றால் கமல் ரசிகர்களின் வயிற்றை அவ்வப்போது பதம் பார்க்கின்றமாதிரி ரிலாக்ஸாக அமைப்பார். அந்த வரிசையில் தான் ஒகஸ்ட் மாதமளவில் வெளிவர இருக்கின்றது "வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்" இந்தியில் "முன்னாபாய் எம்.பி.பி.எஸ்" ஆக வெளிவந்து சக்கை போடு போட்டது.



இப்படத்திற்கு திரைக்கதை எழுதி இயக்கப் போகின்றார் சரண், கிரேஸியின் வசனத்தில் நகைச்சுவை உணர்வு மிக்க கமலும், பிரபுவும் இணைந்து நடிக்கின்றனர். கமலிற்கு ஜோடியாக சினேகா நடிக்கின்றார். பிரகாஷ்ராஜ் சுவாரஸ்யமான கதாபாத்திரத்தில் இந்தப் படத்தில் நடிக்கிறார். கமலின் அப்பாவாக இயக்குனர் சிகரம் பாலசந்தர் நடிக்கவிருப்பதாகவும் தகவல்.

# சத்தமா கண்டு கொள்ளவே மாட்டேன்.

## காயத்திரி ஜெயராம்



நடிக, நடிகர்களைப் பற்றி கிசுகிசுக்கள், விமர்சனங்கள் வெளி-வருவதுவழமையே. ஆனால் இதை சிலர் பொருட்படுத்தவேமாட்டார்கள்.

தான் உண்டு தன் வேலை உண்டு என்று போய்க்கொண்டே இருப்பார்கள். இதைப் பற்றி காயத்திரி ஜெயராம் என்ன சொல்கிறார் தெரியுமா

"ஆரம்பத்தில் என்னைப் பற்றி ஒரு சின்னச் செய்தி வந்தாலும் அதைப் படிச்சு வெட்டி ஒரு பைல் போட்டு ஒட்டி வைத்திருப்பேன். கிட்டத்தட்ட ஐந்தாறு பைல்கள் பெரிய சைஸ்ல இருக்கும் தூக்க முடியாது. ஆனால் போகப்போக எல்லா செய்திகளையும் கட்பண்ணி ஒட்ட முடிவதில்லை. சிலவை மிஸ் பண்ணிவிடும். ஆனாலும் செய்தியைப் படிக்கணும் என்ற ஆர்வம் இருக்கும். நிச்சயம் படிப்பேன் பாராட்டி எழுதியிருந்தால் சந்தோசப்படுவேன். திட்டி எழுதிஇருந்தால் திரும்பத்தியேட்டருக்குப் போய் பார்ப்பேன். எழுதியது சரியா இந்தால் என்னை திருத்திக்க முயற்சிப்பேன் ஆனால் கிசுகிசுக்கள் வந்தால் சுத்தமா கண்டுக்கவே மாட்டேன். என்கிறார்.

பார்த்திபனின்"கிறுக்கல்கள்" என்ற புத்தகத்தின் முதற் பதிப்பான 10,000 பிரதிகளும் உடனே விற்றுத் தீர்ந்துவிட்டன. 2001ல் பிரதியிடப்பட்ட 2வது பதிப்பின் 10,000 புத்தகங்களும் விற்றுத்தீர்ந்துவிட்டதாம். முன்றாவது பதிப்பு தயாராகிக் கொண்டிருக்கின்றதாம். இதற்கிடையில் "ச்சும்மா" என்ற மற்றொரு புத்தகத்தின் வேலையும் முடிவடைந்து விட்டதாம். 'இதையடுத்து இரு மடங்கு சந்தோசத்தில் உள்ளார் பார்த்திபன்.




# பேரழகர்கள்

ஏவி.எம்.தயாரித்த பேரழகன் படத்தை அடுத்து நமது ஹீரோக்கள் எல்லாம் நாங்களும் பேரழகன் ஆகினால் எப்படி இருக்கும் என கனவுகண்டிருப்பார்கள் போல.

நன்றி Dசினிமா







# தவறு செய்வது இயற்கையே!



"முன்னர் சினிமா தான் எல்லாம் என்று நான் நினைக்கவில்லை ஏதோ விளையாட்டாக செய்து கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது விழுந்திருக்கும் இந்த இடைவெளிதான் பெரிய அனுபவத்தை தந்திருக்கின்றது. இனிமேல் சினிமா தான் எனக்கு எல்லாம். வேற எதுவுமே இல்லை. எல்லாத்தையுமே தூக்கிப் போட்டுட்டேன் இனிமேல் நீங்கள் பார்க்கப்போவது புதுக் கார்த்திக். மனிதன் தவறுவது இயற்கைதானே" என்று மனம் உருகுகின்றார் கார்த்திக். கார்த்திக்கின் அடுத்த படமான "மனதில்" படத்தில் வில்லன் பாத்திரத்தையும் கார்த்திக்தான் செய்கின்றாராம்.

# 30 வருஷம் கழிச்சுப் பார்த்தாலும் நாம நடிச்ச படம் வித்தியாசமா தெரியணும்

## —சரத்குமார்.



நாட்டாமை, சூரியவம்சம், மாயி, சிம்மராசி, திவான் போன்ற வித்தியாசமான வேடங்களில் நான் நடித்த படங்கள் எல்லாமே ஜெயிச்சிருக்கின்றது. அண்மையில் வெளிவந்த கம்பீரம் படத்திலேயும் வித்தியாசமான பொலிஸ் வேடத்தில் நடித்திருந்தேன். அதே போல வெளிவரவிருக்கின்ற "ஏய்" திரைப் படமும் அவ்வாறு தான் அதிலும் வித்தியாசம் காட்டி நடித்திருக்கின்றேன். இனிமேல் வித்தியாசமான பாத்திரங்களில் தான் அதிக கவனம் செலுத்தப் போகின்றேன். ஏன்னா இன்னும் 30 வருஷம் கழிச்சுப் பார்த்தாலும் நாம நடிச்ச படம் வித்தியாசமாகத் தெரியணும். அதற்காக நான் என்ன வேணுமென்றாலும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்கிறார் சரத்குமார்.





# ஜோதிகாவிற்கு கோலிவுட் போட்ட தடா

இன்று சினிமா உலகிலே பரபரப்பாக பேசப்படும் செய்தி நடிகை ஜோதிகாவைப்பற்றியது தான் ஒரு புறம் ஜோவிற்கு சினிமா போட்ட தடை மறுபுறம் இவரிற்கு ஏற்பட்டுள்ள உடல் நிலைகள் கோளாறுதான். மன்மதன் படப்பிடிப்பின் போது அடிக்கடி களைப்படைந்த ஜோதிகா சில நாட்கள் சூட்டிங் வராமல் இருந்துள்ளார். இவருடைய இந்த நிலைக்குக் காரணம் அவரின் மனக்குழப்பம் தானாம். இவருக்கு நெருங்கிய சிநேகிதருடன் ஏற்பட்ட பிரச்சனையினால் இவரின் நண்பர் இவரைக் கண்டுகொள்ளாமல் நடந்து கொள்கிறாராம். இதன் காரணமாக இவரிற்கு மனக்குழப்பம் ஏற்பட்டு இறுதியில் அடிக்கடி காய்ச்சல் ஏற்பட்டதாம். இதனால் இவர் அடிக்கடி வைத்தியரை அணுகியும் நிற்கவில்லை. இறுதியில் வைத்திய பரிசோதனையின் போது "டைபாய்டு" காய்ச்சல் ஏற்பட்டதாக தகவல்கள் வந்துள்ளன. இதன் போது கூட இவருடைய நண்பர் வந்து பார்க்கவில்லையாம். இதனால் இவர் மும்பாய் சென்று ஓய்வெடுத்து வருகிறாராம். இதைவிட இவரிற்கு படத் தயாரிப்பாளர் சங்கம் ஒரு "தடா" போட்டுள்ளதாம் அதாவது இவரை புதிய படங்களில் ஒப்பந்தம் செய்வதானால் தயாரிப்பாளர் சங்கத்தை கலந்து ஆலோசிக்கவும் என்று ஒரு அறிக்கையை இந்தச் சங்கம் வெளியிட்டுள்ளது.

இவர் "மணிகண்டா" படத்தின் படப்பிடிப்பிற்கு சரியாக வராமல் இழுத்தடித்த வண்ணம் இருந்ததால் தயாரிப்பாளரிற்கு பல இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளதாம். இது பற்றி புகார் எழுதி தயாரிப்பாளர் சங்கத்தில் கொடுத்து விட்டாராம் தயாரிப்பாளர். நடந்ததை விசாரிக்க தயாரிப்பாளர் சங்கத்திற்கு ஜோதிகா அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் இவர் குறித்த தினத்தில் அங்கு ஆஜராகவில்லை இதனாலேயே இவரிற்கு இந்த தடா.

ரஜனியின் அடுத்த படம் "ஜக்குபாய்", கமலின் அடுத்தபடம் "வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்" ஆகிய படங்களில் இவரை ஹீரோயினாகப் போட இருந்தனராம். ஆனால் இவரிற்கு தயாரிப்பாளர் சங்கம் விடுத்த அறிக்கையை அடுத்து அந்த இரண்டு படங்களிற்கும் வேறு கதாநாயகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதனால் ஜோதிகா ஆடிப்போயுள்ளார்.










எங்கட
வெள்ளையினப்
புறாக்கள
மனிதப்
பயங்கரவாதிகள்
கழுத்த நெரிச்சு
கொண்டிட்டுப்
பறக்க
விடுறாங்களாம்






கடந்த 12ம் திகதி 'விசப் கல்லூரி' மாணவர்கள் பெரஹர மாவத்தையில் நடாத்திய விசப் வோக்கில் கலந்து கொண்டவர்களையே படங்களிற் காணலாம்.



## முன்பள்ளி கலைவிழா

அண்மையில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் முன்பள்ளி மாணவர்களுக்கான கலைவிழா இடம் பெற்றது. இதன்போது முன்பள்ளி மாணவர்களின் நடன நிகழ்வினை படத்தில் காண்கிறீர்கள்.

*படம் + தகவல்: ச. மயூரன்*



ALCATEL

Sensational French Models



One Touch 320 | One Touch 332 Colour Screen | One Touch 535 Colour Screen/ MMS | One Touch 735 Camera Phone / Colour Screen

எல்லா வகையான கையடக்கத் தொலைபேசிகளுக்கும் இரண்டு வருட உத்தரவாதம்
விற்பனைக்குப் பிந்திய சேவைகளும் நவீன தொழில் நுட்பத்தினுடனான திருத்தியமைத்தலும்
24 மணி நேரத்தினுள் செய்துகொடுக்கப்படும்.

ARCADE THE ONE STOP PHONE SHOP

Dialog GSM
TheFuture.Today.
Phone : 2678678

ALCATEL
ONE STOP SHOP

கொழும்பு Tel: 0777 592592 கண்டி Tel: 0777 904878
நுகேகொட Tel: 0777 363666 காலி Tel: 0777 707474
யாழ்ப்பாணம் Tel: 0777 266005 திருகோணமலை Tel: 0777 584348

285, R.A. De Mel Mawatha, Colombo 3. Tel: 2370370

THE PHONE SHOP
455, Union Place,
Colombo 2.
Tel: 2679679

மாத்தறை Tel :041-2222479 வெல்லட்ட Tel :047 2243635 பதுளை Tel :056 2222296 மத்துகம Tel :034 2247332
சிலாபம் Tel :032 2222106 நிக்கவரட்டிய Tel : 037 2260200 தெகிவளை Tel : 0777 340549 மகரகம Tel :2851777
ஜாஎல Tel :2233757 நீர்கொழும்பு Tel :031 2232883 தம்புள்ள Tel :0777 843464 கொட்டாவ Tel :0777 309726
புத்தளம் Tel :032 5290044 ரன்ன Tel :0777 565595 கொகுவல Tel :0777 636956 நாவல Tel :2607437 ஹபரண Tel : 066 2270054
எலிப்பிட்டிய Tel :091 2291634 அம்பாந்தோட்டை Tel :047 2225319 பேருவளை Tel :034 2276699 களுத்துறை Tel :034 222238

## மழலைகள் விளையாட்டு விழா

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் போறூட் நிறுவனத்தால் நடாத்தப்படும் முன்பள்ளிகளை வவுனியா முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் மேற்பார்வை செய்து வருகின்றது. கரம்பை மடு, முகத்தான்குளம், அழகாபுரி, மயில் முட்டையிட்ட குளம், இரண்டாம்பாம், கிறுஸ்தவகுளம், சின்னத்தம்பனை ஆகிய கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளுக்கான விளையாட்டு விழாவில் மழலைகளின் வினோத உடை நிகழ்வினைக் காணலாம்.

*படம் + தகவல்: ச. மயூரன்*

## சித்திரமும் சிறுகதையும்



### நீங்களும் எழுதலாம்

இப்படத்திற்குப் பொருத்தமான குட்டிக்கதையினை 250 சொற்களுக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புங்கள் சிறந்த கதை பிரசுரிக்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி: த.பெ.இல. 1601, கொழும்பு

இப்பத்திரிகை பெரஹெரமாவத்த, கொழும்பு-03ல் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினற்காக இல. 315, ஜம்பட்டாவீதி, கொழும்பு 13ல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிட்டு 26-06-2004 அன்று வெளியிடப்பட்டது.